Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

வீஷானி நகை மாளிகை
மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு

இல. 187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 02 செவ்வாய்க்கிழமை (18.09.2012) பக்கங்கள் 20 ஓசை – 352


அரசு அடி பணியாது 04

30 வீத உணவு விரையம்

05


முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தியில் 13

கரப்பான் பூச்சிப் படை

10


ஊழலுக்கு எதிராகத் தொடரும்... 17

# புதிய முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்

## அரசின் வசமாகியது கிழக்கின் ஆட்சி



(நமது நிருபர்)

கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக போட்டியிட்டு ,வெற்றியீட்டிய நஜீப் அப்துல் மஜீத் நியமிக்கப்படவிருப்பதாக அரசாங்க உயர்மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முஸ்லிம் பங்காளிக் கட்சிகளான தேசிய காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகியனவும், ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரசும் இதற்கு ஆதரவு வழங்கியிருப்பதாகவும் அரச உயர்மட்டத்தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த மூன்று மாகாண சபைகளுக்குமான முதலமைச்சர் நியமனம் தொடர்பாக முடிவெடுப்பதற்கென நியமிக்கப்பட்ட அரசாங்க உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுக்கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ, சுற்றாடல்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா, பெற்றோலிய வளங்கள் அமைச்சரும், ஐ.ம.சு.மு. செயலாளருமான சுசில் பிறேமஜயந்த, இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும அடங்கிய கட்சியின் உயர்மட்டக் குழுவினரே, நீண்ட உரையாடல்களின் பின்னர் இந்த முடிவை எடுத்திருப்பதாக அறியவந்துள்ளது.

கிழக்கு மாகாண சபையை அதன் ஆட்சிக்காலம் நிறைவடைவதற்கு ஒரு வருடத்துக்கு முன்பாகவே கலைத்தபோது, முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானே மீண்டும் முதலமைச்சராக நியமிக்கப்படுவார் என்ற உறுதிமொழி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், இம்முறை தேர்தலில் ஐ.ம.சு.மு. சார்பாக தமிழர் தரப்பில் பிள்ளையான் மட்டுமே வெற்றியீட்டினார். முஸ்லிம்கள் தரப்பில் 7 பேர் வெற்றியீட்டியுள்ளனர்.

இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியும், கடந்த தட்வை கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலும் முஸ்லிம்கள் பலர் வெற்றியீட்டியபோதும், பிள்ளையான் முதலமைச்சராக நியமிக்கப்படுவதற்கு முஸ்லிம்கள் தரப்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டதால்,

19 ஆம் பக்கம் பார்க்க

## முற்றவெளியில் முதியவர் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முற்றவெளியில் அமைந்திருக்கும் தனியார் பஸ் தரிப்பிடப் பகுதியில் இறந்த நிலையில் ஆண் ஒருவரது சடலம் யாழ்.பொலிஸாரினால் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இறந்ததாகக் கருதப்படும் இந்தச் சடலம் பூனைப்பிட்டி உடப்புத்தளத்தைச் சேர்ந்த அலோசியஸ் மீராண்டா (வயது-55) என்பவரது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இறந்தவரது உடைமையில் இருந்த கையடக்கத்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழில் ஐ.நா. அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூன்று அதிகாரிகள் அடங்கிய குழு நேற்று யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டதுடன், பல அரச அதிகாரிகளையும் சந்தித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தின் ஆசிய பசுபிக் மத்திய கிழக்கு, வடஅமெரிக்கப் பிரிவுகளுக்குப் பொறுப்பான ஹன்னி மெகாலி மற்றும் சட்டத்தின் ஆட்சி ஜனநாயகர் தெரிவுகளுக்கான மனித உரிமைகள் அதிகாரி ஒஸ்கார் சோலர்ஸ் மற்றும் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவரும் இக்குழுவில் அடங்கியிருந்தனர்.

நேற்றுக் காலை விமானம் மூலம் வந்த அதிகாரிகள்குழு காலை 10.00 மணிக்கு ஆடிய பாதம் வீதியிலுள்ள வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் செயலாளர் ஆர்.விஜயலட்சுமியைச் சந்தித்தனர். இச்சந்திப்பில் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்,

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் போனோர் விசாரணை யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்கு யாழ். மாவட்டத்தில் இருந்து காணாமல் போனவர்கள் குறித்து 2006ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டு விசாரணை இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.காரியாலயத்தில் நேற்றுக் காலை ஆரம்பமாகியது.

நேற்றைய தினம் யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னாகம் பகுதிகளைச் சேர்ந்த காணாமல் போனவர்கள் குறித்த முறைப்பாட்டு விசாரணை நடைபெற்றது.

இந்த விசாரணைகளுக்கு அந்தப் பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த பெருமளவு மக்கள் சமூகமளித்திருந்ததாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.காரியாலய இணைப்பாளர் வி.கனகராஜ் தெரிவித்தார்.

இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் கொழும்பில் இருந்து யாழ். வந்திருப்பதாகவும் அவர் குறிப்

19 ஆம் பக்கம் பார்க்க

## கஞ்சா கடத்திய படைவீரர் கைது

(கொழும்பு)

நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான ஆறு கிலோக் கிராம் கஞ்சாவுடன் நபர் ஒருவரை நேற்று அதிகாலை கைது செய்ததாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர். மடம்பெல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நிலத்தின் கீழ் பங்கரொன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இந்தக் கஞ்சாப் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் இராணுவத்திலிருந்து விலகிய முன்னாள் வீரராவார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய இராணுவ இரகசியம்; கொழும்புக்கு கடத்தியவர் கைது

(கொழும்பு)

இந்திய இராணுவ ரகசியங்கள் அடங்கிய சீ.டி.யுடன் (இறுவட்டு) இலங்கைக்கு தப்பிவர முயன்றதாகக் கூறப்படும் நபரொருவர் திருச்சி விமான நிலையத்தில் வைத்து இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


தஞ்சாவூர்மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெளிநாட்டுப் பொருட்களை வாங்கி விற்பனை செய்து வரும் மேற்படி நபரிடம் இந்திய இராணுவ இரகசியங்கள் அடங்கிய சீ.டி இருப்பதாக க்யூ பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததை அடுத்தே அவர் விமான நிலையத்தில் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## தாகசாந்தி மையம் கால்நடைகளுக்காக



(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சாரப்பிட்டி நன்னீர்க் கிணற்றுக்கு அருகாமையில் கால்நடைகளுக்கான குடிநீர்த் தொட்டிகள் நெடுந்தீவு பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ளது.

35 ஆயிரம் ரூபா

19 ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகம் வாசிக்கு அதிர்ஷ்டம்

அபிவிருத்தி லொத்தர் சபையினரின் சுப்பர்போல் டிக்கட்டுக்கு சுன்னாகம் வாசிக்கு 10 இலட்சம் ரூபா பணப்பரிசில் கிடைத்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற குலுக்கலில் இவருக்கு இந்தப் பரிசு கிடைத்துள்ளது.

குறித்த நபர் டிக்கட்டை கே.கே.எஸ். வீதி சுன்னாகத்தில் பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள சுவீப் விற்பனைநிலைய முகவர் வ.நடராசா என்பவரிடம் பெற்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (39)

# முறைகேடான மீன்பிடி; மானியம் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

இழுவைப்படகு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 3 இழுவைப் படகுகளுக்கான எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டிருப்பதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இழுவைப்படகு தொழில் மற்றும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் கடற்கலங்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் மானியம் இரத்துச் செய்யப்படும் என்று கடற்றொழில் நீரியல் வள அமைச்சு ஏற்கனவே தெரிவித்திருந்தது.

இருந்தும் வல்வெட்டித்துறைப் பகுதியில் இருந்து சில படகுகள் இவ்வாறு இழுவைத் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதாகத் தகவல் கிடைத்திருந்ததாகவும், அதனடிப்படையில் அந்தப் பகுதி கடற்றொழில் பரிசோதகரின் உறுதிப்படுத்தலின் கீழ் இந்த 3 இழுவைப் படகுகளுக்குமான எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டிருப்பதாக திணைக்களத்தின் யாழ். உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கை வரும் காலத்திலும் இறுக்கமாக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் வல்வெட்டித்துறை மற்றும் குருநகர் பகுதிகளில் இருந்தே இழுவைப்படகு தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)



'வேலணை ஒரு வரலாற்று அறிமுகம்' நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை காலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, நல்லை ஆதீனக் குரு முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நூலாசிரியர் ச.மாணிக்கவாசகர் ஆகியோர் தமிழ்த்தாய் வணக்கம் செலுத் துவதையும், திருமலை மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியனுக்கு யாழ். அரச அதிபர் சிறப்புப் பிரதி வழங்குவதையும், விழாவில் கலந்துகொண்டோரையும் காணலாம். (படங்கள் - ஆர்.ராஜகுமார்)

## இலக்கியக் குவியம் மாதாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

இலக்கியக் குவியத்தின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 2.30 மணியளவில் ESOFT computer training centre இல் இலக்கிய குவியத் தலைவர் வேலணையூர் தாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது விரைவில் வெளிவரவிருக்கும் "நாம்" கவிதை இதழ் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் "உன்னிடம் எப்படி சொலவேன்...?" என்ற தலைப்பில் சிறப்புக் கவியரங்கும் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு வருகைதந்த பல மூத்த இலக்கியவாதிகள் இலக்கியக் குவியத்தின் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்த தமது ஆலோசனைகளை வழங்கியிருந்தனர். இந்நிகழ்வின்போது பல புதிய உறுப்பினர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

## வெறிச்சோடியது கடற்கரை



(யாழ்ப்பாணம்)

உல்லாசப் பயணிகளை மிகவும் கவர்ந்த சாட்டி கடற்கரையோரத்தில் சடலங்கள் அடுத்தடுத்துக் கரையொதுங்கியமை அப்பகுதிக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் மனங்களில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு வரும் உல்லாசப் பயணிகள் வேலணை சாட்டி, கசூரினா போன்ற கடற்கரைகளுக்கு சென்று கடலில் குளித்து உல்லாசமாகச் செல்கின்றனர். அவ்வாறு வருகின்ற உல்லாசப் பயணிகள் தற்போது சாட்டி கடற்கரைக்கு செல்வதற்கு பின்நிற்கின்றனர்.

சடலங்கள் துர்நாற்றத்துடன் மிக பழுதடைந்த நிலையில் கரையொதுங்கியமையே இதற்குக் காரணமாகும் என்று சுற்றுலா சென்ற பலரும் தெரிவித்தனர். சாட்டிக்குச் சென்றாலும் குளிக்கமுடியாது. குளிக்க அருவருப்பாக இருப்பதாகப் பலரும் தெரிவித்தனர்.

அதேவேளை இச்சடலங்கள் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்வோரில் கடலில் விழுந்து மரணமான, காணாமற்போனவர்களின் சடலங்களாக இருக்கலாம் என்றும் தெரிவித்தனர்.

சுனாமிக்குப் பின்னர் இவ்வாறு கடலில் குளிக்க பின்நின்ற உல்லாசப் பயணிகள் சிறிது காலத்தின் பின்னர் கடற்கரையோரங்களில் உல்லாசமாகக் குளித்து வருகின்றனர் என்பது எல்லோரும் அறிந்ததே. (இ)

## குடிசை வீடு தீக்கிரை வறிய குடும்பம் நிர்க்கதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவரின் வீடு தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி காலை 11.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

குறித்த வீட்டிலிருந்த குடும்பஸ்தரின் மனைவி சமைத்துக் கொண்டிருந்த போதே நெருப்புப் பொறி பட்டு வீடு தீப்பற்றி எரிந்ததாகவும் மனைவிக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தீக்கிரையான குறித்த வீடு இருபக்கம் தகரத்தில் அடைக்கப்பட்ட நிலையில் மிகுதிப் பகுதி பனை ஓலையால் வேயப்பட்டிருந்ததாகவும் பலமான காற்று வீசியதாலேயே தீ பரவியதாகவும் இதில் வாழ்வாதார உதவியாகப் பெற்ற பொருட்கள் மற்றும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மரம் அரியும் இயந்திரம், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம், உடுபுடவைகள் என்பனவும் முற்றாக அழிந்து நாசமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் எவ்வித உதவிகளும் இன்றி மிகவும் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

## ஏல விற்பனை

முல்லைத்தீவு மக்கள் வங்கிக் கிளையில் 2011 ஆம் ஆண்டு 6 மாதம் 30 ஆம் திகதிவரை மீட்கப்படாத அடகு நகைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை மேற்படி வங்கிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார். (04)

## நள்ளிரவில் தீ விபத்து கிளிநொச்சியில் கடை நாசம்



நேற்று அதிகாலை 1.00 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தினால் கிளிநொச்சியில் கடையொன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ இந்தியன் புடவையகமே இவ்வாறு எரிந்து நாசமாகியது. திடீரென ஏற்பட்ட தீயினால் கடையில் 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பொருட்கள் எரிந்ததுடன், அண்மையில் இருந்த ஹாட்வேயரிற்கும் தீ பரவியதால் அக்கடையிலும் பல பொருட்கள் எரிந்து நாசமாகின

சம்பவத்தை அறிந்த இராணுவத்தினரும், நகர வர்த்தகர்களும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களும் இணைந்து தீயணைப்பில் ஈடுபட்டு தீ பரவுவதைக் கட்டுப்படுத்தினர். இது தொடர்பான மேலதிக விசாரணையை கிளிநொச்சி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (யிலன்)

## சதுர்த்தி உற்சவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி உற்சவம் நாளை காலை ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள், வழிபாடுகள் என்பன இடம்பெறவுள்ளது. (04)

❖ ❖ ❖ ❖

(குருநகர்)

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை விநாயகர் சதுர்த்தி பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகும். 9.00 மணிக்கு சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா எழுந்தருள்வார். மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும். (68)

❖ ❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மாலை 4.15 மணிக்கு விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படவுள்ளது.

பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பாகும் மேற்படி நிகழ்வில் காயத்திரி மந்திரம், சாயி காயத்திரி மந்திரம், கணபதி சுலோகங்கள், அபிஷேகம், அறுகம்புல் அர்ச்சனை மற்றும் பஜனை என்பன இடம்பெறவுள்ளன.

நிகழ்வின் நிறைவில் 'விநாயகரின் மகிமை' என்னும் பொருளில் ஆர்.சரவணபவன் வழங்கும் விசேட சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

❖ ❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலய சதுர்த்தி உற்சவம் நாளை காலை 8.00 மணிக்கு 1008 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

மாலை 5.00 மணிக்கு விநாயகர் மகத்துவம் என்னும் தலைப்பில் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தத்தின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். தொடர்ந்து விநாயகப் பெருமானின் வீதியுலா இடம்பெறும்.


## தகவல் தொழில்நுட்ப பட்டக்கற்கைநெறி

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான 1ம், 2ம், 3ம், கல்வி ஆண்டுக்கான விரிவுரைகள் இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் ஆரம்பமாகின்றன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும் சித்தியடையத் தவறியோர் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலமும் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். 2012 உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும். எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறியை மேலதிகமாக பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. மேலதிக விபரங்களை இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


-இணைப்பாளர், BIT கற்கை நெறி.MCS தொ.பே.772395895

**BIT** சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்.

(C1726)

# வரலாற்றைக்கூறும் நூல்களை பாதுகாப்பது அவசியமானது

## யாழ் அரச அதிபர்



(யாழ்.நிருபர்)

ஒரு மனிதன் தான் பிறந்த மண்ணுக்கு என்ன செய்கிறான் என்பதிலேயே அவனது பெருமை தங்கியுள்ளது. வேலணைக் கிராமத்தின் சகல மட்டங்களிலுமுள்ள விடயங்களை ஆவணப்படுத்தி உங்கள் முன்னிலையில் ஒரு கிராமத்தையே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் பதிப்பாசிரியர் மாணிக்கவாசகர் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள்பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் கடந்த சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற "வேலணை ஒருவரலாற்று அறிமுகம்" நூல் வெளியீட்டில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வேலணையின் வரலாற்றை அறிந்து கொள்ள முனைபவர்களுக்கும் வரலாற்றுத்துறை ஆய்வாளர்களுக்கும் இது ஒரு சிறந்த ஆவணமாகும். வரலாற்றுப் பெருமைமிக்க வேலணை ஊரின் பெருமையை, சான்றோர வாழ்வை, கல்வி மேம்பாட்டை, கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை, அரசியல் பொருளியல், புவியியற் கூறுகளை ஒரு வரலாற்றுப் படிமுறையில் பதிவு செய்ய வேண்டுமென்ற வேணவா பதிப்பாசிரியருக்கும் வேலணை வரலாற்று நூல் வெளியீட்டுச் சபையினருக்கும் இருந்ததாலேயே இந்நூல் சிறப்பாக வெளிவந்துள்ளது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க வேலணை ஊரில் உள்ள ஆலயங்கள், தேவாலயங்கள் பற்றிய வரலாறும் இந்நூலில் நலல முறையில் பதிவாகியுள்ளது. இவ்வூரில் உள்ள கல்விச் சாலைகள் பற்றியும், எழுத்தறிவித்த இறைவர்களான அதிபர், ஆசிரியர்கள் பற்றியும் ஊரின் உயிர்ப்பையும் உயர் வாழ்வையும் சமூகநலனையும் பேணிய சான்றோர்கள் பற்றியும் இந்நூல் பேசுகிறது.

ஈழத்தில் மட்டுமல்ல, தமிழ் கூறும் நல் உலகெங்கும் பேசப்படுகின்ற வேலணையூர் தமிழ் அறிஞர்கள் பற்றியும் இந்நூல் உரைக்கின்றது. இன்னும் பல விடயங்களை உள்ளடக்கிய இந்நூல் வாழ்நாள் முழுவதும் பாதுகாக்கப்பட வேண்டிய அரிய வரலாற்றுப் பெட்டகமாகும்.

வேலணையின் அனைத்து தகவல்களையும் ஒன்றுபடுத்தி வரலாற்று ஆவணமாக இந்நூல் தொகுக்கப்பட்டமை பாராட்டத்தக்கதாகும். இந்நூல் உருவாக்கத்தில் பல்வேறு அறிஞர்கள், கல்விமான்களின் அயராத உழைப்பு ஒன்றிணைந்திருக்கிறது. இதுவரை வெளிவந்த வரலாற்று நூல்களில் இந்தநூல் மிகச்சிறப்பாக அமைந்துள்ளதெனவும் குறிப்பிட்டார். (10)

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 55ஆவது பேராளர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 55ஆவது பேராளர் மாநாடு எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் 3 மணி வரை வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் எஸ்.பி. பெர்னான்டோ தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகளில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் நாட்டின சமகால பிரச்சினைகளையும் ஆராய்ந்து முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது.

மேலும் இம்மாநாட்டில் 2012/ 2013ஆம் ஆண்டுக்கான சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இம்மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு ஒரு நாள் கடமை விடுமுறையும். ஒரு சோடி புகையிரத ஆணைப்பத்திரமும் வழங்கப்படும். இவற்றை பெறுவதற்கு அதிபர் ஊடாக வலயக் கல்விப்பணிப்பாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும் என சங்க பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (17)

# கூட்டுறவுச் சங்கங்களுக்கான பொதுச்சபைக் கூட்டத்தைக் கூட்ட ஏற்பாடு

(திருநெல்வேலி)

மூன்று பேர் கொண்ட நிர்வாகக்குழுவின் மூலம் நிர்வாகம் நடாத்தப்பட்டு வரும் பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கான பொதுச் சபைக் கூட்டம் விரைவில் நடாத்தப்படும் என யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர், வடமராட்சி கிழக்கு, நெடுந்தீவு ஆகிய நான்கு பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கான மூன்று பேர் கொண்ட நிர்வாகக்குழு தெரிவு செய்யப்பட்டு தற்போது நிர்வாகம் நடாத்தப்பட்டு வருகின்றது. இச்சங்கங்கள் நியமன நிர்வாகத்தின் கீழ் சிறந்த செயற்பாட்டுடன் இலாபகரமான முறையில் இயங்கி வருவதாகவும், பொதுமக்கள் மத்தியில் நல்ல நம்பிக்கையைப் பெற்றிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இரண்டு பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பொறுப்பாளர்கள் மீது நிர்வாகச் சீர்கேடு காரணமாக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருவதாகவும் உதவி ஆணையாளர் குறிப்பிட்டார். (137)

# யாழ். மாவட்ட மட்டத்திலான இலக்கியப்போட்டி முடிவுகள்

நேற்றைய தொடர்ச்சி

(வடமராட்சி)

மாவட்ட மட்ட இலக்கிய விழாவை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு,

திறந்த பிரிவு, கவிதைப் போட்டி,

ம.மாலாதேவி(அளவெட்டி), ந.ரஞ்சனா(நுணாவில் மேற்கு), சி.பிரசாத்(புங்குடுதீவு), செ.பரமநாதன்(கொக்குவில்),(இருவர் மூன்றாமிடம்),

பாடலாக்கம்,

நா.ஆனந்தராணி(நெல்லியடி), சி.அஜெந்தன்(நவாலி தெற்கு), க.சந்திராதேவி(திருநெல்வேலி கிழக்கு), வே.சிவராஜா (அளவெட்டி), (இருவர் மூன்றாமிடம்)

நாட்டார் கலை கற்றல்,

க.நல்லதம்பி(சங்கரத்தை), த.பரராசசிங்கம்(நீர்வேலி வடக்கு), அ.கமலாசினி (கொடிகாமம்),

இலக்கிய விவரணம்,

பு.சசிரஜனி(சுன்னாகம்), க.நிரோஜலா(கரவெட்டி), க.விமாலசினி(கொடிகாமம்), வ.பிரஷாலினி(புங்குடுதீவு),(இருவர் மூன்றாமிடம்),

சிறுகதைப்போட்டி,

ப.உதயகுமார்(அளவெட்டி வடக்கு), ந.சஞ்சேயன் (சாவகச்சேரி), யோ.தேவமதி (சண்டிலிப்பாய்),

சிறுகதை ஆக்கம்,

ம.மாலாதேவி(அளவெட்டி), ப.உதயகுமார்(அளவெட்டி வடக்கு), சு.சிவராசா (கொக்குவில் கிழக்கு), க.கோவிந்தராசா (யாழ்ப்பாணம்), (இருவர் மூன்றாமிடம்) -தொடரும்- (116)

# சிந்தாத்திரை மாதாவின் திருவிழா திருச்சொரூப பவனியுடன் நிறைவு

(வேலணை)

யாழ்.குடா நாட்டில் கிறிஸ்தவ சமய மக்களின் யாத்திரைத்தலங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான வேலணை சாட்டி சிந்தாத்திரை ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை திருச்சொரூப சுற்றுப்பிரகாரப் பவனியுடன் நிறைவடைந்தது.

யாழ்.மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளில் பெருந் தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

ஆலயத்திற்கு வருகை தந்திருந்த யாத்திரிகர்களினது பாதுகாப்பு, குடிதண்ணீர், சுகாதாரம் போன்ற வசதிகளும் ஆலயத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆலய வளாகத்தில் உள்ள கிணறுகளுக்கு சுகாதாரப்பகுதியினரால் குளோரின் இடப்பட்டு குடிநீர் பாவனைக்கு உட்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும், எவரையும் கிணறுகளில் இருந்து தண்ணீர் அள்ள விடப்படவில்லை. அதற்குப்பதிலாக பவுசர்களில் தண்ணீரை ஏற்றி ஆலய வீதிகளில் பரவலாக வைக்கப்பட்டிருந்த குடிதண்ணீர்த் தாங்கிகளில் நிரப்பப்பட்டு குழாய்கள் மூல மாக தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தியிருந்தனர்.

மக்களினது பாதுகாப்பு மற்றும் வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளை ஊர்காவற்துறைப் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். சாரணத் தொண்டர்கள், சென் ஜோன்ஸ் முதலுதவிப் படையினர் மற்றும் கிறிஸ்தவ அமைப்பினைச் சேர்ந்த தொண்டர் நிறுவனத் தொண்டர்களும் சேவைகளில் ஈடுபட்டிருந்தனர்.

குடிதண்ணீர் வசதிக்கான பவுசர்கள் மற்றும் உதவிகளை வேலணைப் பிரதேச சபையினர் மேற்கொண்டிருந்தனர். நிலமைகளை மேற்பார்வை செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கென வேலணைப்பிரதேச செயலகமும் ஆலயத்தின் தெற்குப்புறமாக தற்காலிக காரியாலயம் அமைத்து செயற்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது. (05, 85)

# பரிசளிப்பு விழா

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் 'பல்கலாசாரம் ஊடாக சமாதானம்' என்ற தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட மாகாணமட்ட சுவரொட்டி, கவிதை, கண்காட்சிகளுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில். நடைபெறவுள்ளது.

ஜி.ஐ.இசற் உதவி இணைப்பாளர் வீ.இராசையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச்செயலாளர் பி.விக்னேஸ்வரன், கௌரவ விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (12)



**சாவகச்சேரி எல்.பி.பினான்ஸ் காப்புறுதிக் கிளை நிறுவனத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் சாவகச்சேரி கிளையில் நடைபெற்றபோது காப்புறுதி நிறுவனத்தின் யாழ் பிராந்திய முகாமையாளர் சீ.தவசீலன் கேக் வெட்டுவதையும், லீசிங் மூலம் வாடிக்கையாளர் ஒருவருக்கு வாகனம் கையளிப்பதையும் காணலாம். (11)**

இல்லறத்தாருக்கும் துறவறத்தாருக்கும் பிரம்மச்சாரியம் அவசியம். ஏனெனில் உடல் மீதான ஆசை ஒழிந்தாலன்றி ஆத்மானந்தம் கிடையாது.

-ஸ்ரீசாரதாதேவி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## முன்னேற்றம் கொண்டுவரும் அபாயம்!

பலரது நேரத்தை விழுங்கிக் கொண்டிருக்கும் இன்ரர்நெற்றும் சமூக வலைத்தளங்களும் பணத்தையும் ஏமாற்றி விழுங்கி விடக் கூடிய அச்சம் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டு வருகிறது. மீண்டும் இணையத்தள மோசடி பற்றிய மற்றுமொரு உலகளவிலான புள்ளிவிபரம் வெளியாகி அதிர்ச்சியளித்திருக்கிறது.

கடந்த 12 மாதங்களில் இணையத்தளம் பயன்படுத்தும் இளைஞர்களில் 56 வீதம் பேர் ஏதோ ஒருவகையில் இணையத்தள மோசடிக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறது நோர்ட்டன் சைபர் கிரைம் அறிக்கை. உலக அளவில் சுமார் ரூ.30,000 கோடி அளவுக்கு மோசடி நடந்திருக்கிறது என்கிறது இந்த அறிக்கை.

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க, இணையதள மோசடிகள் (சைபர் கிரைம்) எண்ணிக்கையும் அதற்கேற்ப அதிகரித்தே வருகிறது. விதவிதமான அறிவுநுட்பத்துடன் இந்தக் குற்றங்கள் நடைபெறுகின்றன.

உலகின் மூலைமுடுக்கெல்லாம் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று அறியும் ஆர்வமும், உலகெங்குமுள்ள மனிதர்களுடன் முடிந்தவரை தொடர்புகொண்டு நட்பாடும் துடிப்பும் நமக்கு இருப்பதொன்றும் பிழையானதல்ல. இந்த வேட்கைதான் தொழிநுட்பத்தின் வேகவளர்ச்சியை ஏற்படுத்தி, தகவல் தொடர்பாடல் விரைவின் மூலம் உலகைச் சுருக்கி வருகிறது.

ஃபேஸ்புக், ட்விற்றர் போன்ற சமூக வலைத்தளங்கள் இன்று எண்ணற்ற மனிதர்களை இணைத்து வைத்திருக்கின்றன. எந்தவொரு சந்தேகத்திற்கும் தேவைக்கும் உடனுக்குடன் வழிகளும் ஆலோசனைகளும் சொல்ல வல்ல விற்பன்னர்களையும் நண்பர்களையும் நம் சட்டைப்பைக்குள்ளேயே வைத்துக்கொண்டு திரியமுடிகிறது. ஆமாம், இணையத்தள வசதியுடன் கூடிய செல்போன்கள் இப்போது எல்லோரும் வாங்கக்கூடிய விலைகளில் கிடைக்கின்றன.

இணையத்தளத்தில் பெறக்கூடிய அனைத்துச் சேவைகளையும் இப்போது செல்போனிலேயே செய்துவிட முடியும். அனைத்து வங்கிகளுமே செல்போன்மூலம் பணப் பரிமாற்றுப் பணிகளைச் செய்வதற்கு வாடிக்கையாளர்களை ஊக்கப்படுத்துகின்றன. இதற்காக தனிக்கட்டணம் இல்லை. வெறும் குறுந்தகவல் அனுப்பும் அதே செலவுதான்.

ஆனால், பயன்பாடு அதிகரித்த அளவுக்கு, அதன் மூலம் வரக்கூடிய ஆபத்து குறித்த எச்சரிக்கை உணர்வு அதிகரிக்கவில்லை. குறிப்பாக இளைஞர்கள் இதை விளையாட்டுப் பொருள் போலவே பயன்படுத்துகின்றனர் என்று விசனம் தெரிவித்திருக்கிறது அந்த அறிக்கை. அதிக அளவில் களவு போகும் பொருள் செல்போன் என்பதாலும், இணையவழி மோசடியில் ஈடுபடுவோர் இத்தகைய செல்போன் பயன்பாட்டைக் குறிவைத்து தங்கள் மோசடி வலைகளை விரிக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

தேவையில்லாத மின்னஞ்சலுக்குப் பதில் அளிப்பதன் மூலம் அல்லது இணைய தளத்தின் வழியாக, அறிமுகம் இல்லாத நிறுவனங்களில் பொருள்கள் வாங்கும்போது தேவையில்லாத தகவல்களை, விவரங்களைத் தாராளமாகத் தெரிவிப்பதன் மூலமும் தங்கள் ரகசியக் குறியீடுகளை வெளிப்படுத்திக் கொள்வதாலும் பல இழப்புகளைச் சந்திக்க நேர்கிறது. குறிப்பாக, சமூக வலைத்தளங்களில் எதைப் பகிர்ந்துகொள்வது என்ற கட்டுப்பாடே இல்லாத நிலை உள்ளது.

இவ்வாறு சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவோர் தொகை நாளுக்குநாள் வேகமாக அதிகரித்து வருகிறது. சீனாவில் மட்டும் தற்சமயம் 51.3 கோடி பேர் இணைய தளத்தைப் பயன்படுத்துகின்றனர். எண்ணிக்கையில் அதிகரித்தாலும், பயன்படுத்துவோரின் எச்சரிக்கை உணர்வு அதிகரித்துள்ளதா என்றால், இல்லை என்கிறது அறிக்கை.

“முன்னேற்றம் என்று அழைக்கப்படுவது ‘அபாயம்’தானே?” என்று ஜோஷ் வண்டேலூவின் நாவல் குறிப்பிடுவதைத்தான் நினைக்கத் தோன்றுகிறது.

- ஆசிரியர்

# நிபந்தனைகள், அழுத்தங்களுக்கு அரசாங்கம் அடிபணிய மாட்டாது

## அமைச்சர் கெஹெலிய தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன. இங்கு யார் வேண்டுமானாலும் வரலாம், போகலாம். ஆனால் கேட்பதையெல்லாம் கொடுப்போம் என்று யாரும் எதிர்பார்க்கக் கூடாது என அமைச்சரவைப் பேசாளரும் ஊடக அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சர்வ கட்சி ஆட்சி அமைப்பதற்கு தமிழத் தேசியக் கூட்டமைப்பிற்கு மாத்திரமல்ல, ஏனைய கட்சிகளுக்குமான பொதுவான அழைபபையே அரசு விடுத்துள்ளது. எனவே அரசின் கொள்கைகள் மற்றும் தேசிய நல்லிணக்கம் போன்றவை தொடர்பில் இணக்கப்பாடுடனான ஒன்றிணைந்த சர்வ கட்சி ஆட்சியினையே கிழக்கில் அரசு விரும்புகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தொடர்ந்தும் கூறுகையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகவும் வெளிப்படையாக அரசின் கொள்கைகள் தொடர்பில் கூறியுள்ளார். அதாவது அனைவருக்கும் எப்பொழுதும் அரசாங்கம் கதவைத் திறந்தே வைத்துள்ளது. இங்கு யார் வேண்டுமானாலும் வந்து போகலாம். கட்டாயம் என்றில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் வெளிப்படை தன்மையினையும் திறந்த கொள்கையினையும் புரிந்து கொள்ள வேண்டும்.

தேசிய நல்லிணக்கம், ஐக்கியம் மற்றும் பாதுகாப்பு போன்றவை உறுதிப்படுத்தும் வகையிலேயே தீர்மானங்களையும் மேற்கொள்ள முடியும். கிழக்கு மாகாணத்தில் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்த ஆட்சியொன்றுக்கான அழைப்பை அரசு திறந்தளவில் அறிவித்துள்ளது.

எனவே கூட்டமைப்போ ஏனைய கட்சிகளோ ஒன்றிணைந்து செயற்படலாம். ஆனால் நிபந்தனைகள் மற்றும் அழுத்தங்களுக்கு அடி பணிந்து கேட்பதையெல்லாம் அரசு கொடுத்து விடும் என்றும் யாரும் நினைத்து விடக்கூடாது. இது சாத்தியப்படவும் போவதில்லை. அரசு நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஏனைய கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படவே விரும்புகின்றது என்றார்.

# ஐ.நா.அதிகாரிகள் வருகைக்கு அரசின் அழைப்பே காரணம்

## என்கிறார் பாலித கோஹன

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயத்தினை மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் இருந்து இலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஐ.நா.வில் இருந்து குழுவொன்றை அனுப்பி வைக்குமாறு இலங்கை அரசாங்கம், மனித உரிமை பேரவையிடம் அழைப்பு விடுத்தது. அதனையடுத்தே அவர்களது விஜயம் அமைந்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான கொள்கை தொடர்பாக இந்தக் குழுவின் இலங்கை அரசாங்கத்திற்கு பல்வேறு விடயங்களில் ஒத்துழைப்புகளை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் பரிந்துரைகளை வழங்கி இலங்கைக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவார்கள்.

எவ்வாறாயினும் இறுதிக்கட்ட போரின் போது, மனித உரிமை பேரவையின் குழுவின் இலங்கை செல்வது சம்பந்தமாக ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் அமைச்சர்கள் பல்வேறு எதிர்ப்புகளை வெளியிட்டு வந்தனர்.

ஆனால் தற்போது எமது நாட்டின் பிரச்சினையை நாங்கள் தீர்த்து கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிழக்கில் அரசு ஆட்சியமைக்க முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு

## பதவிகளுக்கும் பேரம் பேசல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைப்பதற்கு ஆதரவு வழங்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணங்கியுள்ளதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பான முறைப்படியான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைக்க ஆதரவு வழங்கலாம் என்று ஒரு பகுதியினரிடையே கருத்து நிலவியபோதும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்டக்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து கிழக்கில் முஸ்லிம் ஒருவர் முதல்வராக நியமிக்கப்படுவார்.

தற்போதைய முதல்வர் சந்திரகாந்தனுக்கு கிழக்கு மாகாண சபையில் அமைச்சர் பதவி ஒன்று வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளும்கட்சிக்கு ஆதரவளிப்பதற்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், கிழக்கு முதல்வர் பதவி, மாகாணசபையின் வெகுமதி ஆசனங்களில் ஒன்று, 17ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றை ஸ்ரீலங்கா அரசிடம் கோரியதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன், துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சு, இரண்டு பிரதி அமைச்சர் பதவிகள், அரச கூட்டுத்தாபனங்களின் இரண்டு தலைவர் பதவிகள் ஆகியவற்றுக்கும் ஸ்ரீலங்கா அரசிடம் முஸ்லிம் காங்கிரஸ் பேரம் பேசியுள்ளதாகவும் கொழும்பு ஆங்கில வாரஇதழ் தெரிவித்துள்ளது.

# ஐ.தே.க.வை மீட்டெடுக்க ஒழுங்கான தலைமை அவசியம்

## அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு


(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை மீட்டெடுக்க ஒழுங்கான தலைமை அவசியம் என கண்டி அஸ்கிரிய பீடாதிபதி உடுகம சிறி புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

அனைவரும் ஒன்றிணைந்தே தேர்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டும். தலைமைப் பதவிக்கு அடித்துக் கொள்ளாமல் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

கட்சிக்கு சரியான ஒரு தலைவரை நியமிக்க வேண்டும். கரு ஜயசூரியவை ஒரு பக்கமும், சஜித் பிரேமதாசவை ஒரு பக்கமும் அனுப்பி கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியாது என புத்தரக்கித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேயவர்தன, அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்த போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



# உணவின்றி வாடுமா உலகு?

**உற்பத்தியாக்கப்படும் உணவில் 30 சத விகிதம் வீணாக்கப்படுவதாகக் கணக்கிட்டிருக்கின் றனர். பணக்கார நாடுகளின் உணவகங்களின் குப்பைத் தொட்டிகளில் வீசப்படும் உணவுப் பொருட்கள், வறிய நாடுகளில் உரியவகையில் பாதுகாக்கப்படாது பழுதடையும் பண்டங்கள், குறித்த இடத்திற்குக் குறித்த நேரத்தில் சென்ற டையாது வீணாகும் உணவு, சேமிப்புக் கிடங்கு களில் எலிகள் மற்றும் பறவைகளால் வீணடிக் கப்படும்தானியங்கள் எனப்பல வகையில் உணவு மனிதர்களது பசியைப் போக்காது வீணாகிறது.**

■ சர்வசித்தன்

இன்னும் சுமார் நாற்பது வருடங்களுக்குப் பின்னர் - அதாவது 2050ல் - உலகமக்கள் தொகை இப்போது இருப்பதை விட்வும் சுமார் 200 அல்லது 300 கோடி அதிகமாகி ஏறத்தாழ 900 அல்லது 1000 கோடிகளை எட்டி விடலாம். அவ்வாறு பெருக்கமுறும் மக்கள் தொகைக்குத் தேவையான உண வினை வழங்கும் ஆற்றலை எதிர்கால உலகம் பெற்றிருக்குமா என்று அறிவிய லாளர்கள் கவலைப்படத் தொடங்கி யுள்ளனர்.

இன்று, நமது மக்கள் தொகையில் ஏழில் ஒரு பங்கினர் - அதாவது சுமார் 100 கோடி மக்கள் - பசிக் கொடுமைக்கு ஆளாகி உள்ளார்கள். இதற்கு உற்பத்திக் குறைவு காரணமல்ல. மாறாக, விளை பொருட்களை உரிய வகையில் விநியோ கிக்கும் வசதிகள் இல்லாமையே இது போன்ற பட்டினிகளுக்குக் காரணமாக உள்ளதாக, உலக உணவு உற்பத்தி குறித்த அண்மைய அறிக்கை ஒன்று குற்றம் ச்சாட்டுகிறது.

எதிர்கால மக்கட் தொகை 200 முதல் 300 கோடி வரையில் அதிகரிக்கு மாயின் அதற்கானஉணவுத்தேவை இன்று உள்ளதைப் போல் இரு மடங்காக இருக்கும் என்பதே ஆய்வாளர்களது அச்சமாகும். மக் களில் பல கோடி பேர் பசியால் வருந்தவும், உரிய ஊட்டச் சத் தின்றி இறக்கவும் வாய்ப்புள்ளது. இன்னொரு பக்கம், இவ்வாறான இரட்டிப்பான தேவையின் பின் னால், அன்றைய காலப்பகுதியில் வாழப்போகும் மக்களது வரு மானப் பெருக்கம் - அவர்களை அதிகம் உண்பவர்களாக மாற்றி விடும், அதிலும் குறிப்பாக,இறைச் சியின் தேவை இவ்வாறு அதி கரிக்க வாய்ப்புள்ளது எனப்படு கிறது.

எனவே,இன்று உணவின்றி வாடும் மக்களது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதோடு மட்டும்நின்று விடாது இனி 'வரும் காலங்களில் ஏற்படப்போகும் மிதமிஞ்சிய உண வுத் தேவையையும் ஈடு செய்யும் வகையிலும் செயற்பட வேண்டும் என்பதே இவ்வாய்வுகளது கருத்தாகும். இதற்கான வழிமுறைகள் சிலவற்றை ஆய்வாளர்கள் முன்மொழிந்துள்ளார்கள்.

ஒரு புறம், நமது உணவுத் தேவையினை நிறைவு செய்ய வேண்டும். அதே சமயம், அதன் விளை வாய் ஏற்படும் சுற்றுச் சூழல் மாசுபாட்டினைத் தவிர்க்கும் வழிவகைகளிலும் நாம் முனைப்புக் காட்ட வேண்டிய தேவை உள்ளது. இல்லை யெனில் வயிற்றுக்கு உணவு அளிப்பதோடு மட் டும் நின்று விடாமல், நோயுறும் மக்களுக்கான மருந்துகளையும் கண்டுபிடிக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

மேலே சொன்ன உணவுத் தேவையும், சூழல் மாசு பாடும் குறித்த கவலை ஆய்வாளர்களிடையே உருவானபோது, அதனை ஈடுசெய்யும் வழிகள் குறித்த ஆய்வுகள் உத்வேகம் கண்டன.

மின்னசோட்டா பல்கலைக் கழகச் சுற்றுச் சூழல் நிறுவனத்தின் செயற்பாட்டாளரான ஜோனாதன் எ .'.போலே [Jonathan A Foley] என்பவரது தலைமையில் உலகளாவிய அளவில் ஆய்வாளர் களைக் கொண்ட குழு ஒன்று இதில் முனைப் புடன் ஈடுபடத் தொடங்கிற்று. இக்குழுவினரது பரிந்துரைகள் சென்ற 2010இல் வெளியிடப்பட்டன.

## இன்றைய நிலை

கிறீன்லாந்து, அன்டார்ட்டிகா தவிர்ந்த பூமியின் ஏனைய நிலப்பகுதியில், சுமார் 38 சதவிகிதம் விவசாயத்துக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இவற்றுள் பல மிகச் சிறந்த மண்வளம் நிறைந்த விவசாய பூமி ஆகும். எஞ்சியுள்ளவை மலை கள், நகரங்கள், விளையாட்டிடங்கள் மற்றும் பனி மேடுகளாய் உள்ளன. இவை தவிர மேலும் சில, மிகக் குறைந்த பரப்பிலான பகுதிகளைக் காடுகளும், மேய்ச்சல் நிலங்களும் ஆக்கிரமித்து உள்ளன. சிறிய பரப்பளவில் உள்ள இவற்றை அழித்து விளைநிலங்களாக மாற்றுவதன் மூலம், கரிமம் மற்றும் உயிர்ப் பன்மைத்துவம் நிறைந்துள்ள நிலப்பகுதிகளை இழக்க நேரிடும். இது சுற்றுச் சூழலினை பாதிக்கும்.



இன்று உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகள் அனைத்துமே மனிதர்களுக்கானவை அல்ல. உற் பத்தியாகும் மொத்த உணவில் 60 சதவிகிதம் மட் டுமே மனிதர்களது பாவனைக்காக எடுத்துக் கொள் ளப்படுகிறது. எஞ்சியதில் 35 சதவிகிதம் கால்நடை உணவுக்காகவும், மீதமுள்ள 5 சதவிகிதம் எரி பொருள் மற்றும் தொழிற்சாலைகளின் தேவைகளுக் காகவும் ஒதுக்கப்பட்டு உள்ளது. ஒருகிலோ எலும் பற்ற மாட்டிறைச்சியினைப் பெறுவதற்காக சுமார் 30 கிலோ கால்நடை உணவு வழங்கப்படுகிறது.

உணவு உற்பத்தியில் வளர்ச்சி காணும்போது தூய நீரின் பயன்பாடும் அதிகரிக்கிறது. ஆறுகள் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவற்றின் மூலம் பெறப்படும் நீரில் 70 சதவிகிதம் விவசாயத்திற்கு உபயோகிக் கப்படுகிறது. உற்பத்தியினைப் பெருக்குவதாயின் அதற்குத் தேவையான நீரின் அளவும் அதிகரிக் கவே செய்யும். எனவே நீரின் தேவை சுமார் 80 முதல் 90 சதவிகிதம் வரை உயரலாம் என எதிர் பார்க்கிறார்கள். இதனால் இன்று உயிர்ப்புடன் ஓடிக்கொண்டிருக்கும் ஆறுகளில் பல வற்றிச் செய லற்றுப் போகும். நிலத்தடி நீரும் காலப்போக்கில் இல்லாது போகவும் வாய்ப்புகள் உள்ளன.

ஒரு புறம், நீரின் வறட்சி எனில், மறுபுறம் அதிக விளைச்சலைப் பெறும் பொருட்டுப் பயன்படுத் தப்படும் களைகொல்லிகள், பூச்சி மருந்துகள் மற்றும் உரங்கள் ஆகியனவற்றில் உள்ள இரசா யனப் பொருட்களால் சுற்றுச் சூழல் அதிக அளவு பாதிப்புறுகிறது.

ஆற்று நீரில் 1960 .களில் இருந்ததைப் போன்று இருமடங்காக நைதரசன் மற்றும் பொஸ்பரஸ் இரசாயனக் கலப்பு ஏற்பட்டிருப்பதாக ஓர் அறிக்கை குறிப்பிடுகிறது. இது ஆற்று மீனினங்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. உரங்கள் பசுமைப் புரட்சியின் தோழனாக இருப்பினும் அதன் மித மிஞ்சிய பாவனை எதிரிடையான பலன்களையே தரவல்லது. உபயோகிக்கப்படும் உரங்களில் பாதி, நீருடன் கலந்து வெளியேறி சூழலில் கலந்து அதை மாசுபடுத்துகிறது.

### அச்சம் போக்கும் ஐந்து வழிகள்

மனிதகுலம் உணவின்றி வாடும் நிலை யினைத் தவிர்க்க, பின்வரும் வழிகளைப் பின்பற்றலாம்:

1. வறண்டவலயப் பிரதேசங்களில் தரி சாகக் கிடக்கும் நிலங்களைப் புதிதாக விவசாயத்துக்கென ஆக்கிரமிக்காது இருத்தல்.
2. இப்போது குறைந்த அளவிலான உற் பத்தியினை அளிக்கும் பகுதிகளை மேம்படுத்தி அதிக உற்பத்தியினை ஏற்படுத்துதல்.
3. நீர் மற்றும்உரம் இவை இரண்டினையும் உரிய வகையில் பயன்படுத்தும் வழிகளைக் கண்டறி தல்.
4. இறைச்சி உண்பவர்கள் அதன் அளவினைக் குறைத்துக் கொண்டு, அதற்கான மாற்று வழி- களைப் பின்பற்றுதல்.
5. உணவு உற்பத்தியின் போதும், அதனைப் பின்னர் பகிர்ந்தளிக்கும் போதும் ஏற்படும் இழப்புகளை மட்டுப் படுத்தும் வழி- களை உருவாக்குதல்.

இதில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும், புதிய விளை நிலங்களை உருவாக்காது தவிர்ப்பதன் மூலம் உயிர்ப் பன்மைத்துவ அழிப்பும் அதன் விளைவாய் ஏற் படும் கரிம வாயுவின் அதிகரிப் பும் தடுக்கப்படும்.இதற்குச்செயல் வடிவம் தரவென. பணக்கார நாடுகள் வறிய நாடுகளில் அதி லும் குறிப்பாக வரண்ட பிரதேச நாடுகளில் மேற்கொள்ளப்படும் காடழிப்பினைத் தவிர்க்கும் வகையில் ஊக்கத் தொகை- யினை வழங்க முன்வரலாம். அடுத்து, உற்பத்தித் திறனை அதிகரிப்பதில், நவீன மரபணுப் பயிர்களை வளர்ப்பதும், அவற் றினை நிர்வகிப்பதும் அடங்கும்.

அடுத்து, நீராதாரங்களையும், விவசாயத்துக்குப் பயன்படுத் தும் உரங்களையும் உரியவகை யில் கையாள்வது பற்றிய தாகும். இதில், ஓர் குறிப்பிட்ட அளவு நீர் உரம் மற்றும் அதற் கெனச் செலவிடும் ஆற்றல் இவைகளது அடிப்படையில், மிக உயர்ந்த விளைச்சலைப் பெறுவதற்கான வழிமுறை களைக் கண்டறிவது முக்கிய மாகிறது.

சராசரியாக ஒரு லீற்றர் நீரின் மூலம் ஒரு கலோரி ஆற்றல் கொண்ட உணவு உற்பத்தி செய்யப்படுவதாகக்கண்டுள்ளனர். இவை இடத்திற்கிடம் வேறுபடினும் இதனைச் சராசரி அளவு எனக்கொள்ளலாம். நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்தும்' வழிமுறைகளின் கீழ் சொட்டு நீர்ப் பாசனம் (இதில் பயிரின் வேரினுக்கு நீர் செலுத் தப்படும்), பயிர்களின் அடிப்பகுதியைச் சுற்றிலும் சேதனப் பொருட்களால் மூடிவைத்தல் (இதனால் பயிரின் வேர்ப்பகுதி ஈரலிப்பாக இருப்பது உறுதி செய்யப்படுகிறது), மற்றும் வாய்க்கால்கள் மூல மாகப் பாய்ச்சப்படும் நீரின் இழப்பினை ஈடுசெய் யும் வகையில் அவற்றை மாற்றி அமைப்பது போன்றவைகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. இறைச்சியின் தேவையைப் படிப்படியாகக்குறைப் பதன் மூலம் உணவுப் பற்றாக்குறையைத் தவிர்க்க இயலும் என விதந்துரைக்கப்படுகிறது. ஒரு கிலோ இறைச்சியினைப் பெறுவதற்கு சுமார் முப்பது மடங்கு உணவுத் தானியம் கால் நடைகளுக்கு உணவாக இடப்படுகிறது. எனவே இதனைக் குறைத்து, மனிதர்கள் உண்ணும் பயிர்களுக்காக இத்தொகை செலவிடப்படலாம்.

இவை அனைத்தையும்விட முக்கியமான்து, உற் பத்தியாகும் உணவுத் தானியங்களைச் சேமித்து வைப்பதும் அவற்றை உரிய வகையில் தேவைப் படுபவர்களுக்கு விநியோகம் செய்வதும் ஆகும்.

சுமார் 30 சதவிகிதம் உணவு இவ்வகையில் வீணாக்கப்படுவதாகக் கணக்கிட்டிருக்கின்றனர். பணக்கார நாடுகளின் உணவகங்களின் குப்பைத் தொட்டிகளில் வீசப்படும் உணவுப் பொருட்கள், வறிய நாடுகளில் உரிய வகையில் பாதுகாக்கப் படாது பழுதடையும் பண்டங்கள், குறித்த இடத் திற்குக் குறித்த நேரத்தில் சென்றடையாது வீணாகும் உணவு, சேமிப்புக் கிடங்குகளில் எலிகள் மற்றும் பறவைகளால் வீணடிக்கப்படும் தானியங்கள் எனப் பல வகையில் உணவு மனிதர்களது பசியைப் போக்காது வீணாகிறது.

உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கான தீர்வுகள் அனைத்தையும் உரியவகையில் செயற் படுத்துவதன் மூலம், 2050 ல் ஏற்படப் போகும் உணவுத் தேவையினை நாம் துணிவுடன் எதிர் கொள்ள முடியும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

உலகின் மூலை முடுக்குகளில் விளையும் சொற்ப அளவிலான உணவினையும்கூட, மற்றொரு கோடி யில் அதற்கானதேவையுடன் காத்திருக்கும்மற்றை யவர்களுக்குத் தெரிவிக்கவும், அதனை அவர்களி டம் சேர்ப்பிக்கும் வசதிகளை ஏற்படுத்தவும் இன் றைய கணினிமய உலகில் சாத்தியமே.எதிர்வரும் சந்ததியினர் புத்திசாலித்தனத்துடன் செயற்படின், 2050இல் இன்றிருக்கும் உணவுப் பற்றாக்குறைகூட இல்லாத நிலையினை ஏற்படுத்திட இயலும்.

# சுற்றிவளைப்புகளால் 700 இலட்சம் வருமானம்

(கொழும்பு)

ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நுகர்வோர் விவகார அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களின் மூலம் 700 இலட்ச ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் காலப் பகுதிக்குள் 21 ஆயிரத்து 182 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமை, அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்தல், கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்தல், உத்தரவாத சான்றிதழ் விநியோகிக்காமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்தச் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்கான பால்மா கட்டுப்பாட்டு விலையை விடவும் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி; முஸ்லிம் கட்சிகளிடையே கடும் போட்டி

(அம்பாறை)

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியைக் கைப்பற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலுள்ள முஸ்லிம் கட்சிகள் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இடையிலான போட்டி தீவிரமடைந்துள்ளது.

கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன் தலைமையிலான இலங்கை மக்கள் காங்கிரஸும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸும், அமீர் அலியை முதலமைச்சராக்க வேண்டுமெனக் கோருகின்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினரான அமீர் அலி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாவது அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவை தனது கட்சியின் தூதுக்குழுவொன்று நேற்று முன்தினம் சந்தித்து முதலமைச்சர் பதவியை கோரியதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரான பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா கூறினார்.

அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸும்



இதுதொடர்பாக எம்முடன் புரிந்துணர்வுக்கு வந்துள்ளது. நாம் கோரிக்கையை முன்வைத்தோம். இதுதொடர்பாக இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா கூறினார்.

இதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்விடயம் தொடர்பாக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# விரிவுரையாளர் போராட்டத்தின் மூலம் ஆட்சியைக் கவிழ்க்க இரகசிய சூழ்ச்சி

## – என்கிறது 'தினமின'

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைக் கவிழ்க்க இரகசிய சூழ்ச்சித் திட்டமொன்றை பல்கலைக்கழக விரிவுரையாளர் போராட்டத்தின் மூலம் முன்னெடுத்து வருவதாக புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக "தினமின" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தோனேசியாவின் முன்னாள் ஜனாதிபதி முஹமட் சுகார்ட்டோவை பதவி விலக்கியதனைப் போன்று, ஜனாதிபதி மகிந்தவையும் பதவி விலக்க முயற்சிக்கப்படுவதாக் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கிலேயே பல்கலைக்கழக பேராசிரியர்கள் தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

தொழிற்சங்க கோரிக்கைகளை விடவும் ஆட்சி கவிழ்ப்பதனை முன்னிலைப்படுத்தி போராட்டம் நடத்தப்பட வேண்டுமென பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் நிறைவேற்றுக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

1998ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தைப் போன்றே இலங்கையிலும் போராட்டம் நடத்தி ஆளும் கட்சியை பதவி கவிழ்க்க முயற்சிக்கப்பட்டு வருகின்றது.

தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் சில பல்கலைக்கழக பேராசிரியர்களின் கோரிக்கைகளானது, உலகின் எந்தவொரு நாட்டிலும் விடுக்கப்படாத கோரிக்கைகளாகும் என புலனாய்வுப் பிரிவினரை மேற்கோள்காட்டி அந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் பல்கலைக்கழக விரிவுரையாளர் கூட்டத்தில் கருத்துரைத்த பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர், தேர்தலில் மகிந்தவை விலக்க முடியாவிடின் சுகர்த்தோவை விரட்டிய வழியில், ஆர்ப்பாட்டங்களின் மூலம் விரட்டுவோம் எனத் தெரிவித்ததாகவும், இதற்கான அனைத்து வசதிகளையும் வழங்க அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சில தரப்பினர் வாக்குறுதியளித்ததாகவும் புலனாய்வுப் பிரிவினரை மேற்கோள் காட்டி அந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

# அறியாமை காரணமாகவே அவுஸ்ரேலியா பயணம்

(சென்னை)




தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் அறியாமை காரணமாகவே அவுஸ்ரேலியாவுக்குப் படகு மூலம் அழைத்துச் செல்லும் நடவடிக்கைக்கு ஆட்படுகின்றனர் என இந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.


தமிழக அரசாங்கத்தின் பராமரிப்பில் உள்ள இவர்கள் கடந்த மூன்று மாதகாலப்பகுதியில் அவுஸ்ரேலியாவுக்கு செல்லும் நிலையில் கைதுசெய்யப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஜூன் 6 ஆம் திகதி கொல்லம் என்ற இடத்தில் 121 பேர், ஆகஸ்ட் 17 ஆம் திகதி காஞ்சிபுரத்தில் 61 பேர், ஆகஸ்ட் 28 ஆம் திகதி கூடலூரில் 28பேர், செப்டம்பர் மங்களூரில் 80 பேர் இறுதியாக நாகப்பட்டிணத்தில் 65 பேர் என்ற அடிப்படையில் இலங்கை அகதிகள் அவுஸ்ரேலியாவுக்கு செல்லும் போது கைதுசெய்யப்பட்டனர்.

இந்தநிலையில் குறித்த அகதிகளுக்கு அவுஸ்ரேலியாவில் அண்மைக்காலத்தில் அகதிகள் விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்டத்திருத்தங்கள் மற்றும் அந்த நாட்டுக்குச் செல்வோர் பசுபிக் தீவுகளுக்கு மாற்றப்படுதல் போன்ற விடயங்கள் தெரிந்திருக்கவில்லை. எனவே ஆட்கடத்தல்காரர்களின் பொய்யான உறுதிமொழிகளுக்கு உட்பட்டு இந்த அகதிகள் அவுஸ்ரேலியாவுக்கு செல்லத் துணிவதாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

# அரசியல் ஸ்திரத்தன்மைக்கு 18ஆவது திருத்தமே காரணம்

(கொழும்பு)



நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு 18ஆவது திருத்தச் சட்ட மூலமே காரணம் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பலம் பொருந்திய ஆட்சிக்கட்டமைப்பே நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழிகோலியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் ஸ்திரத்தன்மை காரணமாகவே நடைபெற்று முடிந்த மாகாணசபைத்தேர்தலில் அரசாங்கம் வெற்றியீட்ட முடிந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

58ஆவது பொதுநலவாய நாடுகள் நாடாளுமன்ற அமர்வுகள் நிறைவில் கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

18ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் மூலம் நாட்டுக்கு பல்வேறு நன்மைகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினர் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித அர்த்தமும் கிடையாது எனவும அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# துஷ்பிரயோகம் அதிகரிப்பு


(கொழும்பு)

இலங்கையில் சிறார், பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் 6 வீதத்தால் அதிகரித்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வருடாந்தம் சுமார் 750 மனித கொலைச் சம்பவங்கள் பதிவாகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று வருடங் களுக்கு முன்னர் இருந்த போர்ச் சூழலில், நாட்டில் வருடாந்தம் சுமார் ஆயிரத்து 500 மனிதப் படுகொலைச் சம்பவங்கள் பதிவானதாகவும்,இதற்கமைய தற்போதைய புள்ளிவிபரங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது குற்றச்செயல்களில் அதிகரிப்பு காணப்படவில்லை எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் படையினரை அரசு பாதுகாக்கும்



(கொழும்பு)

சர்வதேச ரீதியில் எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுத்த படையினரைப் பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

திபுலபிட்டியவில் படையினருக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளைக் கையளிக்கும் வைபவம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் பசில் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

2005 நவம்பர் 17 ஆம் திகதி நாட்டு மக்கள் நாட்டின் ஆட்சியதிகாரத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைத்தனர். அவர் அதைப் பொறுப்பேற்கும் போது நாட்டின் பூமிப் பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு மட்டுமே இருந்தது. அதே போன்று கடற்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியே அரச நிர்வாகத்திடம் இருந்தது.

ரணில் - பிரபாகரன் உடன்படிக்கை மூலம் நாட்டின் மீதான பகுதி உத்தியோகபூர்வமாக புலிகளின் நிர்வாகப் பிரதேசமென ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் முப்படையினர் தமது சீருடையுடன் புலிகளின் பிரதேசத்திற்குச் செல்ல வேண்டுமானால் புலிகளின் அனுமதி பெற்றே செல்ல வேண்டியிருந்தது.

அதுமட்டுமின்றி சாதாரண பிரஜைகள்கூட ஓமந்தைக்கு அப்பால் செல்ல வேண்டுமானால் புலிகளின் அனுமதிபெற வேண்டியிருந்தது. அது போன்ற நிலையிலிருந்த நாட்டையே ஜனாதிபதி பொறுப்பேற்றிருந்தார்.

அவரது வழிகாட்டலில் பாதுகாப்பமைச்சின் செயலாளரின் தலைமையில் முப்படையினரின் தியாகத்தின் மூலம் குறுகிய காலகட்டமொன்றில் முழு இலங்கையையும் ஒரே நாடாக ஒரே கொடியின் கீழ் கொண்டுவர முடிந்தது.

இந்த நாட்டினதும் முப்படையினரினதும் உயிர்த்தியாகத்தால் தான் இதனை ஜனாதிபதியினால் மேற்கொள்ள முடிந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

இதில் பாதுகாப்புச் செயலாளரின் பங்கு மிக முக்கியமானது. நாட்டிலுள்ள ஆயுதங்களைவிட அதன் பின்னணியிலுள்ள படைவீரர்களே வெற்றிக்குக்காரணம் என்று அவர் அடிக்கடி கூறுவார்.

ஒரு பக்கம் படையினருக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் மறுபக்கம் அதற்காக சிறந்த படையினரை உருவாக்குதல் இரண்டிலும் அவரது கவனம் செலுத்தப்பட்டது.

அதேபோன்று படையினரைப் பாதுகாக்கவும் அவர்களது குடும்பங்களைப் பாதுகாகவும் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நாடு இந்தளவு இப்போது அபிவிருத்தியில் கட்டியெழுப்பப் படுகின்றமைக்கு மூல காரணமானவர்கள் படையினரே.

இதற்காக அவர்கள் உயிரைத் தியாகம் செய்தது மட்டுமன்றி எதிர்க்கட்சியின் கேலிக்கும் நகைப்புக்கும் உட்பட நேர்ந்தது. கிளிநொச்சி போகிறோம் என்று மதவாச்சி போனதாகக் கேலி செய்தார்கள்.

இத்தகைய சகல சூழ்நிலையிலும் படையினர் நாட்டுக்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டனர் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மனிதம் சார்ந்த உணர்வுகள் சிறுகதையில் இடம்பெற வேண்டும்

## - விரிவுரையாளர் வி.ரி.கணேசலிங்கம்

(திருநெல்வேலி)

இன்றைய இளைஞர்கள் வாசிப்பதில் அக்கறை காட்டுவதில்லை. புத்தகங்களை வாங்கி வாசிப்பதிலும் அவர்களுக்கு நாட்டம் மிகக்குறைவு. இது ஒரு வகை சமூகநோய் என்றுதான் கருதப்பட வேண்டும் என யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வி.ரி.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

கலாபூசணம் கே.ஆர்.டேவிட் எழுதிய 'பாடுகள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்தும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய விரிவுரையாளர், இச்சிறுகதைத் தொகுதியில் உள்ள பன்னிரண்டு கதைகளும் சமூகத்தில் நிலவும் சம்பவங்களை வைத்து எழுதப்பட்டவையாகும். நூலாசிரியரிடம் மனிதம் சார்ந்த உணர்வுகள் உண்டு என்பதை அவரது கதைகள் வெளிக் கொணர்கின்றன. ஆசிரியராக, கல்வி அதிகாரியாக இருந்த போதே எழுத்தாளராக மிளிர்ந்து சிறுகதை உலகில் அவர் கொடிகட்டிப்பறந்தார். உண்மையான மார்க்கஸியவாதியாகத் திகழ்பவர் அவரது கதைகளிலும் அந்த வெளிப்பாடுகள் உண்டு.

கல்விக் கூடங்களுக்குக் கல்வி அதிகாரிகள் வரும் போது ஆசிரியர்களிடம் ஏதாவது குற்றம் காண்பதற்காகவே வருவார்கள் என்னும் கருத்து நிலவுவது இயல்பானதே. ஆனால் கல்வி அதிகாரியாக இருந்த டேவிட் ஆசிரியர்களிடம் அன்பையும், பண்பையும் காட்டி அவர்களிடமிருந்து சிறந்த செயற்பாடுகளை பெற்று ஆசிரியர்களிடம் நற்பெயரைச் சம்பாதித்துக் கொண்டவராவார்.

அவரது கதைகள் ஆக்கபூர்வமானவை. வறுமையில் கொடுமையின் வலி எப்படி இருக்கும் என்பதை விளக்கும் அருமையான கதைகளை அவர் எழுதியுள்ளார். எழுத்துத்துறையில் அவரது பணி போற்றத் தக்கதாகும் எனத் தெரிவித்தார்.

ஆய்வுரையை தினகரன் முன்னாள் ஆசிரியர் சிவா சுப்பிரமணியம் நிகழ்த்தினார். முதற் பிரதியை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவிடமிருந்து யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி எஸ்.குமாரவடிவேல் பெற்றுக் கொண்டார். சிறப்புப்பிரதிகளும் வழங்கப்பட்டன. ஏற்புரையை நூலாசிரியர் கே.ஆர்.டேவிட் நிகழ்த்தினார்.

அதிகளவிலான பொது மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (137)

## இருளில் மூழ்கும் வீதிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பல வீதிகளில் உள்ள மின் விளக்குகள் எரிவதில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நகரசபை எல்லை வீதியான நுணாவில் - பருத்தித்துறை வீதியில் சில விளக்குகள், தாளையம்பதி வீதியில் மூன்று விளக்குகள் என பல மின் விளக்குகள் எரியாமல் இருப்பது பொதுமக்களுக்கு பெரும் அசௌகரியமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## விநாயகர் சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் திருவருள் மிகு கற்பகப்பிள்ளையார் ஆலய விநாயகர் சதுர்த்தி விசேட தீர்த்தவாரி உற்சவம் நாளை புதன்கிழமை காலை 6 மணி முதல் மாலை 3 மணி வரை இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் கற்பகப் பிள்ளையார் தீர்த்த புஷ்கரணியில் இருந்து தீர்த்தம் எடுத்து வந்து அடியார்கள் கைகளால் தீர்த்தவாரி செய்வற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அன்றைய தினம் மாலை 4 மணி முதல் கற்பகப்பிள்ளையாருக்கு விஷேட அபிஷேகமும், விசேட பூஜை வழிபாடுகளும் மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (135)

# இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் தென்மராட்சிப் பிரிவில் தெரிவு

(வேலணை)

தேசிய இளைஞர் மன்றத்தின் வடமாகாண இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிறந்த இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினராக தென்மராட்சிப் பிரிவின் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி.விமலதாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் மத்தியில் இடம்பெற்ற தெரிவின் போது இவர் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதற்கான விருதினையும் பெற்றுக் கொண்டார்.

அத்துடன் இவர் இந்திய நாட்டிற்குச் சென்று அங்குள்ள இளைஞர் சேவைகள் தொடர்பில் இடம்பெற்று வருகின்ற பயிற்சிகளிலும் செயல் அமர்வுகளிலும் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (05)

# கால்நடைகளின் நீர்த் தேவைக்கு குளத்தை தூர்வாரும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)



சமூக சேவையில் பெரிதும் அக்கறை கொண்டவரும் முன்னாள் காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளருமான வே.சபாலிங்கத்தின் முயற்சியினால் மூன்றாம் வீதியின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள தாமரைக் குளம் இறைத்து தூர்வாரப் பட்டது.

காரைநகரில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக கால்நடைகள் நீரின்றி பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ளன.

அதன்காரணமாக தாமரைக் குளத்தின் ஒருபகுதியில் கால்நடைகள் நீர் அருந்துவதற்கு ஏதுவாக முன்னர் திருத்தப் பட்டதாலும் தற்பொழுது குறிப்பிட்டளவு நீர் இருப்பதாலும் தூர்வாரி சுத்தப்படுத்தினால் கால்நடைகளிற்கு அருந்துவதற்கு நீர் கிடைப்பதுடன், ஆழமான வற்றாது கோடையிலும் நீரைக் கொண்டிருந்த தாமரைக் குளம் மேலும் நீண்டகோடை காலத்திலும் சுத்தமான நீரைக் கொண்டிருக்கும் என்பதாலும் இப்பணியை செய்ய, தான் முன் வந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இதற்கு அண்மையில் கந்தர்குண்டு என்ற ஒரு கேணி இருந்ததாகவும் அதில் கால்நடைகள் இறங்கி தண்ணீர் பருகிவந்ததாகவும் வற்றாது வருடம் முழுவதும் அதில் கால்நடைகள் நீர் பருகியதாகவும் அக்கேணியில் அபூர்வ ஊற்று இருந்ததாகவும் அவ்வூற்றின் மூலம் குடிப்பதற்கு உகந்தளவில் நன்னீர் ஊறியது.

ஆனால் காலப்போக்கில் அந்தக் கேணி தூர்ந்து போயிருப்பதாகவும் அக்கேணியினை மீண்டும் ஆழப்படுத்தினால், நிலத்தடியே சென்றுவிட்ட அவ்வூற்றின் மூலம் குடிப்பதற்கு உகந்த நன்னீர் பெறமுடியும் எனவும் அதனைத் தூர்வார மக்கள் முன்வரவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (10)

# பொது மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டல்



கோப்பாய் மத்தி, சூசையப்பர் கோவிலடியில் பொதுமண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இப் பொதுமண்டபம் கெயார் நிறுவனம், சமூக முன்னெடுத்தல் நிறுவனங்களின் அனுசரணையுடன் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன், ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான இராமநாதன் ஐங்கரன், கோப்பாய் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கிருஸ்ணராஜா, கோப்பாய் மத்தி கிராம உத்தியோகத்தர் எஸ்.பாலசுந்தரம், கெயார் நிறுவனத்தின் பிரதிநிதி எஸ்.பிரபாகரன், கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர், வள்ளியம்மன் சனசமூக நிலையத்தலைவர் என்.நித்தியானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முரசின் இன்றைய பலன்

(18.09.2012 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 02 ஆம் திகதி.
நட்சத்திரம் சித்திரை பின்னிரவு 1.03 வரை.
சித்தம். திதி திருதியை பின்னிரவு 3.09 வரை.
இராகுகாலம் 3.03 - 4.33 வரை. சுபநேரம் 10.33 - 12.03 வரை.
எமகண்டம் 9.03 - 10.33 வரை, குளிகன் காலம் 12.03 - 1.33 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சுயநலம் கருதாமல் செயற்படுவீர்கள். பணிகளில் நேர்த்தி. தொழிலுக்கு தேவையான வசதி. தாராள பணவரவு. மனதில் நம்பிக்கை. புத்திரரால் பெருமை. |
| ரிஷபம் | தொழிலில் போட்டியாளர் குறுக்கிடுவர். வென்று வேலைகள் எளிதில் முடியும். உறவினர், நண்பர்களால் நன்மை. பணவரவு மந்தம். பயணத்தில் மாறுதல். |
| மிதுனம் | நற்செயல்கள் புரிவீர்கள். அனுபவசாலியின் உதவி. தொழில், வியாபாரம் சராசரி. பணவரவுக்கு ஏற்ப செலவுகள். பாதுகாப்பில் கவனம். சுற்றத்தில் பாராட்டு. |
| கடகம் | பேச்சில் நிதானம் வேண்டும். தொழில் தடங்கல். பண வரவு தாமதம். ஓய்வு தேவை. நினைத்தது நடக்காததில் கவலை. உறவுகள் உதவி. பக்தியில் ஈடுபாடு. |
| சிம்மம் | தகுதி, திறமை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு. பாராட்டு வரும். தொழிலில் இடர்விலகும். தாராள பணவரவு. குடும்ப தேவை நிறைவேறும். சான்றோரின் ஆசி. |
| கன்னி | கலைஉணர்வு அதிகரிக்கும். இயற்கை இரசிப்பு. புதியவர்களின் உதவி கிடைக்கும். சராசரி பணவரவு. சுபகாரியச் செலவு. சாந்தம் நிலவும். விருந்து வரும். |
| துலாம் | செயல்களில் புதிய அணுகுமுறை. தொழிலில் மகிழத்தக்க சாதனை. செலவுகள் இருக்கும். வழிபாடு நிறைவேறும். புதிய அறிமுகம் வரும். குடும்பத்தில் மகிழ்வு. |
| விருச்சிகம் | சுற்றுச்சூழ்நிலை உணர்ந்து செயற்படுக. முயற்சியால் தொழில் சிறக்கும். பணவரவு குறைந்த அளவு. மனம் சஞ்சலமடையும். வாகன பயணம் கவனம். |
| தனுசு | எடுத்த காரியம் முடியும். வெற்றி. மிதமான பணவரவு. நண்பர்கள் மத்தியில் வரவேற்பு. உடல்நலத்தில் கவனம் வேண்டும். குடும்பத்தில் குதூகலம். |
| மகரம் | இன்பம். புது உத்வேகத்துடன் செயற்பட நல்லபலன். தொழிலில் மூலதனம் சேரும். நண்பர்களிடம் இனிமை. விருந்துபசரிப்பு. குடும்பத்தில் மங்கல நிகழ்வு. |
| கும்பம் | பொறுமையும், புத்திசாலித்தனமும் இருக்கும். தொழில் வளம் பெற அனுகூலம். பணவரவில் திருப்தி. நண்பர்களுக்கு உதவுவீர்கள். வீட்டுப் பொருட்கள் சேரும். |
| மீனம் | குடும்ப காரியங்களில் அதிக ஈடுபாடு. உறவினர்களின் உதவி. தொழில் சிறந்து உபரி பணவரவு. மதிப்பு, மரியாதை உயரும். எல்லோருடனும் இன்முகம். |

# பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெரு விளையாட்டு

## கபடியில் நெல்லியடி மத்திய ம.வி. சம்பியன்

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெண்கள் கபடிப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்று யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி சாதனை படைத்துள்ளது. பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கபடிப் போட்டி நேற்று கண்டி பேராதனைப் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வடமாகாணம் சார்பாக யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மற்றும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணிகள் பங்குபற்றின. இதில் யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி, ஊவா-கல தமிழ் வித்தியாலய அணியை முதல் போட்டியில் எதிர்கொண்டது. இதில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 40-8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் அமரசூரிய தேசிய பாடசாலை அணியை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி எதிர்கொண்டது. இதில் 37-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் களனி ஜட்டிகல கனிஷ்ட வித்தியாலய அணியும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும் மோதின. ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 36-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. இறுதியில் போட்டியில் அக்கிரபோதி தேசிய பாடசாலை அணியும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் முற்பாதி ஆட்டத்தில் 12-18 என்ற புள்ளிகள் கணக்கில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி பின்னடைவைச் சந்தித்திருந்தது. இருப்பினும் இதிலிருந்து சுதாகரித்துக் கொண்டு மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அடுத்தடுத்துப் புள்ளிகளைப் பெற்றது. இறுதியில் 30-27 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்று தேசிய மட்டத்தில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இதேவேளை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி நான்காமிடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(12,93)

## காலப்பந்தில் மன்னார் சென்.சேவியர் சம்பியன்

(களுத்துறை)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட காலப்பந்தாட்டப் போட்டியில் மன்னார் சென். சேவியர் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான காலப்பந்தாட்டப் போட்டி நேற்றைய தினம் களுத்துறை பெர்னாண்டோ மைதானத்தில் நடைபெற்றது. இதில் வடமாகாணம் சார்பாக மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் பங்குகொண்டன.

இதில் முதலாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணியும், மாத்தறை சென். தோமஸ் கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே மன்னார் சென். சேவியர் கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தியது. குறிப்பாக, ஜக்சனின் ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் மாத்தறை சென். தோமஸ் அணி திணறியது. இறுதியில் 4-0 என்ற கோல் கணக்கில் சென். சேவியர் கல்லூரி அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. அடிக்கப்பட்ட நான்கு கோல்களையும் ஜக்சன் பெற்றுக்கொடுத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு அரையிறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அணிகள் என்பதாலும், பல முறை மோதிய அனுபவத்தைக் கொண்டிருந்தமையாலும் விறுவிறுப்பாக இப்போட்டி நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த எண்ணத்தை சிதறடிக்கும் வகையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியின் ஆட்டம் அமைந்திருந்தது. ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 5-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி அணியும்மோதின. இதில் முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் தமது ஆட்டத்தை வெளிப்படுத்தின. முற்பாதி ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் சென். சேவியர் அணியைச் சேர்ந்த விமல் ஒரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். இந்நிலையில் 1-0 என்ற கணக்கில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியால் கோல் போடும் முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டபோதும், சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணியின் பிற்கள தடுப்பாளர்களின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் அது முறியடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து விறுகொண்டெழுந்த சென். சேவியர் கல்லூரி அணி 6ஆவது நிமிடத்தில் ஜோன்சனும், 14ஆவது நிமிடத்தில் விமலும், 18ஆவது நிமிடத்தில் ஜக்ஷனும் அடுத்தடுத்து கோல்களை அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர். இறுதியில் சென். சேவியர் கல்லூரி அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

(12, 93)

## தேசியத்தில் சாதனை படைத்தோருக்கு பல தரப்பினரும் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டிகளில் சாதனை படைத்த வடமாகாண பாடசாலைகளான நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி ஆகியவற்றுக்கு விளையாட்டு ஆர்வலர்கள், வடமாகாண கல்வி சார் அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் என பல தரப்பினர் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டிகளில் யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் கடிப் போட்டியிலும், மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணி காலப்பந்தாட்டப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்று வடமாகாணத்திற்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளது. மானிப்பாய் இந்துக் கல்லூரி மூன்றாமிடத்தையும், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி நான்காமிடத்தையும் பிடித்து கொண்டது.

தேசிய மட்டப் போட்டிகளில் வடமாகாணப் பாடசாலை அணிகள் சாதித்திருப்பது விளையாட்டின் மீது வடமாகாண வீர, வீராங்கனைகள் கொண்டிருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வே. இதுவரை இல்லாத வகையில் தேசிய மட்டப் போட்டிகளில் பல அணிகள் பங்குகொண்டிருந்தமை மகிழ்ச்சிக்குரியது. வீர,வீராங்கனைகளின் தனிப்பட்ட முயற்சி மற்றும் பாடசாலை பயிற்றுநர், அதிபர் ஆகியோரின் ஒத்துழைப்பின் மூலமே இந்தச் சாதனைகளை அவர்கள் புரியக் காரணம் என்பதில் சந்தேகமில்லை.

இருப்பினும் இவ்வீர,வீராங்கனைகளின் விளையாட்டின் மீதான ஆர்வத்தை மேலும் வலுப்பெறச் செய்யவேண்டி பொறுப்பு எம் எல்லோருக்கும் உண்டு என்பதை நாம் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இதனை மேலும் வலுவாக்கி இலங்கை தேசிய அணியில் இடம்பிடிக்கக்கூடிய பல வீர, வீராங்கனை துறை சார்ந்தோர் உருவாக்க வேண்டும் என்றும், அதற்கான அனைத்து வசதி வாய்ப்புக்களையும் சம்பந்தப்பட்டோர் வழங்கி அவர்களின் வளர்ச்சிக்குத் துணை புரிய வேண்டும் எனவும் அவர்கள் தமது பாராட்டு, வாழ்த்துக்களில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.)

## கிரிக்கெட் நிபுணராக மிஸ்பா உல் ஹக் நியமனம்

பாகிஸ்தான் அணியின் டெஸ்ட், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் அணித்தலைவர் மிஸ்பா உல்ஹக் - இலங்கையில் இன்று ஆரம்பிக்கவுள்ள உலக ருவென்ரி-20 தொடரின் போது ஒளிபரப்பாளர்களின் சார்பில் கிரிக்கெட் நிபுணர்களில் ஒருவராக இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி 3 வகையான கிரிக்கெட் போட்டிகளின் அணித்தலைவராகவும் செயற்பட்டு வந்த மிஸ்பா உல்ஹக், உலக ருவென்ரி-20 தொடருக்கான அணி அறிவிக்கப்பட்ட போது அணித்தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதோடு அவருக்கு அணியிலும் இடம் கிடைத்திருக்கவில்லை. ஆனால் டெஸ்ட், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் அணித்தலைவராக அவர் தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறார்.

இந்நிலையில் உலக ருவென்ரி - 20 தொடரை ஒளிபரப்புச் செய்யவுள்ள பிரதான தொலைக்காட்சி நிறுவனத்தின் கிரிக்கெட் ஆய்விற்கான நிபுணர்கள் குழுவில் மிஸ்பா உல் ஹக் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தனக்கு இது புதிய அனுபவமாக அமையவுள்ளதாகத் தெரிவித்த மிஸ்பா உல் ஹக், தனக்குச் சிறந்த வாய்ப்பொன்று கிடைத்ததாகவும் அதன் காரணமாக அதை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தப் பணியில் ஈடுபடுவதற்கான அனுமதியை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவருக்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிஸ்பா உல் ஹக் தவிர, ஏற்கனவே இங்கிலாந்து அணியால் நிராகரிக்கப்பட்டுள்ள இங்கிலாந்தின் சர்ச்சைக்குரிய அதிரடித் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சனும் நிபுணர்கள் குழுவில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகக் கிண்ண ருவென்ரி -20 இன்று ஆரம்பம்

ICC WORLD TWENTY20

(கொழும்பு)

நான்காவது ஐ.சி.சி. ருவென்ரி- 20 உலகக் கிண்ணப்போட்டி இலங்கையில் இன்றுஆரம்பமாகின்றது. ஒக்டோபர் 7ஆம் திகதி வரை இந்தப்போட்டி நடைபெறவுள்ளது. இதில் 12 நாடுகள் பங்கேற்கின்றன. அவை தரவரிசை அடிப்படையில் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தின் முடிவின் தரவரிசைப்படி அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் 'ஏ' பிரிவில் இங்கிலாந்து, இந்தியா, ஆப்கானிஸ்தான் அணிகளும், 'பி' பிரிவில் அவுஸ்ரேலியா, மேற்கிந்தியத்தீவு, அயர்லாந்து அணிகளும்,'சி' பிரிவில் இலங்கை, தென்னாபிரிக்கா, சிம்பாப்வேஅணிகளும், 'டி' பிரிவில் பாகிஸ்தான், நியூசிலாந்து, பங்காளதேஷ் அணிகளும் மோதவுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அணிகளும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் சூப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெறும்.

25ஆம் திகதியுடன் லீக் ஆட்டம் நிறைவடையும். இதன் முடிவில் 8 அணிகள் சூப்பர்8 சுற்றுக்கு முன்னேறும். இந்த 8 அணிகளும் சூப்பர் 8 சுற்று முடிவின்படி இரண்டு பிரிவில் இருந்து முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

ஆசியக் கண்டத்தில் உள்ள இந்தியா, பாகிஸ்தான், இலங்கை அணிகள் வலுவானதாக உள்ளது. இதே போல நடப்பு சம்பியனான இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவு அணிகளும் சிறப்பாக ஆடக்கூடியவை. அவுஸ்ரேலியா சமீபகாலமாக மோசமாக ஆடினாலும் உலகின் தலைசிறந்த வீரர்கள் அந்த அணியில் உள்ளனர்.

பாகிஸ்தானுக்கு எதிராக கடைசிப் போட்டியில் பெற்ற வெற்றியால், அந்த அணி நம்பிக்கையுடன் காணப்படுகிறது.

இதேபோல நியூசிலாந்து அணியிலும் திறமையான துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். பங்களாதேஷ், அயர்லாந்து, சிம்பாப்வே போன்ற அணிகளும் முன்னணி அணிகளுக்கு சவாலாக விளங்கக் கூடியவை. சில வேளைகளில் முன்னணி அணிகளுக்கு அதிர்ச்சித் தோல்விகளையும் கொடுக்கக்கூடியவை.

இன்று அம்பாந்தோட்டை மைதானத்தில் இரவு 7.30 நடைபெறும் முதல் ஆட்டத்தில் 'சி' பிரிவில் உள்ள இலங்கை, சிம்பாப்வே அணிகள் மோதுகின்றன.



## ஓய்வை வற்புறுத்தாதீர்


(கொழும்பு)

சச்சின் டெண்டுல்கர் இந்திய கிரிக்கெட்டுக்கு மட்டுமின்றி, சர்வதேச கிரிக்கெட் உலகிற்கும் சொத்து போன்றவர். ஓய்வு பெற வேண்டிய சரியான நேரம் எது என்பது அவருக்கு தெரியும் என்று நான் நம்புகிறேன் என மேற்கிந்தியத்தீவு அணியின் முன்னாள் கப்டன் லாரா தெரிவித்தார்.

விளையாட்டு மைதானத்திற்கு உள்ளேயும், வெளியிலும் அவர் மீது நான் உயர்ந்த மதிப்பு வைத்துள்ளேன். எந்த முடிவு எடுப்பதானாலும் அது அவர் பொறுப்பு. சரியான முடிவை டெண்டுல்கர் எடுப்பார் என்று எனக்குத் தெரியும். அவர் ஒரு சிறந்த ஆட்டக்காரர். அவர் எவ்வளவு காலத்திற்கு விளையாடுகிறாரோ, அதுவரை நாம் பார்த்து இரசித்து மகிழ வேண்டும். அவர் ஓய்வு பெற வேண்டும் என யாரும் வற்புறுத்தக் கூடாது எனத் தெரிவித்தார்.

## ஜப்பான் வீரர் சாதனை

ஜப்பான் நீச்சல் வீரர் அகிஹிரோ யமகுச்சி ஆண்களுக்கான 200 மீற்றர் பிரிஸ்ரோக் போட்டியில் உலக சாதனை படைத்துள்ளார். ஜப்பானின் குடிவில் நடந்த தேசிய விளையாட்டுப் போட்டியில் யமகுச்சி பிரிஸ்ரோக் போட்டியில் 2 நிமிடம் 7.01 வினாடிகளில் முடித்து புதிய உலக சாதனை படைத்தார்.முன்னர் உலக சாதனைக்கு சொந்தம் கொண்டாடிய ஹங்கேரி நாட்டு வீரர் டானியல் கியுர்டாவை விடவும் 0.27 வினாடிகள் குறைவான காலத்தில் அவர் போட்டியை முடித்தார்.கியூர்டா அண்மையில் நடந்து முடிந்த லண்டன் ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கத்துடன் உலக சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் தற்போது உலக சாதனை படைத்த 18 வயது யமகுச்சிக்கு நடந்து முடிந்த ஒலிம்பிக்கில் பங்கேற்க வாய்ப்புகிடைக்கவில்லை. அவர் தெரிவுப் போட்டியில் நான்கு தடவை தங்கம் வென்ற கொசுகே கிடஜிமாவிடம் தோற்றதால் ஒலிம்பிக் வாய்ப்பை இழந்தார்.







யாழ். மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான மழலைகள் விளையாட்டு விழாவில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. யாழ். மாவட்டத்தின் யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் தீவகக்கல்வி வலயங்களின் முன்பள்ளிகளைச் சேர்ந்த மழலைகள் பங்குகொண்டனர். இதில் சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் பல இடம்பெற்றது. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார். மற்றும் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், கல்விப் பண்பாட்டலுல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிச் செயலாளர் விக்கினேஸ்வரன், வடமாகாண சிறுவர் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, மாகாண வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்துகொண்டனர். இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மழலைகளின் விளையாட்டு நிகழ்வுகளையும் காணலாம்.

# அளவெட்டி மத்தியின் மென்பந்து அரையிறுதியில் வள்ளுவர் அணி

(அளவெட்டி)

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு வள்ளுவர் அணி தகுதிபெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விபரம் வருமாறு:

டி பிரிவிற்கான முதல் போட்டியில் காந்திநியூஸ்ரார் அணியும் றொக்கெற் பி அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய காந்திநியூஸ்ரார் அணி 8 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டை இழந்து 55 ஓட்டங்களைப்பெற்றது. 56 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய றொக்கெற் 'பி' அணி 7 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 39 ஓட்டங்களைப்பெற்று 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இரண்டாவது போட்டியில் மைக்கல் அணியும் கணேசன் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய கணேசன் அணி 8 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது. 56 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 5 ஓவர்களில் 2 விக்கெட்டை இழந்து 58 ஓட்டங்களைப்பெற்று 5 விக்கெட்டால் வெற்றிபெற்றது.

மூன்றாவது போட்டியில் பரிஸ் அணியும் கொக்குவில் மத்திய அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய அணி 8 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 52 ஓட்டத்தைப் பெற்றது. 53 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய பரிஸ் அணி 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 41 ஓட்டங்களைப்பெற்று 11 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. நான்காவது போட்டியில் காந்திநியூஸ்ரார் அணியும் உதயதாரகை அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய உதயதாரகை அணி 8 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டை இழந்து 61 ஓட்டங்களைப்பெற்றது. 62 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய காந்திநியூஸ்ரார் அணி 7 ஓவர்களில் 2 விக்கெட்டை இழந்து 62 ஓட்டங்களைப்பெற்று 5 விக்கெட்டால் வெற்றிபெற்றது.

ஐந்தாவது போட்டியில் காந்திநியூஸ்ரார் அணியும் கொக்குவில் மத்திய அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய காந்திநியூஸ்ரார் அணி 8 ஓவர்களில் 4 விக்கெட்டை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. 74 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய அணி 8 ஓவர்களில் 4 விக்கெட்டை இழந்து 61 ஓட்டங்களைப்பெற்று 12 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆறாவது போட்டியில் காமாட்சி டீ அணியும் சங்கானை ஞானவைரவர் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை ஞானவைரவர் அணி 8 ஓவர்கள் நிறைவில் 7விக்கெட்டை இழந்து 66 ஓட்டங்களைப்பெற்றது. 67 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய காமாட்சி டீ அணி 6 ஓவர்களில் 1 விக்கெட்டை இழந்து 67 ஓட்டங்களைப்பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஏழாவது போட்டியில் காமாட்சி பி அணியும் ஏ அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய யுடீ அணி 8 ஓவர்கள் நிறைவில் 7விக்கெட்டை இழந்து 63 ஓட்டங்களைப்பெற்றது. 64 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய காமாட்சி டீ அணி 6 ஓவர்களில் 2 விக்கெட்டை இழந்து 64 ஓட்டங்களைப்பெற்று 5 விக்கெட்டால் வெற்றிபெற்றது.

எட்டாவது போட்டியில் 'பி' பிரிவிற்கான காலிறுதிப்போட்டியில் வள்ளுவர் அணியும் சரஸ்வதி அணியும் பலப்பரீட்சை நடாத்தின. முதலில் துடுப்பெடுத்தாடிய வள்ளுவர் அணி 8 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டை இழந்து 43 ஓட்டங்களைப்பெற்றது. 44 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய சரஸ்வதி அணி 7 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 31 ஓட்டங்களைப்பெற்றதனால் வள்ளுவர் அணி 12 ஓட்டங்களால் வெற்றியடைந்து அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது. (93)

விளையாட்டு செய்திகள்


## எங்களுக்கும் வாய்ப்புண்டு

உலக ருவென்ரி20 தொடரை வெற்றி கொள்வதற்கான அத்தனை தகுதியும் தங்களுக்கும் உள்ளதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார். இலங்கை அணியால் உலக ருவென்ரி-20 தொடரை வெற்றிகொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 15, 20 வருடங்களாக இலங்கை அணியைப் பொறுத்தவரை மிகப்பெரிய தொடர்களில் பங்குபற்றும்போது மிகச் சிறப்பாகச் செயற்படும் இயல்பு காணப்படுவதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, அந்த இயல்பு இலங்கை அணியிடம் இயல்பாக ஏற்பட்டுள்ளது. பொதுவாக அணிகளிடம் இந்த இயல்பு ஏற்படுத்தப்படுவது கடினமானது. அவ்வியல்பு இலங்கை அணியிடம் சிறப்பாகக் காணப்படுவதாகவும்,அதன் காரணமாக சர்வதேச கிரிக்கெட் சபையின் பன்னாட்டுத் தொடர்களில் இலங்கை அணி கடந்த காலங்களில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் நடைபெற்ற வடமாகாண விளையாட்டு விழாவின்போது...









# பொதுநலவாய பிரதிநிதிகளின் யாழ் விஜயம் ஓர் இராஜதந்திர ரீதியான குறியீடு

- த. கடலவன் -

பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் கொழும்பில் இடம்பெற்ற மாநாட்டின் பின்னர் வடக்கிற்கு விஜயம் செய்தனர். குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற பகுதிகளை இவர்கள் பார்வையிட்டுள்ளனர். யுத்த அவலங்களின் பின்னர் எமது மக்கள் மீளவும் தங்களது மறுவாழ்வை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்ற இந்த வேளையில், மேலதிக உதவிகள் தேவைப்படுகின்ற சூழலில் இந்த மக்களினுடைய நலன்கருதி அவர்களது வாழ்விடங்களை நோக்கி சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளை அழைத்துச்சென்றமை பொருளாதார விடயத்தில் இந்த மக்களின் வாழ்வியலை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட ஓர் இராஜதந்திர நகர்வாகும்.

தமிழ் மக்கள் விடயத்தில் அரசியல் தீர்வு என்பது ஒருபுறத்தில் இருக்க, அபிவிருத்தி என்பதும் இன்று முக்கியமானதாக இருக்கின்றது. அந்த வகையில் அபிவிருத்திக்குரிய இலக்கை எட்டுவதற்கு சர்வதேசத்தின் உதவி அவசியமாக உள்ளது. ஏற்கனவே சர்வதேசம் நல்லிணக்கம் தொடர்பில் உரக்கக் குரல் கொடுத்து வருகின்ற இவ்வேளையில் நல்லிணக்கத்துக்குரிய நல் முயற்சிகளில் தமிழர் தரப்பும் இதய சுத்தியுடன் நடந்து கொள்ளவேண்டிய தேவை உருவாகி வருகிறது.

இறுதியாக இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தொடரில் அதன் தலைவர் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் இங்கு முக்கியமானவை. குறிப்பாக நல்லிணக்கம் தொடர்பாக, சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம்



தவறினால் பொதுநலவாயத்தின் நம்பகத்தன்மை சவாலுக்குள்ளாகும் என பொதுநலவாய அமைப்பு தெரிவித்துள்ளது. தனது உள்நாட்டு பிரச்சினையை சமாதானமாகவும், கூட்டாகவும் தீர்ப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் மனவுறுதி மற்றும் ஆற்றலில் சர்வதேச சமூகம் நம்பிக்கையை இழந்தால் அது துரதிர்ஷ்டவசமானதாகும். பொதுநலவாயமானது அரசுகளுக்கிடையிலான பாரிய சக்தியொன்றாக தன்னை வரையறுத்துக்கொள்ளத் தவறியதாக குற்றம் சுமத்துபவர்களுக்கு தானே ஆயுதம் வழங்கிய நிலைக்கு பொதுநலவாயம் தள்ளப்படும் நிலையை இது ஏற்படுத்தும் என பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவின் தலைவர் சேர். அலன் ஹசெல்ஹர்ட் எம்.பி. கூறியுள்ளார்.

நல்லிணக்க செயல் முறைக்கான தொழில் நுட்ப உதவிகளைப் பொதுநலவாயம் வழங்கும் எனக் கூறிய அவர், பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் ஆற்றலில் பொநலவாயம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். எனினும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில்தான் அர்ப்பணிப்புடன் இருப்பதை சர்வதேச சமூகம் நம்பச் செய்வதற்கு அரசாங்கம் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் கூறினார். நாட்டின் அனைத்து சமூகத்தினருக்கும் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான செயன்முறைக்கு காலவரையறை ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் கோரியிருந்தார். வெளிப்படைத் தன்மை, சமாதானம், சமத்துவம் என்பன ஜனநாயக ஸ்திரத்தன்மை மூலம் வலுப்படுத்தப்பட வேண்டும். எமது மாநாட்டின் கட்டமைப்புக்குள், இதற்கான உத்தரவாதத்தை பொது நலவாய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்பார்ப்பார்கள் என அவர் தெரிவித்திருந்தார். இலங்கையின் இறையாண்மையை அத்துமீறுவதற்கு பொதுநலவாயம் முற்படவில்லை எனவும் ஆனால் வெற்றிகரமான உள்நாட்டுத் தீர்வு பூர்த்தியாக்கப்படுவதை காண விரும்புவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இலங்கையில் ஏற்படப்போகின்ற நல்லிணக்க முயற்சியானது அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்புடனேயே ஏற்படுத்தப்படவேண்டும். இம் முயற்சிக்கு சர்வதேச சமூகம் மற்றும் பொதுநலவாய நாடுகள் தமது ஆதரவை வெளிப்படுத்தும் என்பதை தற்போதைய நகர்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இந்த வேளையில் பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள வந்துள்ள 61 நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து இராஜதந்திர ரீதியான கருத்தாடல்களை மேற்கொண்டதுடன் எமது மக்களின் தேவைகள் மக்களின் அபிவிருத்திகள் தொடர்பில் அவர்களுக்கு எடுத்தியம்பியுள்ளார். வெறுமனே குதர்க்க அரசியலை பேசிக்கொண்டிருப்பவர்கள் மத்தியில் அமைச்சர் நிதானமான முடிவுகளை எடுத்து சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார் என்பது வெளிப்படை. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு என்பது மிக மிக அவசியமானதொன்றாகும். அதேவேளை அபிவிருத்தியும் முக்கியமானதாகும். இந்த அபிவிருத்தியை அடைவதற்கு தனியே இலங்கையால் மட்டும் முடியாது. இதற்கு உலக நாடுகளின் அனுசரணையும் அவசியம்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அபிவிருத்தித் திட்டங்களை கொடையாளிகள் பார்ப்பதற்கும் மேலதிக அபிவிருத்திகளை அவர்கள் யாழில் செய்வதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நல்ல சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்தியுள்ளார். பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளை வடக்கிற்கு அழைத்துவந்த அமைச்சர் அவர்களுக்கு வடக்கு நிலைமைகளை எடுத்துக் கூறியதுடன், எமது மக்களின் எதிர்காலத் தேவைகள் தொடர்பிலும் எடுத்தியம்பி, அவர்கள் உதவுவதற்கு சம்மதிக்க வைத்துள்ளார். இன்றையநிலையில், பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளை யாழ்ப்பாணம் அழைத்துவந்தமை இராஜதந்திர ரீதியான ஒரு குறியீடு என்று குறிப்பிட முடியும்.


# கரப்பான் பூச்சி படை: விஞ்ஞானிகள் திட்டம்!

- என். ராமதுரை -

கரப்பான் பூச்சிகளைக் கண்டால் யாருக்குமே ஆகாது. ஆனால் விஞ்ஞானிகள் அப்படி இருக்க முடியாது. ஏனெனில் அவர்கள் முக்கிய பணிகளுக்கு கரப்பான் பூச்சிகளைப் பயன்படுத்த விரும்புகின்றனர். ஆகவே கரப்பான் பூச்சிகளை வைத்து சில ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

இரவில் நீங்கள் கரப்பான் பூச்சியைக் காண நேரிட்டு அதை அடித்துக் கொல்ல முயன்றால் அது மிக வேகமாக ஓடி எங்கேனும் இடுக்கில் ஒளிந்து கொள்ளும். எந்த சிறிய இடுக்கானாலும் அது புகுந்து கொள்ளும். கரப்பான் பூச்சியின் இத் திறனைப் பயன்படுத்துவது விஞ்ஞானிகளின் நோக்கம்.

ரிமோட் கொண்ட்ரோல் மூலம் பொம்மை காரை இயக்குவதை நீங்கள் பார்த்திருக்கலாம். அதுபோல கரப்பான் பூச்சிகளை இயக்குவதற்கு அவர்கள் வழி செய்துள்ளனர். இதற்கென கரப்பான் பூச்சிகளின் முதுகில் அவர்கள் நுண்ணிய மின்னணுக் கருவிகளைப் பொருத்தினர்.



கரப்பான் பூச்சிக்கு இரு "மீசைகள்" இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். இவை உணர் உறுப்புகள் (Antennae). முன்புறத்தில் தடை ஏதேனும் உள்ளதா என்பதை கரப்பான் பூச்சி இந்த உணர் உறுப்புகள் மூலம் அறிந்து கொள்ளும்.

இதே போல கரப்பான் பூச்சியின் பின்புறத்தில் வேறுவித உணர் உறுப்புகள் (cerci) உள்ளன. பின்புறத்திலிருந்து தன்னைப் பிடிக்க ஏதேனும் வருகிறதா என்பதை இந்த உறுப்புகள் கண்டறிந்து தெரிவிக்கும்.




நீங்கள் கரப்பான் பூச்சியை அடிக்க முயலும் போது அது இந்த உணர் உறுப்புகளை வைத்துத் தான் கண்டு கொள்கிறது.

கரப்பான் பூச்சியின் முதுகில் பொருத்தியுள்ள மின்னணுக் கருவிகள் விஞ்ஞானிகள் விரும்புகின்ற வகையில் இந்த இரு உணர் உறுப்புகளும் செயற்படும்படி செய்கின்றன.

விஞ்ஞானிகள் கரப்பான் பூச்சியின் பின்புறத்தில் உள்ள உணர் கருவியைத் தூண்டி விட்ட போது கரப்பான் பூச்சியானது பின்புறத்திலிருந்து ஏதோ தன்னைத் துரத்துவது போல நினைத்து முன்னே வேகமாக ஓடியது. விஞ்ஞானிகள் கரப்பான் பூச்சியின் முகப் பகுதியில் உள்ள உணர் கருவிகளைத் தூண்டி விட்ட போது அது வேறுபுறம் திரும்பி விஞ்ஞானிகள் திட்டமிட்ட திசை நோக்கி ஓட முற்பட்டது.


இவ்விதமாக விஞ்ஞானிகள் விரும்பிய பாதையில் கரப்பான் பூச்சி ஓடும்படி செய்ய முடிந்தது. கரப்பான் பூச்சிகளை இப்படி ஆட்டுவிக்கும் திட்டத்தின் நோக்கம் என்ன?

பூகம்பம் அல்லது ஏதோ விபத்து காரணமாக கட்டிடங்கள் இடிந்து விழும் போது இடிபாடுகளுக்கு அடியில் பலர் சிக்கிக் கொள்கின்றனர். கனத்த கொன்கிரீட் பாளங்களுக்கு அடியில் சிக்குகின்ற அவர்களால் வெளியே வர முடிவதில்லை. மீட்புப் படையினராலும் நெருங்க முடிவதில்லை.

இவ்விதமான நிலையில் முதுகில் கருவிகள் பொருத்தப்பட்ட கரப்பான் பூச்சிகள் உதவும் என்று கருதப்படுகிறது. இடிபாடுகளுக்கு அடியில் ஏதோ ஒரு மூலையில் சிலர் சிக்கியிருக்கலாம் என்று கருதப்பட்டால் அந்த இடங்களை நோக்கி கரப்பான் பூச்சிகள் செல்லும்படி செய்யலாம். கரப்பான் பூச்சி எந்த இடுக்கிலும் நுழைந்து செல்லும் என்பதால் இந்த வேலைக்கு அவை உகந்தவை.

கரப்பான் பூச்சிகளின் முதுகில் உள்ள கருவிகளில் நுண்ணிய கமெராவும் உண்டு என்பதால் குறிப்பிட்ட இடத்தில் யாரேனும் சிக்கிக் கொண்டிருக்கிறார்களா என்று கண்டறிய முடியும். இடிபாடுகளுக்கு இடையே உள்ள இடுக்குகளில் நுழைந்து செல்லும் கரப்பான் பூச்சிகள் மூலம் கிடைக்கின்ற தகவலை வைத்து எந்த இடத்தில் மீட்பு வேலையை மேற்கொள்ள வேண்டும் என்று எளிதில் தீர்மானிக்க முடியும்.

கரப்பான் பூச்சிகளில் எவ்வளவோ வகைகள் உள்ளன. விஞ்ஞானிகள் தங்கள் திட்டத்துக்கு Madagascar Hissing cockroach வகை கரப்பான் பூச்சியைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.



இதற்குப் பறக்கும் திறன் கிடையாது என்பதுதான் காரணம். ஆபிரிக்காவுக்கு கிழக்கே உள்ள மடகாஸ்கர் தீவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்டதால் இவற்றுக்கு அப்பெயர். இவை சுவாச உறுப்புகள் வழியே காற்றை வெளியேற்றி புஸ் என்று சத்தம் எழுப்பக்கூடியவை.

நடத்தப்பட்ட பூர்வாங்க சோதனைகளில் இவற்றை வளைந்த பாதையில் செல்லும்படி செய்வதில் வெற்றி கிட்டியுள்ளது. அமெரிக்காவில் உள்ள வட கரோலினா மாகாண பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் பல சோதனைகள் நடத்தப்பட வேண்டியுள்ளன. இடிபாடுகளின் அடியில் ஒருவர் சிக்கியுள்ளது போன்ற நிலைமையை உண்டாக்கி அவர் இருக்குமிடத்துக்கு கரப்பான் பூச்சிகளை வெற்றிகரமாக அனுப்ப முடிகிறதா என்று சோதித்துப் பார்க்க வேண்டியுள்ளது. இப்படியான சோதனைகளின் பிறகே "கரப்பான்பூச்சி படை"யை ஏற்படுத்த முடியும்.

# தமிழ் சினிமா கைவிட்ட காந்திமதியும் மனோரமாவும்

- குவார்ணிகா -

தமிழ் சினிமா ஒரு காலகட்டத்தை இழந்து கொண்டிருக்கிறது. தமிழ்ச் சினிமாவின் முன்னோடிகள் என்று நாம் யாரையெல்லாம் கொண்டாடினோமோ அவர்கள் தமது இறுதிக் காலங்களை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் திலகம், நடிகர் திலகம், புரட்சித் திலகம் என்ற தமிழ்த் திரையின் மூன்று திலகங்களும் மறைந்து விட்டன. அந்த மூன்றிற்கும் முன்னின்று சண்டையிட்ட வில்லன்களும் மறைந்து விட்டார்கள்.

இடையே ஓடிக்கொண்டிருந்த நகைச்சுவையாளர் களில் அதிகம் பேர் மறைந்துவிட்டார்கள். தற்போது தனது காலத்தையும் நினைவையும் மறந்து கடைசிக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் நடிகை மனோரமா. 1000 படங்களுக்கு மேல் நடித்த பெருமையும் சாதனையும் பெற்றவர் அவர். தமிழ்ச் சினிமாவின் அத்தனை அட்டூழியத்தையும் புரிந்து கொண்டு தமிழகத்தின் முக்கிய முதலமைச்சர்களோ டும் நடித்துக் காட்டியவர்.



1958இல் மாலையிட்ட மங்கை தொடக்க்ம் இப் போதுவரை தனது நடிப்புலக வாழ்வில் கொடி கட்டிப் பறந்தவர். தில்லானா மோகனாம்பாள் படத்தில் ஜில் ஜில் ரமாமணியை மறந்து விடமுடியாதபடி நடித்துக் காட்டியவர். "ஆச்சி" என்றழைக்கப்பட்ட மனோரமா தனது கடைசிக்காலத்தில் அதிகமான குணச்சித்திர வேடங்களில் நடித்துப் புகழ் பெற்றவர்.

ஆனால் இந்த ஆச்சிக்குள் நாம் மறந்துவிட்ட அற்புதமான மற்றொரு நடிகை இருக்கிறார். அவர்தான் காந்திமதி. பழம்பெரும் நடிகை. கிட்டத்தட்ட 350 திரைபடங்களில் பல்வேறு மண்வாசனையுடன் கூடிய குணச்சித்திர வேடங்க ளில் நடித்து பரவலாக "காந்திமதி அக்கா" என அழைக்கப்பட்டவர். இந்தியப் பொதுவுடமை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு அக்கட்சியின் மேடைகளில் பாடியும் புரட்சிகர நாடகங்களில் நடித்தும் வந்தார். எழுத்தாளர் ஜெயகாந்தனின் "உன்னைப்போல் ஒருவன்" திரைப்படத்தின் மூலம் அறிமுகமாகி மூன்றாம்பிறை, சுவரில்லா சித்திரங்கள், கரகாட்டக்காரன் போன்ற மிக முக்கிய படங்களில் நடித்து தக்க இடம் தேடியவர்.

தனது மொழியின் உச்சரிப்பிலேயே தனக்கான பாத்திரத்தை வடிவமைக்கும் பாணியைக் கைவரப்பெற்றவர் அவர். அடியேய்ய்....எடுபட்ட சிறுக்கி... என்பதும் ஒட்ட அறுத்துப்புடுவேன் அறுத்து... என்பதும் அவரது புகழ் பெற்ற வசனங்கள். அவரது கிராமத்தின் உடல்வாகும் உச்சரிப்பும் பாரதிராஜா வைக் கண்டடைய வைத்தது. உடனே 16 வயதினிலே குருவம்மா வந்தாள்.

காதலும் காதல் மறுப்புமே கதையாகிப் போய்விட்ட சினிமாவிற்குள் கட்டறுபட்ட மொழி காந்திமதியின் நடிப்புக்கூடாக சினிமாவின் தரத்தைச் சாத்தியமாக்கியது. இந்த மொழியும் உடல் வாகும் திரையில் பல இடங்களில் மனோரமாவுக்குச் சாத்தியப்படவில்லை. 1000 படங் களுக்கு அதிகமாக நடித்திருந்தாலும் தான் இன்னும் அரவாணியாக நடிக்கவில்லை அந்த ஆசை எனக்கிருக்கிறது என மனோரமா கவலைப்பட்டது உண்டு.

மனோரமாவை விட மிகக் குறைந்தளவு படங்களே காந்திமதி நடித்திருந்தாலும் பெயர் சொல்லும் பாத்திரங்கள் உண்டு. ஆனாலும் தமிழ் சினிமா அவரையும் கைவிட்டது. கமலஹாசன்களும் ரஜனிகாந்துகளும் நிறைந்திருக்கும் தமிழ் நாட்டுச் சினிமாவிற்குள் உண்மையான கலைஞர்களுக்கு வேலையில்லை.



காந்திமதியும் மனோரமாவைப் போலவே நாடகத் துறையில் இருந்து தமிழ்சினிமாவிற்கு வந்தவர். அவரிடம் நடிப்புத் திறன் அதி- கமாகவே இருந்தது. ஆனாலும் அவரை எந்த இயக்குனரும் சரிவரப் பயன்படுத்தவில்லை. ஓரளவுக்குப் பயன்படுத்திய பாரதிராஜாவும் பாக்கியராஜும் தமது கதையை நகர்த்தப் பயன்படுத்தியதோடு விட்டுவிட்டார்கள்.

தற்போது நாடகத்துறை தந்த சினிமாக்காரர்களின் காலம் முடிந்து கொண்டிருக்கிறது. சினிமாவுக்காகவே வாழ்ந்த பெரும் கலைஞர்களும் வாழ்விற்கும் அப்பால் சினிமாவை நேசித்த கலைஞர்களும் மறைந்து கொண்டிருக்கும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சினிமா வெறும் வியாபாரமாகிக் கொண்டிருக்கிறது. சினிமா என்ற மிகப்பெரிய ஊடகம் தமிழ்ச் சமூகத்தில் தவறாகப் பயன்படுத்தப் படுகிறது என்பதைக் கூட அறியாமல் நமது அடுத்த தலை முறையும் பாழாகத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

## துடைப்பமும் ஒழுக்கமும்



"பொது ஒழுக்கம் இல்லாதவர்கள் சமயச் சொற்பொழிவு செய்யலாமா?" என்ற கேள்வியை ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஒருவர் கேட்டார்.

"அழுக்காக இருக்கும் துடைப்பம் தானே வீட்டைக் கூட்டுகிறது" என்று பதிலளித்தார் பரமஹம்சர்.

## யாழ்ப்பாண மையச் சிந்தனையின் விளைவு!

தமிழ்நாட்டில் இருப்பவர்களிடமும் புலம்பெயர்ந்த தமிழர் மத்தியிலும் ஒரு ஒற்றைப் பார்வைதான் இருக்கிறது. ஆனால் இலங்கையில் யதார்த்தம் வேறு மாதிரியாக இருக்கிறது. தனி ஈழம் அல்லது தமிழ் ஈழம் என்பது தமிழ் பேசும் எல்லா மக்களுக்குமானதல்ல. அது அடிப்படையில் யாழ்ப்பாண மையச் சிந்தனையின் வெளிப்பாடுதான்.

இன மோதல் வரலாற்றுக் காலம் தொட்டு இருப்பதாகக் கூறுவது தவறு. எல்லாளனுக்கும் துட்டகாமினிக்கும் இடையிலான மோதல் இன அடிப்படையிலான மோதல் என்று சொல்ல முடியாது. அது அரச பரம்பரை, ஆட்சியதிகாரம் தொடர்பானது. இன்றைய இன முரண்பாட்டுடன் அதைத் தொடர்புபடுத்தக் கூடாது. இன்று நாம் பேசும் இனத்துவம், இன அடையாளம், இன முரண்பாடு என்னும் கருத்துகள் நம் காலத்துக்கே உரியவை. பல வரலாற்றாசிரியர்கள் பலர் இதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்...

இறுதி யுத்தத்தின் முடிவு இந்த மூன்று இனக் குழுக்களின் நிலைப்பாடுகளில் என்ன பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது?

இலங்கையின் எல்லாச் சிறுபான்மை யினரையும் அது மேலும் பலவீனப் படுத்தியிருக்கிறது. சிங்கள - பௌத்த தீவிரத் தேசியவாதத்தை மேலும் பலப்படுத்தியிருக்கிறது. இதுதான் புலிகளின் இந்த 30 ஆண்டுக்காலப் போரின் பலன் என்பது துயரமான விடயம். சிங்கள இதழ் ஒன்றுக்கான நேர்காணலில் "புலிகள் தமிழ் மக்களை நடுக்கடலில் விட்டுவிட்டு நந்திக் கடலில் மூழ்கிவிட்டனர்" எனச் சொல்லியிருந்தேன். இதுதான் யதார்த்தம். புலிகளின் தோல்விக்குப் பல்வேறு காரணங்கள் கூறலாம். என்றாலும் பிர- தான காரணம் புலிகளின் தற்கொலை அரசியல் தான். ஈழத் தமிழ் மக்களி லிருந்தும் ஏனைய இலங்கை மக்களிலிருந் தும் இந்தியாவிலிருந்தும் சர்வதேச நாடுகளிலிருந்தும் அவர்கள் தனிமைப்பட்ட தற்கு அதுதான் காரணம். தமிழ் ஈழ மாயையில் மூழ்கியிருந்த புலம்பெயர்ந்த தமிழர் களையும் தமிழகத் தமிழர்களையும் தவிர, அவர்களுக்கு நேச சக்திகள் என்று யாருமே இருக்கவில்லை. இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். எல்லோரும் குற்றம்சாட்டு வது போல இலங்கை அரசுக்கு எவ்வளவு பங்கிருக்கிறதோ அதேயளவு பங்கு புலிகளுக்கும் இருக்கிறது. அவர்கள்தான் தங்களோடு மக்களையும் இழுத்துச் சென்றனர்.

இத்தோல்வியை விமர்சனபூர்வமாக அணுக யாரும் தயாராக இல்லை. தமிழ்நாட்டிலும் சரி புலம்பெயர்ந்த நாடுகளிலும் சரி ஒற்றைப் பார்வை அணுகுமுறையுடன்தான் இருக்கிறார்கள்.

இந்த 30 வருடப் போராட்டத்திற்கும் இத்துணை இழப்புகளுக்கும் பிறகு இது போன்ற துயரம் தொடரக் காரணம் புலிகளின் அணுகுமுறைதானா?


அப்படித்தான் நான் சொல்லுவேன். புலிகள் இயக்கம் அடிப்படையிலேயே ஒரு இராணுவ அமைப்புத்தான். அவர்களுக்கு என்று தெளிவான, யதார்த்தமான அரசியல் பார்வை இல்லை. அரசி யல் நெளிவுசுளிவுகளில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. 1987இல் இந்திய நிர்ப்பந்தத்தால் வந்த தீர்வை ஏதோ ஒருவகையில் ஏற்றுக்கொண்டு, தங்களை ஸ்திரப்படுத்திக்கொண்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்திருக்கலாம். ஆனால் அவர்கள் இது போன்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டார்கள். மக்களை அரசியல்மயப்படுத்தி மக்கள் சக்தியில் நம்பிக்கை வைக்காமல் ஆயுத முனையில் மக்களை வழிநடத்தினார்கள். தாங்கள், தாங்கள் மட்டுமே, தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதில் உறுதியாக நின்றார்கள். தங்களுடன் கருத்துவேறுபட்டவர்களை எல்லாம் துரோகிகள் என்று அழித்தார்கள். அவர்கள் நம்பியிருந்த ஆயுதப்போர் என்னும் ஒற்றை அணுகுமுறை யால் முதலில் தங்கள் மக்களிடமிருந்தே அன்னியப்பட்டார்கள். பிறகு வெளியிலிருக்கும் எல்லா ஆதரவுச் சக்திகளையும் இழந்தார்கள். அவர்களின் தோல்வி என்பது தவிர்க்க முடியாத தற்கொலைதான்.

தமிழ் பேசும் மக்களுக்குரிய அரசியல் எதிர்காலம் என்ன?

அது பெரிய கேள்விக்குறிதான். அவர்களின் அடிப்படை வாழ்வே கேள்விக்குள்ளாகி இருக்கிறது. சரியான அரசியல் தலைமைத்துவம் இல்லாதிருக்கிறது. இன்றைய நிலைமையில் சிங்களத் தீவிரவாதம்தான் மேலோங்கியுள்ளது. அது சிறுபான்மையினரின் உரிமைக்குச் சாதகமாக இல்லை. தோல்வியில் முடிந்த முப்பது ஆண்டு யுத்தம் சிறுபான்மையினரின் அரசியலைச் சிக்கலான இடத்தில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. அது அண்டிப் பிழைப்போரின் அரசியலாகியிருக்கிறது. மைய நீரோட்டத்தில் மாற்றங்கள் ஏற்படாதவரையில் இது தொடரும் என்றுதான் தோன்றுகின்றது.

மீண்டும் போராட்டம் உருவாவதற்கு வாய்ப்புகள் எவையும் தென்படுகின்றனவா?

இல்லை. புலம்பெயர் தமிழர்கள் இன்னும் தமிழ் ஈழக் கனவில் இருக்கிறார்கள். நாடுகடந்த தமிழ் ஈழம் ஒன்றையும் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். அது அவர்களின் வாழ்தலுக்கான முயற்சியாகவே தெரிகிறது. ஈழத்தில் வாழும் தமிழர்களுக்கு அது எந்தவகையிலும் உதவாது. இன்னொரு



வகையில் அந்தப் பூச்சாண்டியைக் காட்டித்தான் இலங்கை அரசு இராணுவ முகாம்களைப் பலப்படுத்துகிறது. சிங்களத் தீவிரவாதத்தைப் பலப்படுத்தும் பிறிதொரு செயற்பாடுதான் இது. இதைவிட்டுப் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பயனுள்ள காரியங்கள் எத்தனையோ செய்யலாம்.

- கலாநிதி எம்.ஏ.நுஃமான்
(காலச்சுவடு நேர்காணலில்)

# பொது எதிர்க்கட்சியை உருவாக்க ரணிலுடன் விரைவில் பேச்சு

## – பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

பொது எதிர்க்கட்சியொன்றைக் கட்டியெழுப்புவதற்காக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் விரைவில் பேச்சு நடத்தவுள்ளதாக ஜனநாயகக் கட்சித் தலைவர் சரத் பொன்சேகா தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தக் கூட்டணி கட்டியெழுப்பப்படுவதற்கு முன்னர் ஜனநாயக் கட்சியை உத்தியோகபூர்வ அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது குறித்து பொன்சேகா தரப்பினர் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து கடந்த சனிக்கிழமை குருநாகலில் நடைபெற்ற சமய நிகழ்வொன்றின் முடிவில் ஊடகவியலாளருக்கு கருத்துத்தெரிவித்த சரத் பொன்சேகா, எந்தவகையிலாவது பொது எதிர்க்கட்சியொன்றைக் கட்டி யெழுப்புவதாகவும், புதிய அரசியல் கட்சியொன்றைப் பதிவு செய்வதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

தலைமைத்துவம் குறித்து சிக்கல்களை ஏற்படுத்திக் கொள்ளாது பொது எதிர்க்கட்சியொன்றைக் கட்டியெழுப்புவது குறித்து கவனம் செலுத்துவோம என்றே நாம் தொடர்ந்து கூறி வருகிறோம். ஜனாதிபதித் தேர்தலின் போதே தலைமைத்துவம குறித்த தேவை ஏற்படும். அந்த நபர் யார் என்பதை அந்தச் சந்தர்ப்பத்தில் மக்கள் தீர்மானிப்பர். நாம் தற்போது அரசியல் கட்சியொன்றைப் பதிவு செய்ய விணணப்பித்துள்ளோம். எந்த வொரு தேர்தலிலும் போட்டியிடும் வகையிலேயே அந்தக் கட்சி பதிவு செய்யப்படுகிறது.

தேவைப்படின் அடுத்த மாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிடுவது குறித்து நாம் இப்போதிருந்தே கவனம் செலுத்தி வருகிறோம். பொது எதிர்க்கட்சியொன்றை நாம் கட்டியெழுப்புவோம். அரசாங்கம் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகிறது. அரசாங்கத்தின் எவ்வாறான அழுத்தங்கள் இருந்தாலும் நாம் எதிர்க்கட்சியைக் கட்டியெழுப்புவோம். எவ்வகையிலாவது அதனை வெற்றிகொள்வதற்கு நாம் தேவையான நடவடிக்கைகளை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியா சிறுவர் இல்லங்களில் உள சமூக மேம்பாட்டு நிகழ்வுகள்


(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள 15 சிறுவர் இல்லங்களில் உள சமூக மேம்பாட்டு நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்நிகழ்வுகள் எதிர்வரும் ஒக்டோபர் 9 ஆம் திகதி வரை நடாத்தப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த.செல்வகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ் உளசமூக மேம்பாட்டு நிகழ்வுகளின்போது கலை, ஆக்கபூர்வ விளையாட்டுக்கள் என்பன இடம்பெறவுள்ளன. சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களுடைய உள சமூக மேம்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் இந்நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.


இதனை சர்வோதயா நிறுவனத்தின் உதவியுடன் வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்தார்.



சிங்கள, தமிழ் எழுத்துக்கள் நூல் அறிமுகம் நேற்று யாழ்.மாவட்ட செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில நடைபெற்றபோது பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பேராசிரியர் திருமதி கைலைநாதன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், பேராசிரியர் கே.என்.ஓ.தர்மதாச, மும்மொழி இலங்கைக்கான ஜனாதிபதி செயலணியின் பணிப்பாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதனையும், நூல் அறிமுக விழாவில் கலந்து கொண்ட அதிகாரிகளையும் காணலாம்.

(படங்கள்: ஆர்.ராஜகுமார்)

# கோவிந்த மலையைக் கையில் கொண்டு...



**"பொன்னாலயம் பதியில் வரதராஜப் பெருமாளாகவும் துன்னாலயம் பதியில் வல்லிபுர ஆழ்வாராகவும்"**

10 ஆம் உற்சவத்தை துயில் திருவிழா என்று அழைப்பர். மனிதன் பரிபூரண நிலையை அடைய வேண்டும் என்ற தத்துவத்தை இதன் மூலம் விளக்குவர். கோபியர்கள் நீராடச் செல்வதும் அவர்களுடைய ஆடைகளைக் கண்ணன் அபகரித்து அவர்களைப் பக்குவ நிலைக்கு மாற்றுவதும் நாடகமாகக் காண்பிக்கப்படும். அங்கு இசைக்கப்படும் வாய் மொழிப் பாடல்கள் அடியார்களின் மனதை ஈர்க்கும்.

"அடி அடி அக்கக்கா கண்ணன் அங்கடி போறாண்டி"

"சேலையைத் திருடிக் கொண்டு கண்ணன் தெருவழி ஓடுறாண்டி"

"மானம் போகுதடா கண்ணா சேலையைத் தாவேனடா"

"சேலையின் நிறம் சொன்னா பெண்கள் சேலையைத் தருவேனடி"

என்ற பிருந்தாவனக் காட்சி கண்ணனின் லீலைகளை எடுத்துக் காட்டும்.

11 ஆம் உற்சவமாக பாம்புத் திருவிழா இடம்பெறும். அன்று பிருந்தாவனத்திலே ஆயர்களைக் காளிங்கன் என்ற அரக்கன் பாம்பாக மாறித் தொல்லைப்படுத்தினான். அம்மக்களைக் காப்பாற்றுவதற்காக சின்னக்கண்ணன் பொய்கையிலே குதித்து துள்ளி விளையாடி காளிங்கனுடைய கர்வத்தை அடக்கி தன் வாகனமாக்கிக் கொண்டான். இந்நிகழ்வில் நாதஸ்வரம் தனிப் பெருமை பெறும்.

(தொடரும்...)

திரு.ச.யாதவானந்தன்
(ஆசிரியர்)

## "அகிலமெல்லாம் காத்தருள்வாய்"

*அண்டக் குலத்தீசா அரங்கா பரந்தாமா அச்சுதா*
*அண்டி நின்ற திரௌபதி மானம் காத்த நாராயணா*
*அர்ச்சுனர்க்கு தேர் செலுத்தி பகை முடித்த மாதவா*
*அகிலமெல்லாம் காத்தருள்வாய் வல்லிபுரத்தானே.*

தொல்புரத்தூர்
க.லோகேஸ்வரன்.

# மன்னார் மேல்நீதிமன்றுக்கு 43 வழக்குகள் மாற்றம்

வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வந்த 43 வழக்குகள் மன்னார் மேல்நீதிமன்றில் விசாரணைக்காக கையளிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மேல்நீதிமன்றம் கடந்த ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதுடன் மேல்நீதிமன்ற நீதிபதியாக எஸ்.தியாகேந்திரன் நியமனம் செய்யப்பட்டிருந்தார். ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் மன்னாரில் மேல்நீதிமன்றத்தின் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் மன்னார் நியாயாதிக்க எல்லைக்குள் நிகழ்ந்த குற்றச் சம்பவங்கள் தொடர்பாக வவுனியா மேல்நீதிமன்றில் நடைபெற்ற 43 வழக்குகள் மன்னார் மேல்நீதிமன்றில் விசாரணைக்காக மாற்றப்பட்டுள்ளன.

இந்தநிலையில் கொள்ளை வழக்குகள் - 3, கொலை வழக்குகள் - 2, கொலை முயற்சி வழக்குகள் - 2, பாலியல் வல்லுறவு வழக்கு - 1, பாலியல் வல்லுறவிற்கு முயற்சித்தல் தொடர்பான வழக்கு - 01, அபாயகரமான ஆயுதங்களை வைத்திருந்தமை தொடர்பான வழக்குகள் - 7, ஹெரோயின் போதைவஸ்து வழக்குகள் - 2, கஞ்சா போதைவஸ்து வழக்கு - 1, விடுதலைப்புலிகள் தொடர்பான வழக்குகள் - 11, தடை செய்யப்பட்ட பொருட்கள் கடத்தியமை தொடர்பான வழக்குகள் - 10, பண மோசடி வழக்கு - 1, இலஞ்சம் வாங்கியமை தொடர்பான வழக்குகள் - 2 ஆகிய 43 வழக்குகளே வவுனியா மேல் நீதிமன்றத்திலிருந்து மன்னார் மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளன.

# வீதிக்கடவை குறியீடுகள் இல்லை; மன்னார் மாணவர்கள் பெரும் சிரமம்

(மன்னார்)

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் வீதிகளுக்கு முன் உள்ள பாடசாலைகளுக்கு செல்வதற்கான வீதிக்கடவைகள் மற்றும் ஏனைய பாதுகாப்புக் குறியீடுகள் இல்லாததன் காரணத்தினால் மாணவர்கள் குறித்த வீதியைக் கடந்து பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோரும், மாணவர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் வாகனப் போக்குவரத்துக்கள் அதிகரித்த நிலையில் உள்ளன. இதனால் குறித்த வீதியில் உள்ள உயிலங்குளம் மற்றும் முருங்கன் ஆகிய பாடசாலைகளுக்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் பிரதான வீதியூடாக நடந்தும், துவிச்சக்கர வண்டிகளிலும் செல்கின்றனர்.

எனினும் குறித்த மாணவர்கள் வீதியை விட்டுக் கடந்து பாடசாலையினுள் செல்வதற்கும், பாடசாலை முடிந்து வீதியைக்கடந்து வீடு செல்வதற்கும் பல மணி நேரம் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீதியில் மஞ்சள் கோட்டு கடவை மற்றும் வீதிப் போக்குவரத்துப்பிரிவு பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கை எவையும் அங்கு இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதனால் விபத்துக்களும் ஏற்படுகின்றது.

எனவே மன்னார் நகரில் உள்ள பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் முன்னரும், முடிவடைகின்ற போதும் மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதிப்போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மிகவும் அர்ப்பணிப்புடன் பாடசாலைகளுக்கு முன் நின்று குறித்த சேவையினை செய்து வருகின்றனர்.

குறித்த சேவைகள் போன்று குறித்த பகுதிக்குப் பொறுப்பான முருங்கன் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதிப் போக்குவரத்துப்பிரிவு பொலிஸார் செயற்பட வேண்டும் என மாணவர்களும்,பெற்றோரும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸின் பணி அளப்பரியது

## - கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண முன்பள்ளிக் கல்விச் சமூகத்தின் அபிவிருத்தி செயற்திட்டங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறந்த ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கும் நல்வழிகாட்டியாகத் திகழ்கின்றார் என மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன தினம் இடம்பெற்ற இவ்வாண்டுக்கான மழலைகள் விளையாட்டு விழாவில் தலைமையுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்ட முன்பள்ளி மாணவர்களை ஒருங்கிணைத்து இந்நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது. முன்பள்ளிகளை அடித்தளமாகக் கொண்டே எமது எதிர்கால சமூகத்தின் மூலதனமான ஆரம்பக்கல்வியை வழங்க வேண்டுமென்பதிலும் அதற்கு சரியான வழிகாட்டலும் கற்பித்தலும் முக்கியமானது என்பதிலும் அமைச்சரின் பணிப்புரைக்கமைய நாம் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றோம்.

அந்த வகையில்தான் ஏனைய மாகாணங்களை விட வட மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் மாதாந்த வேதனம் கொடுக்கப்படுவதாகவும் இது விடயம் தொடர்பில் மாகாண ஆளுநரும் பல்வேறு செயற்திட்டங்களை நடை முறைப்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தி ஊடான சமூக மேம்பாடு தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவா்னந்தா மிகுந்த அக்கறை செலுத்திவரும் அதே வேளை அதுதொடர்பான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி நல்வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகின்றார் என்றும் தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் உள்ளிட்ட கல்வித்துறை வளர்ச்சிக்காக பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார் என்றும் சுட்டிக்காட்டினார்

# வலிமேற்கு பிரதேச அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2012 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்திரி அலன்ரின், முருகேசு சந்திரகுமார் ஆகியோர் தமது நிதிமூலம் வலி மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குள் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு 6 இலட்சம் ரூபா ஒதுக்கியுள்ளனர். இதன்படி அமைச்சர் மற்றும் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர்.

திருவள்ளுவர் சனசமூக நிலையத்திற்கு தளபாடக்கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25ஆயிரம் ரூபாவும், வளர்மதி விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25ஆயிரம் ரூபாவும், ஒதுக்கியுள்ளனர்.

மேலும் முருகேசு சந்திரகுமார் அவர்களால் மாதர் சங்கத்திற்கு தளபாடக்கொள்வனவு (கதிரை) க்கென 1 இலட்சம் ரூபாவும், அண்ணா சனசமூக நிலையத்திற்கு கணினி கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், கலைவாணி சனசமூக நிலையத்திற்கு புனரமைப்புக்கென 50 ஆயிரம் ரூபாவும், மனிதவள சனசமூக நிலையத்தின் புனரமைப்புக் கென 50ஆயிரம் ரூபாவும், தமிழ்த்தாய் சனசமூக நிலையத்திற்கு சனசமூக நிலையத்தின் அணைகட்டுவதற்கு 1இலட்சம் ரூபாவும்,, அம்பாள் சனசமூக நிலையத்திற்கு புனரமைப்புக்கென 50 ஆயிரம் ரூபாவும், பாரதி சனசமூக நிலையத்திற்கு தளபாடக் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், சமாதானக் கோட்டை முன்பள்ளி புனரமைப்புக்கென 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளனர்.

## தடைசெய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கை குறித்து அறிவுறுத்தல்

(முல்லைத்தீவு)

திருகோணமலை கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் முல்லைத்தீவு கொக்கிளாய் கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மீனவர்களுடன் சந்தித்து கலந்துரையாடினர்.

அதன்படி முல்லைத்தீவு முகத்துவாரம் பகுதியில் உள்ள சிங்கள மீனவர்களுடனும் புல்மோட்டை பகுதியில் உள்ள முஸ்லிம் மீனவர்களுடனும் அந்தந்த பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று கலந்துரையாடினர்.

இதன்போது கொக்கிளாய் பகுதியில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது. இதனால் கொக்கிளாய் பகுதி மீனவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இம்மீனவர்களின் வாழ் வாதார நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு தடைசெய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வது முற்றாக நிறுத்தப்பட வேண்டுமெனவும் இது குறித்து மீனவர்கள் கவனம் செலுத்துமாறும் இனிவரும் காலங்களில் இந்நட வடிக்கை தொடருமானால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்களத்தினரால் குறித்த மீனவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. (04)



கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளையில் அண்மையில் நடைபெற்ற தரம் 5புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவத்தின் போது பரிசு பெற்ற மாணவர்களுடன் வங்கி உத்தியோகத்தர்கள் விருந்தினர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதைக் காணலாம். (11)

# பதிவிறக்கப் பெட்டகம்

நாம் வாழ்வதோ அரசியல் என்பதோ பொருளாதாரம்தான் என்று முடிவாகிவிட்ட காலம். பங்குச்சந்தை நிலவரங்கள் புனிதமான அந்தஸ்தை பெற்றுவிட்டன. தேசத்தின் ஆரோக்கியமே பங்குச்சந்தை குறியீட்டு எண்ணில்தான் இருக்கிறது. எனக்கு மாட்டு சந்தை, காய்கறி சந்தை எல்லாம் புரிகிறது. பங்கு சந்தை என்றால் என்னவென்றே புரியவில்லை. அதை விளக்கி ஏன் பங்குச்சந்தை தேசத்தின் ஆரோக்கியத்தின் அறிகுறி என்று யாராவது சொல்லித் தந்தால் பரவாயில்லை. ஒன்று புரிகிறது. பங்குச்சந்தை வளர்ச்சி என்பது முதலீட்டின் பெருக்கம். முதலீடு பெருகினால் அது சும்மாயிருக்க முடியாது. எதையாவது உற்பத்தி செய்துதான் தீரவேண்டும். உற்பத்தியாகும் பொருட்களை யாராவது நுகர்ந்துதான் தீரவேண்டும். ஒட்டுமொத்தமாக உற்பத்தியும், நுகர்வும் அதிகரித்துக்கொண்டே இருப்பதுதான் பொருளாதார வளர்ச்சி. எனக்கு இதில் எந்த ஐயமும் இல்லை. பிரச்சினைதான் இருக்கிறது. நுகர்வு தேவையா? உற்பத்தி தேவையா என்ற கேள்வியை யார் கேட்பது? முதலீட்டியத்தின் ஆரம்பகட்ட வளர்ச்சியில் சீனி என்ற, அதுவரை மானுடம் பொருட்படுத்தியிராத வஸ்துவின் புதிய வடிவத்தை எல்லோர் வாழ்க்கையிலும் தேநீர், காப்பியின் மூலம் இன்றியமையாததாக மாற்றியதற்கு முக்கிய பங்கு இருக்கிறது. அந்த காலத்தில் காப்பி இல்லை; தேநீர் இல்லை என்பது மட்டுமல்ல – சீனியும் இந்த வடிவில் இருக்கவில்லை. அடுத்தது புகையிலை. அது பற்றி நான் கூறவேண்டியதில்லை. உங்களுக்கே தெரியும். சோழர் காலத்தில் என்ன உறையூரில் புகையிலையா பயிரிட்டார்கள்? தேவையற்ற பொருள்களை இன்றியமையாததாக மாற்றி அவற்றின் உற்பத்தியையும், நுகர்வையும் பெருக்குவதுதான் முதலீட்டியம் என்று நான் புரிந்து கொள்கிறேன். அதன் முற்றிய வடிவம்தான் அணு உலை.

**– ராஜன்குறை**

வாழ்தல் என்பது முகம் அழிந்து போதல் என்றும் ரசனை அற்றுப் போதல் என்றும் சுயநலமாகச் சுருளுதல் என்றும் நகரம் எனக்கு நாளும் கற்பிக்க முயலுகையில், அதில் முகம் அழிந்து போகாமல், என்னை நான் மறுபடி மறுபடி கண்டெடுத்துக் கொள்ளும் முயற்சிகள் தாம் என் படைப்புலகம். கண் முன்னால் நாஞ்சில்நாடு என்ற படைப்புலகம், படைப்புக் களம் கொட்டிக் கவிழ்ந்து கொண்டிருப்பதை நான் வலியுணரும் சாட்சியாக நின்று கவனித்துக் கொண்டிருக்கிறேன். பதினைந்து ஆண்டுகள் வரை என்னுடன் சேர்ந்து விளையாடிய, பள்ளியில் படித்த மனிதன் எனக்கு அந்நியமாகி வருவதைக் காண எனக்கு ஆயாசமாக இருக்கிறது. நாஞ்சில் நாட்டின் மொழி, பண்பாடு, மதிப்பீடுகள், விவசாய நுணுக்கங்கள் எல்லாம் தளர்ந்து போய்க் கொண்டிருக்கின்றன என்று என் படைப்புலகம் உங்களுக்குப் புலப்படுத்தும். ஆனால் அது என் சாதி சார்ந்த அக்கறைகள் மட்டுமே எனப் புரிந்துகொள்ளப் படுமானால், என் தீப்பேறு என்பதைத் தவிர எனக்குச் சொல்ல வேறொன்றுமில்லை.

**– நாஞ்சில் நாடன்**

வண்டிகளை இழுப்பதற்காக இவ்வுலகத்தில் பிறந்திருக்கிறோம் என்பதே குதிரைக்குத் தெரியாது. அதற்கு அந்த புரிதல் இல்லை. ஏதோ சவுக்கடி படுவதற்காகத் தான் பிறந்திருக்கிறோம் என்று அது நம்புகிறது. அடி தன் மேல் கடுமையாக விழும்போது தான் தப்பி ஓடி விடக்கூடாது என்பதற்காக, தான் கட்டப்பட்டுள்ள மாபெரும் பளு தான் வண்டி என்றேதான் குதிரை நம்பிக்கொண்டிருக்கிறது. **– கூட்சீ**

தன்னைத்தானே தூய்மைப்படுத்திக்கொண்டு விடாமல் எல்லா உயிரிடத்திலும் தன்னை ஒன்றுபடுத்திக் கொள்வது என்பது முடியாத காரியம். தம்மைத்தாமே தூய்மைப்படுத்திக் கொள்ளாமல் அகிம்சை தருமத்தை அனுசரிப் போமென்பது வெறும் கனவாகவே முடியும். மனத்தூய்மை இல்லதார் என்றுமே கடவுளை அறிதல் இயலாது. ஆகையால் தம்மைத் தாமே தூய்மைப்படுத்திக் கொள்வது என்பது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தூய்மை அடைவதாகும். தூய்மைப்படுத்திக் கொள்ளுவது என்பது வெகுவிரைவில் மற்றவர்களுக்கும் தொத்திக்கொள்ளும் தன்மை உடையதாகையால், ஒருவர் தம்மைத் தாமே தூய்மைப்படுத்திக் கொள்ளுவதனால் அவசியமாக தம்முடைய சுற்றுச்சூழலையும் தூய்மைப்படுத்தி விடுவதாகிறது.

**– மகாத்மா காந்தி**

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

வரலாறு | 33 | T | I |

ஆசிரியர் : V.முரளி

*எல்லா வினாக்களுக்கும் விடை தருக*
*மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்திற்கு புள்ளடியிடுக*

1. இலங்கை வரலாற்றினை எடுத்துக் கூறும் மூல நூலாகக் கொள்ளத்தக்கது.
   1) சூளவம்சம் 2) மகாவம்சம்
   3) ராஜாவலிய 4) தீபவம்சம்

2. இந்தியாவின் ஆரியக்குழுவினரின் இராச்சியத் தலைவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
   1) காமினி 2) மகாபிரஹ்ம
   3) ராஜன் 4) ஜீவக

3. பாகின்கல, பதியகம்பல, பொம்பரிப்பு ஆகிய பிரதேசங்களின் பொது இயல்பாவது
   1) ஆதிக்குடிகள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் உள்ளன.
   2) வெளிநாட்டவரின் ஆக்கிரமிப்பிற்குட்பட்டமைக்கான சான்றுகள் உள்ளமை.
   3) புராதன குளங்கள் அமைந்த பகுதிகள்.
   4) புராதன பௌத்த சின்னங்களைக் காணலாம்.

4. 4 ஆவது பௌத்த மாநாடு நடைபெற்றது எம்மன்னனது ஆட்சியில்?
   1) பிம்பிசாரன் 2) அஜாதசத்துரு
   3) தர்ம அசோகன் 4) கனிஷ்க

5. கி.பி 5 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்தவர்களுக்கு பொருத்தம் இல்லாத விடயம்
   1) திரிபிடகம் நூல் வடிவம் பெற்றமை.
   2) ருவன்வெலிசாய அமைக்கப்பட்டமை.
   3) புனிததந்ததாது இந்நாட்டிற்குக் கொண்டு வரப்படல்
   4) குட்டம்பொக்குன நிர்மாணம்.

6. "எல்லா நாட்டு மக்களும் என் குழந்தைகளே அவர்களது சுயநலனைப் பேணுதல் என் கடமையாகும்" எனக் கூறிய இந்திய ஆட்சியாளன்,
   1) பிம்பிசாரன் 2) சந்திர குப்த மௌரியன்
   3) அசோகச்சக்கரவர்த்தி 4) சமுத்திர குப்த மௌரியன்

7. இலங்கை வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கையை மிக நீண்ட காலம் ஆட்சிசெய்த மன்னன்
   1) பண்டுகாபயன் 2) துட்டகைமுனு
   3) 2ம் பராக்கிரமபாகு 4) மாயாதுன்னை

8. கிழக்கு உரோம் பேரரசின் தலைநகரமான கொன்ஸ்தாந்திநோபிளை துருக்கியர் கைப்பற்றியது
   1) கி.பி 1215 2) கி.பி 1453
   3) கி.பி 1688 4) கி.பி 1789

9. கப்டன் டோசன், மேஜர்ஸ்கின்னர் ஆகியோர் இலங்கையில் எத்துறை விருத்தியில் அக்கறை காட்டினர்?
   1) கல்வி 2) தபால் சேவை
   3) பெருந்தோட்டத்துறை 4) பெருந்தெரு

10. மத்தியகால ஐரோப்பாவில் வாழ்ந்த புகழ்பெற்ற கலைஞர்கள்ளான டாண்டே, பெட்ரக், பொக்காசியோ ஆகியோர் வாழ்ந்த நாடு எது?
    1) ஜேர்மனி 2) பிரித்தானியா
    3) இத்தாலி 4) பிரான்ஸ்

11. 1931 இல் அமைக்கப்பட்ட டொனமூர் யாப்பின்படி அரசுக்கழக உறுப்பினர் தொகை.
    1) 61 2) 37
    3) 101 4) 225

12. பிரித்தானியாவின் கைத்தொழிலுக்கு வழிவகுத்த கைத்தொழிற்புரட்சி எது?
    1) நெசவுத்தொழில் 2) இரும்புருக்கு
    3) நிலக்கரி 4) மட்பாண்டக் கைத்தொழில்

13. பொலனறுவை மன்னனான 1 ஆம் விஜயபாகு மணந்த திலோக சுந்தரி எவ்வம்சத்தவர்?
    1) சாளுக்கிய 2) பாண்டிய
    3) கலிங்க 4) பல்லவ

14. கி.பி. 1206 -1290 வரை வட இந்தியப் பிரதேசத்தை ஆட்சிசெய்த முதல் மொகலாய ஆட்சியாளன்,
    1) குத்புதீன் அயிபெக் 2) கியாஸ் உத்தின்பல்வன்
    3) ரசியா 4) இத்துத்மிஸ்

15. பின்வருவனவற்றுள் யாழ். இராசதானி தொடர்பான சரியான கூற்று,
    1) யாழ். இராச்சியத்தின் தலைநகர் நல்லூர்
    2) சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரை எதிர்த்தான்.
    3) போர்த்துக்கேயர் கைப்பற்றும் வரை யாழ். இராச்சியம் விஜயநகரபேரரசின் ஒரு பகுதியாக இருந்தது.
    4) யாழ். இராச்சியம் சிதைவுற உள்நாட்டுக் குழப்பங்களே காரணம்.

16. காம்போஜம் அல்லது கம்பூச்சியா எனப்பட்ட பிரதேசம் இந்துமத ஆட்சியாளனால் ஆளப்பட்டது. அது எம் மன்னன்?
    1) பிரேந்ரா 2) சுரேந்ரா
    3) ஷைலேந்ரா 4) ஜயேந்ரா

17. கோட்டை இராச்சியத்தில் விஜயபாகு கொள்ளை நிகழ்ந்த ஆண்டு எது?
    1) கி.பி 1512 2) கி.பி 1518
    3) கி.பி 1521 4) கி.பி 1543

18. மறுமலர்ச்சி காலத்தில் காண முடியாத விசேட இலட்சணமாவது,
    1) வெவ்வேறு கலைகள் தோற்றம் பெற்றமை
    2) மனிதரைவிட தெய்வம் உயர்வாகக் கருதப்பட்டது.
    3) கிரீக், இலத்தின் மொழிகள் விருத்தி பெற்றமை
    4) கலைகள் பௌதீகப் பண்புகளாகப் போற்றப்பட்டது.

19. கி.பி 1875 இல் வித்தியாலங்கார பிரிவேனாவை அமைப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த பிக்கு,
    1) ஹிக்கடுவ சுமங்களதேரர்
    2) பலனசித்தார்த்த தேரர்
    3) மீதெட்டுவத்தை குணானந்த தேரர்
    4) ரத்மலானதர்மாலோக தேரர்

20. இந்தியாவிற்கு வந்த முதல் ஆரியக்குழுவினரின் குடியேற்றம் எது?
    1) சப்த சித்து 2) குருஷேத்ர
    3) ராஜஸ்தான் 4) குஜராத்

21. 1ஆம் விஜயபாகுவின் காலத்தில் வாழ்ந்தவர்களுக்குப் பொருந்தாத விடயங்களைக் கொண்ட தொகுதி,
    A. மகிந்ததேரரின் வருகை
    B. ரன்கொத்விகாரை நிர்மாணம்
    C. பாகியன் என்ற பிக்குவின் வருகை
    D. கலிங்கமாகனின் படையெடுப்பு
    E. காசியப்பனுக்கும் முகலனுக்குமிடையிலான யுத்தம்

    1) AB 2) AC 3) BD 4) DE

22. நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்தகாலத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படல் தவிர்க்க இயலாதது. அதனை மறந்து செயற்படலானது அத்திவாரமின்றி கட்டடம் கட்டுதல் போன்றது இது யாருடைய கூற்று?
    1) மகாத்மா காந்தி 2) ஜவகர்லால் நேரு
    3) அரிஸ்டோட்டல் 4) ஈ. எச், கார்

23. கீழைத்தேசங்களுக்கு வந்து ஐரோப்பியர் முதலாம் நிரலிலும் அவர்களது மத்திய நிர்வாக மையங்கள் இரண்டாம் நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாகத் தொடர்புபடுத்தினால் கிடைக்கும் விடை.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| i) ஆங்கிலேயர் | A. பாண்டிச்சேரி |
| ii) போர்த்துக்கேயர் | B. பத்தேவியா |
| iii) பிரான்சியர் | C. கோவா |
| iv) ஒல்லாந்தர் | D. மெட்ராஸ் |

    1) DCBA 2) CDBA
    3) BCDA 4) DCAB

24. 14 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் வடபகுதி "விஜயநகரப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்தமையை கூறும் தென்னிந்திய இலக்கிய மூலாதாரம் எது?
    1) ஆலம்பூண்டி 2) ஆர்ப்பக்காமம்
    3) பல்லவராயன் பெட்டி 4) திருவாலங்காடு

25. வெளிநாட்டு வர்த்தகத்தில் இலங்கை முக்கிய இடம் வகித்ததாக கொஸ்மஸ்ஸின் அறிக்கை கூறுகிறது. இதன்மூலம் தெரிவிப்பது,
1) புராதன காலத்தில் நாடுகாண் பயணிகள் இந்நாட்டிற்கு வந்துபோனமை
2) பருவக்காற்றுகளின் துணையுடன் கடற்பயணங்கள் இலகுவாயிருந்தமை.
3) புராதன காலத்தில் இலங்கை வெளிநாட்டு வர்த்தகத்தில் மத்திய நிலையமாகச் செயற்பட்டமை.
4) கடற்பயணங்களுக்கு ஆதரவளிப்பதில் இலங்கை முன்னோடியாக இருந்தமை.

26. கீழே தரப்பட்டுள்ள விடயங்களுள் ஐக்கிய நாடுகள் சபை பற்றிய விடயங்களை மட்டும் கொண்ட விடை எது?
A. இனங்களுக்கிடையில் நட்புறவைப் பேணல்.
B. குறித்த வலயத்துக்குட்பட்ட மக்களின் நலனைப் பேணல்.
C. சர்வதேச ரீதியில் சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணல்.
D. அங்கத்துவ நாடுகளுக்கிடையில் மத்தியஸ்தம் வகித்தல்.
E. அங்கத்துவ நாடுகளின் தொடர்புகளைப் பேணல்

1) AB 2) AC 3) BC 4) DE

27. இலங்கையின் புராதன கால மன்னரின் பிரதான கடமையும் பொறுப்புமாக இருந்த விடயங்கள்,
1) நாட்டினுள் எல்லா இடங்களிலும் விகாரைகள் அமைத்தல்.
2) நெற்செய்கைக்கான நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
3) அரச தர்மத்தின்படி நாட்டை ஆட்சிசெய்தல்
4) உணவுற்பத்தியின் மூலம் மக்களின் தேவையை நிறைவு செய்தல்.

28. தம்பதெனியவை இலங்கையின் இராசதானியாக்கிய மன்னன்,
1) III ம் விஜயபாகு 2) Iம் புவனேகபாகு
3) II ம் பராக்கிரமபாகு 4) IIIம் பராக்கிரமபாகு

29. மகதப் பேரரசை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட முதல்மன்னன் யார்?
1) பிரம்மதத்தன் 2) வேதேகன்
3) கெசொல் மன்னன் 4) பிம்பிசாரன்

30. 1931 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட டொனமூர் யாப்பின் பிரதான நிர்வாக நடவடிக்கையாக கொள்ளத்தக்கது.
1) அரசுக்கழகத்தின் மூலம் இலங்கையை நிர்வகித்தமை.
2) சர்வசன வாக்குரிமையை வழங்கியமை.
3) முக்கிய அமைச்சுக்கள் யாவும் பிரித்தானியர் வசமானமை.
4) பிரதேசவாரி பிரதிநிதித்துவம் தேசியத் தலைவர்களுக்கு வழங்கப்படாமை.

31. கைத்தொழிற்புரட்சிக்கு வழிவகுத்த ஓடும் விசைத்தறியைக் கண்டு பிடித்தவர்,
1) எட்மன்ட் காட்ரைட் 2) ஜேம்ஸ் ஹாங்ரிவூஸ்
3) எலியஸ் ஹோவே 4) ஜோன்கே

32. கி.பி 1594 தந்துரே யுத்தத்தில் கொல்லப்பட்ட போர்த்துக்கேயத் தளபதி
1) லோபெஸ் த சூசா 2) கொன்ஸ்டைன் த சா
3) ஜெரனிமோ த அசவேது 4) தியோகுத மெல்லோ

33. இலங்கையர்கள் எல்லோரையும் ஒரே பிரிவிற்குரிய வாக்காளர்களாகக் கொள்வது எத்தேர்தலின்போது?
A. மாகாணசபைத் தேர்தல்
B. மக்களின் விருப்புரிமையைக் கோருகையில்
C. நாடாளுமன்றத் தேர்தல்
D. ஜனாதிபதி தேர்தல்
1) AB 2) BD 3) BC 4) CD

34. இரண்டாம் யுத்தத்துடன் தொடர்புடையோரை முதலாம் நிரலிலும் அதன் ஆட்சியாளர்கள் இரண்டாம் நிரலிலும் தரப்பட்டுள்ளது. அவற்றைச் சரியாகத் தொடர்புபடுத்தினால் கிடைக்கும் விடை,

| நிரல் I | நிரல் II |
|---|---|
| A. பெரிய பிரித்தானியா | F. டிகோல் |
| B. பிரான்ஸ் | G. முசோலினி |
| C. ஜேர்மனி | H. சர்ச்சில் |
| D. இத்தாலி | I. ஹிட்லர் |
| E. ரஷ்யா | J. ஸ்டாலின் |

1) HFIGJ 2) FGJHI 3) HFJGL 4) HJGIF

35. தோப்பாவாவியை அமைத்த மன்னன்,
1) Iம் அக்போ 2) இளநாகன்
3) IIம் முகலன் 4) Iம் உபதிஸ்ஸ

36. வட இந்தியாவை ஆட்சி செய்த முஸ்லிம் பேரரசின் தலைநகரமான டில்லியை தேவகிரிக்கு மாற்றிய மன்னன் யார்?
1) மொகமட் பின் துக்ளக் 2) அலாவுதீன் பல்ஜி
3) பிருஷ்ஷா 4) கியாஸ் உத்தீன் பல்பன்

37. முதலாம் இராஜசிங்கனால் வீண் பழி சுமத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட கொனப்பு பண்டாரவின் தந்தை யார்?
1) விதிய பண்டார 2) வீர சுந்தர பண்டார
3) ஜயவீர பண்டார 4) றைகம் பண்டார

38. பிரித்தானிய ஆட்சியாளர்கள் திருகோணமலைத் துறைமுகத்தைக் கைப்பற்ற முனைந்தமைக்கான காரணமாவது,
i) திருகோணமலையைக் கைப்பற்றுவதன் மூலம் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றலாம் என எண்ணியமை.
ii) வாசனைத் திரவியங்களுக்கு புகழ்பெற்ற இடமாக விளங்கியமை.
iii) திருகோணமலைக்கு அண்மையில் கடலில் கலக்கும் மகாவலி கங்கையினூடாக நாடுபூராவும் பயணிக்க எண்ணியமை.
iv) இராணுவ நடவடிக்கைகளுக்கு திருகோணமலை பொருத்தமான இடத்தில் இருந்தமை.

39. வாயிற் காப்போனது தந்திரத்தால் அரச உரிமையை இழந்த சிங்கள மன்னன்.
1) யஸலாலகதிஸ்ஸ 2) குட்டகதனாதிஸ்ஸ
3) ஜேட்டயிதிஸ்ஸ 4) வோகரிகதிஸ்ஸ

40. வலகம்பா மன்னனது ஆட்சிக் காலத்தில் மாயரட்டைப் பிரதேசத்தில் கிளர்ச்சி செய்தவன் யார்?
1) பண்டுல 2) கிரி
3) தீய 4) ஆலார

---

பகுதி I (கட்டாயமானது)

01)
அ. i) இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

(கதம்பநதி, ஜனநாதபுரம், மாதுறுஓயா, மின்னேரியா குளம், கம்பளை. களுத்துறை, கொடவாய, மகியங்கனை, பலாங்கொடை, காலி)

ii) உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக
( குவாங்கோ நதி, மும்பாய், ரங்கூன், சுவிற்சர்லாந்து, பனாமாக் கால்வாய், மத்தியதரைக் கடல், குவைத், மகலன் தொடுகடல்)

ஆ) i) ABCD எனத் தரப்பட்டுள்ள விடயங்களோடு தொடர்புடையவர்களைப் பெயரிடுக.
A. அனுராதபுரத்தில் முதன்முதலில் நெற்களஞ்சியம் வடிவில் தாதுகோபுரத்தைக் கட்டிய மன்னன்.
B. நல்லூர் கந்தசாமி கோயிலைக் கட்டுவித்தவன்.
C. கி.பி. 1638 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தத்தை மேற்கொண்ட மலையக மன்னன்.
D. "பேராதெனிய பெலபத" என்ற பெயரால் புதிதாக அரச வம்சத்தினைத் தோற்றுவித்தவன்.


ii) கீழே தரப்பட்டுள்ள கலைப்படைப்புகள் யாவை எனப் பெயரிடுக.




A. ....................................



B. ....................................



C. ....................................



D. ....................................

iii) ABCD எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறையாக எழுதுக.
A. கி.பி 1344 இல் இலங்கைக்கு விஜயம் செய்த அராபிய நாடுகாண் பயணி. ....................................................

B. மன்னார் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கத்தோலிக்க வணக்கஸ்தலம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
....................................................

C. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் காலத்தில் மலைநாட்டுப் பிரதேசத்தில் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பௌத்த பிக்கு யார்?

.................................................................

D. ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது இலங்கையின் நிரந்தர பிரதிநிதி யார்?

.................................................................

## பகுதி II

02)
i) புராதன காலத்தில் இங்கு குடியேற்றங்களை அமைத்த மக்கள் குடியேற்றங்களை அமைக்கும்போது கவனத்தில் கொண்ட மூன்று விடயங்களை எழுதுக.

ii) புராதன காலத்தில் இலங்கைக்கு வந்த ஆரியக் குழுவினர் நால்வரைப் பெயரிடுக.

iii) புராதன ஆரியக்குடியேற்றங்களில் காணப்பட்ட நிர்வாக முறைகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

iv) பண்டுகாபயனின் ஆட்சியில் ஏற்பட்ட கலாசார மாற்றங்கள் மூன்றினை விளக்குக.

03)
i) புராதன காலத்தில் இலங்கைக்கு வெளிநாட்டுத் தொடர்புகள் ஏற்பட்டமைக்கான காரணங்கள் மூன்றினை எழுதுக.

ii) அனுராதபுர காலத்தில் ஏற்பட்ட தென்னிந்திய ஆக்கிரமிப்புகள் நான்கினை எழுதுக.

iii) அனுராதபுர காலத்தில் இலங்கை தென்னிந்தியாவுடன் கொண்டிருந்த இராஜதந்திர தொடர்புகள் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக.

iv) தென்னிந்திய இராச்சியங்களின் தொடர்புகள் காரணமாக ஏற்பட்ட கலாசார மாற்றங்கள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

04)
i) பொலனறுவை இராசதானியின் வீழ்ச்சிக்குப் பின்னர் உருவான இராசதானிகளுள் முதல் மூன்றின் பெயர்களை எழுதுக.

ii) 2 ஆம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் ஏற்பட்ட கலாசார விளைவுகள் நான்கினை எழுதுக.

iii) தென்மேற்கு இராசதானிகள் காலத்திற்குக் காலம் மாற்றம் பெற்றமைக்கான காரணங்கள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

iv) கோட்டை இராசதானி காலத்தில் உயர் இலக்கியப் படைப்புகள் எழுந்தமைக்கான காரணங்கள் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக.

05)
i) போர்த்துக்கேயர் முதன் முதலில் இலங்கைக்கு வருகை தந்தபோது இங்கு காணப்பட்ட மூன்று இராச்சியங்களின் ஆட்சியாளர்களைக் குறிப்பிடுக.

ii) மதப் போதகர்களாக கோட்டை இராசதானிக்குள் நுழைந்த போர்த்துக் கேயர் கோட்டை இராச்சியத்தின் ஆட்சியாளர்களாக மாறியமைக்கு வழிவகுத்த காரணங்கள் இரண்டினைச் சுருக்கமாக எழுதுக.

iii) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றினைச் சுருக்கமாக விளங்குக.

iv) போர்த்துக்கேயர் ஆட்சியின் தாக்கங்களாக இன்று எமது சமூகத்தில் காணக்கூடிய இலட்சணங்கள் இரண்டினை விளக்குக.

06)
i) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்த முதல் பிரித்தானிய ஆளுனர்கள் மூவரை ஒழுங்கு முறையாகப் பெயரிடுக.

ii) A. கி.பி 1815 மலையக ஒப்பந்தம் என்றால் என்ன?
B. அவ்வொப்பந்தத்தின் முக்கிய விடயங்கள் மூன்றினை எழுதுக.

iii) கி.பி 1818 இல் மலையகப் பிரதேசத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிக்கான காரணங்கள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

iv) அக்கிளர்ச்சி தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் மூன்றினை விளக்குக.

## பகுதி III

07) i) மௌரியர் காலத்தில் இந்தியாவை ஆட்சிசெய்த மூன்று ஆட்சியாளர்களைப் பெயரிடுக.

ii) மௌரிய ஆட்சியாளர்கள் பௌத்தமத வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைகள் நான்கினை எழுதுக.

iii) மௌரிய கால கலைகள் கட்டிடங்கள் என்பவற்றில் காணக்கூடிய விசேட இலட்சணங்கள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக.

iv) மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினை விளக்குக.

08) i) மத்தியகால ஐரோப்பாவில் சமய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள் மூவரைப் பெயரிடுக.

ii) ஐரோப்பாவின் சமய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்த காரணங்கள் நான்கினை எழுதுக.

iii) சமய மறுமலர்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

iv) சமய மறுமலர்ச்சியின் பின்னர் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினை விளக்குக.

09) i) பிரான்சியப் புரட்சிக்கு வழிவகுக்கும் வகையிலான எண்ணங்களை உருவாக்கியவர்கள் மூவரைப் பெயரிடுக.

ii) பிரான்சியப் புரட்சிக்கு முன்னர் அச்சமூகத்தில் காணக்கூடியதாயிருந்த நான்கு இலட்சணங்களை எழுதுக.

iii) பிரான்சியப் புரட்சிக்கு காரணமாய் அமைந்த அடிப்படை அம்சங்கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

iv) மேற்கூறிய புரட்சிக்குப் பின்னர் கிடைத்த அடிப்படை உரிமைகள் பற்றிய மூன்று ஒப்பந்தங்களை விளக்குக.

10)
i) முதலாம் உலக யுத்தத்தில் மத்திமமான பலம் பெற்று விளங்கிய நாடுகள் மூன்றினைப் பெயரிடுக.

ii) முதலாம் உலக யுத்தத்தின்போது ABCD எனத் தரப்பட்டுள்ள நாடுகளின் ஆட்சியாளர்களின் பெயர்களைத் தருக.
A. ஐக்கிய அமெரிக்கக் குடியரசு
B. பெரிய பிரித்தானியா
C. ஜேர்மணி
D. இத்தாலி

iii) முதலாம் உலக யுத்தத்திற்கு வழிவகுத்த காரணங்கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

iv) முதலாம் உலக யுத்தத்தின், விளைவுகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

**இவ் வினாத்தாளுக்கான விடைகள் கல்விமுரசில் எதிர்வரும் சனிக்கிழமை (22.09.2012) வெளிவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

## அறிந்துகொள்ளுங்கள்

**சீனப் பெருஞ்சுவரின் நீளம்**

- சீனாவின் வடக்கு எல்லையைப் பாதுகாக்கும் வகையில் சீன மன்னர்களால் கி.பி. 475 ஆம் ஆண்டு தொடக்கம் 1644 ஆம் ஆண்டு வரை சீனப் பெருஞ்சுவர் கட்டப்பட்டுள்ளது.
- ஆரம்பத்தில் மின்ஸ் அரச பரம்பரைக் காலத்தில் (1368 - 1644) கட்டப்பட்ட சீனச் சுவர் மாத்திரமே கணக்கில் எடுக்கப்பட்டதாயினும் 2007 முதல் இப் பரம்பரைக்கு முன் கட்டப்பட்ட அளவுகளும் கவனத்தில் எடுக்கப்பட்டன.
- சீன அரசின் புதிய அளவையின்படி சீனப் பெருஞ்சுவர் 21.168.18 கி.மீ (13170.6956 மைல்) நீளமானதாகும்.
- மனிதனால் அமைக்கப்பட்ட மிகப்பெரிய கட்டுமானமாக பதிவாகியுள்ள சீனப் பெருஞ்சுவர் 1987 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரிய சொத்தாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

# மத்திய அமைச்சரவையில் விரைவில் வருகிறது மாற்றம்

(புதுடில்லி)

மத்திய அமைச்சரவை விரைவில் மாற்றியமைக்கப்படும் என்றும், காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் முதல்வர்கள் மாறலாம் என்றும் கூறப்படுகிறது.

மத்திய அமைச்சரவை மாற்றம் விரைவில் நடைபெறவுள்ளது. உள்துறை, நிதி, பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாற்றப்பட மாட்டார்கள் என்றும், பிற துறை அமைச்சர்களின் துறைகள் மாற்றப்படும் என்றும் கூறப்படுகிறது.

இது தவிர ஒன்றுக்கு மேற்பட்ட துறைகள் வைத்திருக்கும் அமைச்சர்களிடம் அவை திரும்பப் பெறப்படும் என்று தெரிகிறது. அமைச்சர்கள் வீரப்ப மொய்லி மற்றும் வயலார் ரவி ஆகியோர் கூடுதல் துறைகளை கவனித்து வருகின்றனர். சுஷில் குமார் ஷிண்டே உள்துறை அமைச்சரானதால் அவரிடம் இருந்த மின்துறை மொய்லிக்கு கொடுக்கப்பட்டது. மேலும் விலாஸ்ராவ் தேஷ்முக் மரணத்திற்கு பிறகு அவரிடம் இருந்த அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை வயலார் ரவியிடம் கொடுக்கப்பட்டது.

ஆ.ராசா இராஜினாமா செய்த பிறகு தொலைத்தொடர்புத் துறை கபில் சிபலிடம் உள்ளது. வரும் 2014ஆம் ஆண்டு லோக்சபா தேர்தல் வேலையை கவனிக்க சிலர் கட்சிப் பணிக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று கூறப்படுகிறது.


தி.மு.க. அமைச்சர்கள் ஆ.ராசா மற்றும் தயாநிதி மாறன் ஆகியோர் பதவி விலகியதால் இரண்டு வெற்றிடங்கள் உள்ளன. மேற்கு வங்கம் சென்றிருக்கும் ஜனாதிபதி பிரணாப் டில்லி திரும்பிய பிறகு அமைச்சரவையில் மாற்றம் ஏற்படும் என்று கூறப்படுகிறது .

அமைச்சரவை மாற்றம் தவிர்த்து ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் முதல்வர் மாற்றப்படலாம் என்று பேச்சு அடிபடுகிறது.

அவ்வாறு மாற்றப்படும் முதல்வர்களை மத்திய அரசில் அல்லது காங்கிரஸ் தலைமையகத்தில் பணியமர்த்த கட்சி மேலிடம் யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இதேவேளை மத்திய அமைச்சரவையில் இடம்பெறவுள்ள மாற்றத்தில் தி.மு.க. அமைச்சுப் பொறுப்பெதனையும் ஏற்காது என கருணாநிதி தெரிவித்துள்ளார்.

# ஊழலுக்கு எதிரான கார்ட்டூன் தொடரும்




(கான்பூர்)

தேசிய சின்னத்தை அவமதிப்பது போன்ற கார்ட்டூன் வரைந்ததாக ஆசீம் திரிவேதி (வயது - 26) கடந்த வாரம் மும்பை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் தன்னுடைய சொந்தஊரான கான்பூர் அருகேயுள்ள அன்னாவ் மாவட்டத்திற்கு சென்றார். அங்கு அவரை அவரது பெற்றோர்கள் மற்றும் ஏராளமான கிராம மக்கள் கூடி நின்று வரவேற்றனர். அப்போது பேசிய ஆசிம், கைதுக்கு நான் பயப்படமாட்டேன். ஊழலுக்கு எதிராக தொடர்ந்து என்னுடைய கார்ட்டூன்கள் வெளியாகும். மேலும் தனது கார்ட்டூன் மக்களிடத்திலும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது என்று கூறினார்.

# அமெரிக்க ஜனாதிபதி மன்னிப்புக் கோரவேண்டும்



(சென்னை)

இஸ்லாமியர்களுக்கு எதிரான திரைப்படம் வெளியானதற்கு அமெரிக்க ஜனாதிபதி மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் ராமதூஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில், அமெரிக்காவைச் சேர்ந்த திரைப்பட நிறுவனம் தயாரித்த இன்னோசன்ஸ் ஒப் முஸ்லிம்ஸ் என்ற திரைப்படம் நபிகள் நாயகத் தை இழிவுபடுத்தும் வகையில் அமைந்திருப்பதற்கு நாடுமுழுவதும் உள்ள இஸ்லாமியர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இப்படத்தை அமெரிக்க அரசு அனுமதித்திருக்கவே கூடாது. அதைவிடுத்து, திரைப்படத் தயாரிப்பாளரின் தனிமனித சுதந்திரத்தில் தலையிட முடியாது என்று அமெரிக்க அரசு கூறியிருப்பது இஸ்லாமியர்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் செயலாகும். இதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மன்னிப்புக் கேட்பதுடன், திரைப்படத்துக்கு உலகம் முழுவதும் தடை விதிக்க வேண்டும் என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

# இந்தியாவில் பல்கலைக்கழகங்கள் உலகத்தரம்வாய்ந்ததாக இல்லை

## ஜனாதிபதி பிரணாப் கவலை



உலகின் முன்னணி கல்வி நிறுவனங்கள் தரவரிசைப் பட்டியலில் இந்தியப் பல்கலைக்கழகங்கள் ஒன் றுகூட முதல் இருநூறு இடங்களுக்குள் வரவில்லை என்பது கவலையளிக்கிறது என இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

உலகத் தரம் கொண்ட கல்வி நிறுவனங்களாக மலர்வதற்கு இந்தியாவின் முன்னணி உயர்கல்வி நிறுவனங்கள் கூட்டாக சேர்ந்து முயற்சிகள் எடுக்க வேண்டும் என இந்திய தொழில்நுட்ப மையங்களில் ஒன்றான கரக்பூர் ஐ.ஐ.டி.யில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில்குடியரசுத் தலைவர் உரையாற்றினார்.

கரக்பூர் ஐ.ஐ.டி. தொடங்கப்பட்டு அறுபது ஆண்டுகள் பூர்த்தியாவதைக் கொண்டாடும் நோக்கில் நடந்த வைரவிழா நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் பங்கேற்றபோது இதனைத் தெரிவித்துள்ளார்.

மாணவர்களிடையே அறிவியல் தேடலையும் ஆராய்ச்சி மனோநிலையையும் ஊக்குவித்து வளர்க்க வேண்டிய உடனடித் தேவை இந்தியாவுக்கு உள்ளது என்று முகர்ஜி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தியாவின் உயர்க்ல்வி நிறுவனங்கள் உலகத் தரம் வாய்ந்தவையாக இல்லாதிருப்பதன் காரணங்கள் பற்றி இந்திராகாந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக்க்ழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வி.சி.குழந்தைசாமி தமிழோசையிடம் கருத்து வெளியிட்டார்.

கல்வி புகட்டும் அதேநேரத்தில் ஆராய்ச்சிகள் செய்து அறிவுப் பெருக்கத்துக்கு பங்காற்ற வேண்டிய இடங்களாக உயர்கல்வி நிறுவனங்கள் இருக்க வேண்டும். ஆனால் இந்தியாவில் அந்த நிலை இல்லை என்று குழந்தைசாமி கூறினார்.

இந்தியாவில் பெரும்பான்மையான உயர்கல்வி நிறுவனங்களில் பாடம் புகட்ட வேண்டியது ஆசிரியர்களுக்கு கடமையாக்கப் பட்டிருக்கிறதே ஒழிய அவர்கள் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதை அனுமதிப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் கல்விக் கட்டமைப்பில் இடமில்லை என்று அவர் கவலைகொண்டார்.


இந்த நிலை மாறினால்தான், உலகத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களை இந்தியாவால் உருவாக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தியச் செய்திகள்




தந்தை பெரியாரின் 134 ஆவது பிறந்தநாளான நேற்று சென்னை மெரினா கடற்கரையில் ஆயிரம் பேர் பெரியார் வேடமிட்டு பங்கேற்ற பேரணியைக் காணலாம்.

# குழந்தைகள் சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் தனியான அறை



(புதுடில்லி)

பல வழக்குகளில் குழந்தைகள்தான் முக்கிய சாட்சிகளாக உள்ளனர். அவர்கள் வாக்குமூலம் அளிக்கும் வகையில் நாட்டிலேயே முதல் முறையாக, கர்கர்டோ. நீதிமன்ற வளாகத்தில் தனி அறை திறக்கப்பட்டுள்ளது. பாலியல் பலாத்கார வழக்குகள், குடும்ப வன்முறைகள், தாய், தந்தை கொலைகள் உட்பட பல சம்பவங்களில் குழந்தைகள்தான் முக்கிய சாட்சிகளாக இருக்கின்றனர். ஆனால், இவர்கள், சுதந்திரமாக, பயப்படாமல் வாக்குமூலம் அளிக்க நீதிமன்றங்களில் தனி இடம் ஏற்பாடு செய்யப்படாமல் இருந்தது. இந்தக் குறையைப் போக்கும் வகையில கர்கர்டோமா நீதிமன்ற வளாகத்தில் குழந்தைகள் சாட்சியமளிக்க தனி அறை திறக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதியஅறை, நீதிமன்றத்தில் 6ஆவது மாடியில் திறக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் எப்போதுமே பரபரப்பு காணப்படும். இந்தச் சூழ்நிலையில் குழந்தைகள் சுதந்திரமாக வாக்குமூலம் அளிக்க திணறுகின்றனர். இதனால், அவர்களுக்கு ஏற்றமாதிரி சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கில் இந்த அறை திறக்கப்பட்டுள்ளது. இந்த அறை, பார்ப்பதற்கு குழந்தைகள் விளையாடும் அறையைப் போலவே உள்ளது. இங்கு பொம்மைகள், புத்தகங்கள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன. சிறு கன்டீனும் உள்ளது. மேலும், இந்த அறைக்கு செல்ல தனி வழியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நீதிபதிகள் மட்டுமே பயன்படுத்தப்படும் லிப்ட்களில் குழந்தைகள் செல்லவும் அனுமதிக்கப்படுவர்.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பிறந்த ஆண்டு : ..........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# அமெரிக்க தூதரகத்துக்கு இரண்டு நாள் விடுமுறை

(சென்னை)

பாதுகாப்புக் கருதி சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு இரண்டு நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கத் தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க தூதரகத்தில் நேற்றும், இன்றும் நடைபெற இருந்த விசா பெறுவதற்கான நேர்காணலும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. நேற்றும், இன்றும் விசா நேர்காணலுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் இரத்துச் செய்யப்பட்டதை அடுத்து, புதிய நேர்காணலுக்கான நேரத்தை அமெரிக்க தூதரகத்தின் இணையத்தளத்தில் பொதுமக்கள் பார்த்து அறிந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரான் மீதான தாக்குதல் எந்நேரமும் நடத்தப்படும்

## – அமெரிக்கா தெரிவிப்பு



(வோஷிங்டன்)

ஈரான் அணுக்குண்டுகள் பெறுவதை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அமெரிக்கா எடுக்கும் என ஐ.நா அமைப்பிற்கான அமெரிக்காவின் மூத்த தூதரான சூசன் ரைஸ் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், ஈரான் அணு ஆயுதங்கள் பெறுவதை அமெரிக்கா அனுமதிக்காது. இவ்விடயத்தில் ஜனாதிபதி பராக் ஒபாமா மிகத் தெள்ளத் தெளிவான முடிவில் உள்ளார்.

அவ்வாறு நடப்பதை தடுக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் எடுப்போம். இராணுவ நடவடிக்கை உட்பட அனைத்து முடிவுகளும் அந்நாட்டிற்கு எதிராக தயாராக உள்ளன.

இது ஒரு நசுக்கும் கொள்கையாக இருக்கவில்லை. ஈரான் அணு ஆயுதங்களைப் பெருக்கும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது அமெரிக்காவின் ஒரு கொள்கையாக உள்ளது.

இதை ஜனாதிபதி பலமுறை வலியுறுத்தியும் சொல்லி வந்தும் இருக்கிறார். இதுதான் இறுதி முடிவு. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு இதையே அவர்களுக்கான 'ரெட் லைன்' என்றும் கூறிவருகிறார்.

இது குறித்து இஸ்ரேல் நாட்டு பாதுகாப்பு, புலனாய்வு மற்றும் கொள்கை அதிகாரிகள் அனைவருடனும் தொடர்ந்து அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. ஈரான்மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளுக்கு எதிராக பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகிறது.

ஈரான் அணு ஆயுதங்களைப் பெருக்கும் நடவடிக்கைகளை கைவிடவில்லை என்றால், அந்நாட்டின் மீது எந்நேரமும் படையெடுக்கும் ஆணையைப் பிறப்பிக்கத் தேவையான அதிகாரத்தை ஜனாதிபதி பராக் ஒபாமா பெற்றுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.



பிரிட்டனின் இளவரசர் வில்லியம்ஸ்(வலது), சொலமன் தீவின் ஆளுனர் ஜெனரல் சேர் பிரான்க் காபுவை ஹோனிராவில் சந்தித்து கலந்துரையாடுவதைக் காணலாம்.

# ஆப்கான் பொலிஸ் சூடு; 6 நேட்டோ வீரர்கள் பலி



(காபூல்)


ஆப்கானிஸ்தானில் இரு வேறு சம்பவங்களில் உள்ளூர் பொலிஸ் அதிகாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நேட்டோ படை வீரர்கள் 6 பேர் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் அதிகாலை நடந்த ஒரு தாக்குதலில் 4 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

சமீபகாலமாக பயங்கரவாதிகள் மட்டுமின்றி ஆப்கான் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களும் நேட்டோ படை வீரர்களின் மீது தாக்குதல் நிகழ்த்தி வருகின்றனர். இதுபோன்று, ஆப்கான் பாதுகாப்புப் படை வீரர்களால் இந்த ஆண்டு மட்டும் நேட்டோ படை வீரர்கள் 51 பேர் கொல்லப்பட்டதாகவும் இதில் அமெரிக்காவைச் சேர்ந்தவர்களே அதிகம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக ஆப்கான் அதிகாரிகள் கூறுகையில், பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய நூற்றுக்கும் மேற்பட்ட ஆப்கான் பாதுகாப்புப் படை வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். அதேபோல் கடந்த சனிக்கிழமை நடந்த மற்றொரு சம்பவத்தில், ஹெல்மந்த் மாகாணத்தில் உள்ளூர் பொலிஸார் துப்பாக்கியால் சுட்டதில் நேட்டோ படை வீரர்கள் 2 பேர் உயிரிழந்தனர். கொல்லப்பட்ட இருவரும் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள்.

துப்பாக்கியால் சுட்ட நபர் பொலிஸ் சீருடை அணிந்திருந்ததாகவும், பதிலடித் தாக்குதலில் அந்நபர் கொல்லப்பட்டதாகவும் நேட்டோ படையினர் தெரிவித்தனர். 2001ஆம் ஆண்டிலிருந்து ஆப்கானில் உள்ள பிரிட்டன் படைவீரர்கள்மீது நடந்ததாக்குதலில் இதுவரை சுமார் 430 பேர் கொல்லப்பட்டனர். ஆப்கானில் இப்போது, சுமார் 9,500 பிரிட்டன் வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# சல்மான் ருஷ்டியின் தலைக்கு அதிகரித்தது சன்மானம்



(தெஹ்ரான்)

சர்ச்சைக்குரிய ஆங்கில எழுத்தாளர் சல்மான் ருஷ்டியின் தலைக்கு, ஈரான் முஸ்லிம் அமைப்பு, கூடுதலாக 5 இலட்சம் டொலர் சன்மானம் அறிவித்துள்ளது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சல்மான் ருஷ்டி எழுதிய, சாத்தானின் வேதங்கள் என்ற புத்தகத்தில் முஸ்லிம்களைப் பற்றி அவதூறு செய்திகள் இடம்பெற்றிருந்ததாக புகார் கூறப்பட்டது.

இதற்காக, ஈரான் முஸ்லிம் மதத் தலைவர் அயதுல்லா கொமெனி, ருஷ்டிக்கு மரண தண்டனை அறிவித்திருந்தார். இதன் காரணமாக, ருஷ்டி, பிரிட்டனில் பல ஆண்டுகள் தலைமறைவாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரானின் கொர்தாத் பவுண்டேஷன் என்ற அமைப்பு, சல்மான் ருஷ்டி தலைக்கு, அப்போது 3.3 மில்லியன் டொலர் சன்மானம் அறிவித்திருந்தது. தற்போது, முஸ்லிம்களுக்கு எதிராக வெளியான சர்ச்சைக்குரிய அமெரிக்கப் படம், உலகம் முழுவதும் கலவரத்தைக் கிளப்பி உள்ளது.

எனவே, கொர்தாத் அமைப்பு, ருஷ்டியின் தலைக்கு தற்போது கூடுதலாக சன்மானம் அறிவித்துள்ளது. ருஷ்டியை முன்பே கொன்றிருந்தால், இஸ்லாமை அவமதிக்கும் இதுபோன்ற செயல்கள் நடந்திருக்காது. அவரைக் கொல்லாவிடில், இதுபோன்ற முஸ்லிம் அவமதிப்புச் சம்பவங்கள் நடப்பது முற்றுப் பெறாது எனக் கூறி, அவரது தலைக்கு கூடுதலாக, 5 இலட்சம் டொலர் சன்மானம் அறிவித்துள்ளது.

உலகச் செய்திகள்

# கொல்லப்பட்ட அதிகாரிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி அஞ்சலி



(வோஷிங்டன்)

லிபியாவில் உயிரிழந்த தமது நாட்டு அதிகாரிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அஞ்சலி செலுத்தியுள்ளார்.

பென்ஹாசி நகரில் மதத்தை இழிவுபடுத்தும் திரைப்படமொன்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட தாக்குதலில் லிபியத் தூதுவர் உள்ளிட்ட நான்கு அமெரிக்கர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் அமெரிக்க உப ஜானாதிபதி ஜோ பைடன் மற்றும் ஹிலாரி கிளிண்டன் ஆகியோரும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க இராஜதந்திரிகளைப் பாதுகாக்க ஏனைய நாடுகள் கட்டாயம் உதவி புரிய வேண்டுமெனவும் ஒபாமா குறிப்பிட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த திரைப்படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்லாமிய நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுவதுடன், அமெரிக்கக் கொடிகளும் எரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க தூதரகங்கள் மீது தாக்குதல்கள் தொடரும்

## – அல்கொய்தா எச்சரிக்கை

அரபு நாடுகளிலும், மேற்கத்திய நாடுகளிலும், உலகின் பிற நாடுகளிலும் உள்ள அமெரிக்க தூதரங்களைத் தாக்குவோம். இதை இஸ்லாமியர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செய்ய வேண்டும் என்று அல் கொய்தா அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இஸ்ரேலிய அமெரிக்கர் ஒருவர் எடுத்த படத்தால் இன்று உலகம் முழுவதும் இஸ்லாமியர்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பையும் சம்பாதித்துள்ளது அமெரிக்கா. நபிகள் நாயகத்தையும், இஸ்லாமையும் கடுமையாக விமர்சித்து எடுக்கப்பட்ட அந்தப் படத்தால் உலக நாடுகள் முழுவதும் அமெரிக்காவுக்கு எதிராகப் போராட்டங்கள் வெடிததுள்ளன. அமெரிக்கத் தூதரகங்கள் தாக்கப்பட்டு வருகின்றன. லிபியாவில் அமெரிக்கத் தூதர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், தாக்குதல் தொடரும் என்று அல் கொய்தா அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பின் அரபுப் பிரிவு விடுத்துள்ள எச்சரிக்கையில், உலகம் முழுவதும் உள்ள அமெரிக்கத் தூதரகங்களைத் தாக்குவோம். ஒரு தூதரகத்தையும் விட மாட்டோம். உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் இதைச் செய்யவேண்டும். செய்வார்கள் என்று அது எச்சரித்துள்ளது.



இதையடுத்து உலக நாடுகளில் உள்ள தனது தூதரகங்களின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு சம்பந்தப்பட்ட நாடுகளை அமெரிக்க அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கிடையே முன்னெச்சரிக்கையாக சூடான், துனிஷியா நாடுகளில் உள்ள தனது தூதரகங்களில் பணியாற்றி வரும் முக்கியத்துவம் உள்ள ஊழியர்களை அமெரிக்கா திரும்புமாறு உத்தரவிட்டுள்ளது அமெரிக்க அரசு.

# ஆங் சான் சூகி அமெரிக்கா பயணம்

(ரங்கூன்)

மியன்மார் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடிவரும் ஆங் சான் சூகி நேற்றைய தினம் அமெரிக்காவிற்கு பயணமானார்

மியன்மாரில் (பர்மா) இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த ஆட்சிக்கு எதிராக ஜனநாயகம் வேண்டி போராடி வரும் ஆங் சான் சூகி பல வருடங்களாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். தற்போது அங்கு அரசியல் மற்றும் சமுதாய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு மாற்றம் நடந்து வருகின்றது. இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த நாடர்ளுமன்ற தேர்தலில் ஆங் சன் சுகி வெற்றி பெற்றார்.

கடந்த 20 வருடங்களில் இப்போதுதான் அவர் முதல் முறையாக வெளிநாட்டு பயணம் மேற்கொள்கிறார். 18 நாள் சுற்றுப்பயணமாக அமெரிக்கா சென்றுள்ள அவருக்கு காங்கிரஸ் மெடல் ஒப் ஹானர் என்ற அந்நாட்டின் உயரிய விருது உட்பட பல விருதுகள் வழங்கப்பட உள்ளன. பல்வேறு மியன்மார் மக்கள் குழுக்களுடன் செல்லும் அவர், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவையும் சந்திக்கிறார்.

# சாதனை படைக்கும் மாணவர் சமூகம் எம் மத்தியில் உருவாக வேண்டும்





(யாழ்ப்பாணம்)

அனைத்துத் துறையிலும் சாதனைமிக்க மாணவர் சமூகமாக உருவாக வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய நூற்றாண்டு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் வித்தியாலய கலையரங்கில் பாடசாலையின் அதிபர் சிறி நடராசா தலைமையில் நடைபெற்ற போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், கடந்த கால அனுபவங்களைக் கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தினைக் கருத்திற் கொண்டு அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவசக் கல்வியை தமது ஒவ்வொரு பிள்ளைகளும் பெறுவதை உறுதிசெய்து கொள்வதுடன், கல்வியின்மூலமே வளமான ஒரு சமுதாயத்தினைக் கட்டியெழுப்ப முடியுமெனவும், ஒரு கிராமத்தின் வளர்ச்சியென்பது கல்வியின் அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளதுடன், தென்பகுதியின் சுதந்திரம் தங்கமென்றால் வட பகுதியில் ஒருபோதும் தகரமாக இருக்க முடியாது. இதையே எமது தலைவர் அடிக்கடி சொல்லி வருவதுடன், எமது தமிழ் பேசும் மக்கள் இதுவரைபட்ட அனுபவங்களை விளங்கிக் கொண்டு நடைமுறைசாத்தியமான வழிமுறையில் எதிர்வரும் காலத்தில் பயணிக்க வேண்டும். அப்போது தான் எமது பிள்ளைகளுக்கு, எதிர்கால சந்ததியினருக்கு ஓர் வளமான எதிர்காலத்தை பெற்றுக் கொள்ள முடியுமெனத் தெரிவித்ததோடு, நாம் அரசாங்கத்தோடு பங்காளிக் கட்சியாக இருப்பதால் பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை எம் மக்களுக்கு ஆற்றிவருகின்றோம்.

இப்பாடசாலையின் மைதானத்தை திருத்துவதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதாகவும் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேலதிக கல்விப் பணிப்பாளர் உதயகுமார், பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் எஸ். சிவலிங்கராசா, வடமராட்சி பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். புஸ்பலிங்கம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சர்வானந்தம், இலங்கை வங்கி முகாமையாளர் சி.சிறிகாந்தா, ஓய்வுபெற்ற உயர் கல்விப் பணிப்பாளர் இ.சிவப்பிரகாசம், உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.சிறிபதி, யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.யோகதுரை, போருட் நிறுவன கணக்காளர் முருகதாஸ், ஆறுதல் நிறுவன தவிசாளர் டிவகலாலா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# நடமாடும் மருத்துவ முகாம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான பொலிஸ் மருத்துவ முகாம் நேற்றுக் காலை 9.00 மணியளவில் நெடுந்தீவு பற்றிமாத ஆலயத்தில் நடைபெற்றது.

யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் அனுசரணையுடன் நெடுந்தீவுப் பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி சுனில் ராஜபக்ஷ, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி சோமதிலக, பாரத், சிசிர, விஜயபால, குணதிலக, இர்ஷான் ஆகியோர் இந் நிகழ்வினை வழி நடத்தினர். மேலும் இந் நிகழ்வில் நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பெரும் தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வீட்டுத் தோட்டப் போட்டி விரும்பினால் விண்ணப்பிக்கலாம்

(நெல்லியடி)

குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியத்தின் கீழ் நிர்வாகத்திற்கான விவசாயப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புகிறவர்கள் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் அல்லது முல்லை மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 021 2290006 என்ற தொலைபேசி மூலமாகவோ எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கே.யோகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் கிராமம், பாடசாலை, வீட்டுத்தோட்டம், அலுவலகத் தோட்டம், அலுவலக விடுதித் தோட்டம் என 5 பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

இதில் ஒவ்வொரு வகையான வீட்டுத்தோட்ட விவசாயப் போதனாசிரியர் ரீதியில் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு முதல் இரண்டு இடங்களைப் பெறும் போட்டியாளர்கள் மாவட்டப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

வெற்றியாளர்களின் தெரிவின்போது திட்டமிட்ட பயிர்ச் செய்கை, மண் பயன்பாடு, சேதனைப் பசளைப் பாவனை, இயற்கை முறை பீடைக்கட்டுப்பாடு, போசனை, உணவு உற்பத்தி, ஒருங்கிணைந்த பயிர், விலங்கு வேளாண்மை போன்ற முக்கிய விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

மாவட்ட மட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என அவர் அறிவித்துள்ளார். (12)

## புதிய முதலமைச்சர்...

இது முஸ்லிம்களின் முறை என்பதைச் சுட்டிக்காட்டியும், முஸ்லிம் தரப்பிலேயே இம்முறை முதலமைச்சர் நியமிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவிடம் முன்வைக்கப்பட்டது.

ஏக காலத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட அந்தக் கட்சித் தரப்புக்களிலிருந்து முன்வைக்கப்பட்டது.

இதனால், முஸ்லிம்கள் தரப்பையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் திருப்திப்ப டுத்தக்கூடிய வகையில் ஒருவரை முதலமைச்சராக நியமிக்கவேண்டிய நிலை உயர்மட்டக் குழுவினருக்கு ஏற்பட்டது.

இம்முறை தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் 7 பேரும், அத்தா வுல்லா தலைமையிலான தேசிய முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் இருவரும், றிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைமையில் மூவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் வெற்றியீட்டியுள்ளனர்.

இவர்களில், முஸ்லிம் கட்சிகளையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் திருப்திப்படுத்தக்கூடிய ஒரு தெரிவாக, நஜீப் அப்துல் மஜீட் இருப்பதால், அவரையே கிழக்கு மாகாணசபை முதலமைச்சராக நியமிப்பது என்று இறுதி முடிவு எடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர சுக்கு இரண்டு மாகாண அமைச்சுப் பதவிகளும், பிள்ளையான் தரப்புக்கு ஒரு அமைச்சுப் பதவியும், றிசாட் பதியுதீன் மற்றும் அத்தாவுல்லா தரப்புக்கு தலா ஒவ்வொரு அமைச்சுப் பதவிகளும் வழங்கு வது என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அறியவந்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசைப் பொறுத்தவரையில், கிழக்கு மாகாண அமைச்சுப் பதவிகளைவிட, மத்திய அமைச்சுப் பதவிகள் குறித்தே அது அக்கறை காட்டுவதாகவும், மத்தியில் ஏற்கனவே அதற்கு இருக்கும் 3 அமைச்சுப் பதவிகளுக்கு மேலதிகமாக மேலும் ஒரு அமைச்சுப் பதவியை அது பேரம் பேசலில் கோரியிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு, கிழக்கு மாகாண சபையில் நஜீப் அப்துல் மஜீத்தை முதலமைச்சராகக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடனான கூட்டாட்சிக்கு அரசாங்கத் தரப்புக்கு இணக்கம் தெரிவித்துவிட்ட ரவூப் ஹக்கீம், இதுபற்றி வெளிப்படையாக எதுவும் தெரிவிக்காமல் வெறுமனே சம்பிரதாயத்துக்காகத் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார் என்றும் சொல்லப்படுகிறது. (முன்னர் வந்த செய்தி 06ஆம் பக்கத்தில்)

## கஞ்சா...

இவர் நீண்ட காலமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். நீர்கொழும்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காமினி அல்லவவின் ஆலோசனையின்படி இலஞ்ச ஒழிப்புப் பிரிவினர் சந்தேக நபரைக் கைது செய்ததுடன் கஞ்சா போதைப் பொருளையும் கைப்பற்றியுள்ளனர்.

## யாழில்.ஐ.நா...

மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் மற்றும் வடமாகாண அமைச்சரின் செயலாளர்கள், உயரதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மீள்குடியேற்றம் நடைபெறுகின்ற இடங்கள், செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடல் ஒரு மணி நேரம் நடைபெற்றது. இக்கலந்துரையாடலைத் தொடர்ந்து அங்கிருந்து குழுவினர் அரியாலை நாவலடியில் உள்ள இந்திய மீள் குடியேற்றத் திட்டத்தையும் பார்வையிட்டனர். அங்குள்ள மக்களின் குறைகளையும், தேவைகளையும் யுத்த காலத்தில் ஏற்பட்ட நிலைமைகள், நெருக்கடிகள் என மக்களின் குறைகளையும் நிறைவடைந்த வேலைத்திட்டங்களையும் கேட்டறிந்து கொண்டனர்.

12.00 மணியளவில் அரியா லையில் இருந்து புறப்பட்ட குழுவினர் மறவன்புலவு மீள்கு டியேற்றத் திட்டத்தையும் சென்று பார்வையிட்டதுடன், அங்கும் மக்களின் நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டனர். இவ் மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரங்கள் மற்றும் மின், குடிநீர்த் திட்டங்கள், சுகாதார மற்றும் வருமானத்துக்கான தொழில் பற்றியும் மக்களுடன் கலந்துரையாடினர். இவ் மீள் குடியேறிய மக்களுடன் புகைப்படமும் எடுத்துக்கொண்ட ஆணைக்குழுவினர் மதியம் ஒரு மணியளவில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கும் விஜயம் செய்தனர்.

இவ்விஜயத்தின் போது, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெறும் 2006 ஆம் ஆண்டுக்குப் பின் காணாமல் போனோர் பற்றிய விசாரணைகளைக் கண்காணித்ததுடன் விபரங்களைக் கேட்டறிந்தும் கொண்டனர். விசாரணைகள் பற்றி அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

தொடர்ந்து யாழ்.ஆயர், பேராசிரியர். பொ.பாலசுந்தரம்பிள்ளை, பரமலிங்கம் ஆகியோர் அடங்கிய சிவில் சமூகப் பிரதிநிதிகள் குழுவினரை மாலை 2.00 மணியளவில் யாழ். ஆயரின் இல்லத்தில் ஆணைக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வடக்கில் படைக்குறைப்பு, மீள்குடியேற்றத்தின் குறைபாடுகள் மற்றும் கண்ணி வெடியகற்றல் போன்ற பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக ஆணைக்குழுவினருக்கு எடுத்துக் கூறியதாக யாழ்.ஆயர் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார்.

யாழ்.ஆயரைச் சந்தித்ததைத் தொடர்ந்து ஆணைக்குழுப் பிரதிநிதிகள்குழு மாலை கிளிநொச்சிக்குப் பயணமாகியது. இன்று கிளிநொச்சியில் தங்கியிருக்கும் ஆணைக்குழு உறுப்பினர்கள் காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபாவதி கேதீஸ்வரனுடன் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடவுள்ளனர். (இ)

## காணாமல்...

பிட்டார். தொடர்ந்து எதிர்வரும் 21ஆம் திகதி வரை இந்த முறைப்பாட்டு விசாரணை நடைபெறவுள்ளது. இன்று யாழ்ப்பாணம் -03 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள சாவகச்சேரி, கொடிகாமம், கோப்பாய்ப் பகுதி முறைப்பாட்டுக்காரர்களின் முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (பா, இ)

## தாகசாந்தி....

செலவில் பிரதேசசபை நிதியில் இருந்து இத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளதாக நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன் தெரிவித்தார்

தற்போது நெடுந்தீவில் நிலவும் கடும் வறட்சி காரண மாகப் பெருமளவு கால்நடைகள் இறக்கும் தருவாயில் உள்ளன. இக் கால்நடைகளின் தாகசாந்திக்காக இப்படியான கால்நடைக் குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டமை கால்நடைகளின் இறப்பை பெருமளவு குறைக்கும் என்பதோடு, இச் செயற்பாடானது மக்கள் மத்தியில் பெருத்த வரவேற்பை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய...

செயல்படும் தீவிரவாத அமைப்புகளுடன் தனக்கு தொடர்பிருப்பதாகவும் இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்திடம் குறித்த சீ.டி.யை கொடுக்கவே தான் இலங்கை பயணிக்க முயன்றதாகவும் பொலிஸாரிடம் சந்தேகநபர் கூறியுள்ளார்.

இதையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குப் பிறகு திருச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## முற்றவெளியில்...

தொலை பேசியைக் கைப்பற்றிய யாழ். பொலிஸார் குறித்த நபர் குறித்து விசாரித்த போதே இவரது பெயர் விபரம் தெரிய வந்திருக்கிறது.

நேற்று முற்பகல் 10.00 மணிக்குத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஸ்தலத்திற்கு விரைந்து சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலம் பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பா)

# குடியிருக்க குடிசைகள் கூட இல்லை
# கொக்கிளாய் மக்கள் நடுத்தெருவில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கொக்கிளாய் கிழக்கு, மேற்கு கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியமர்ந்துள்ள மக்களில் 35 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்படாமையால் மக்கள் பெரும் கஷ்டநிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

இக்கிராமத்தில் மக்கள் மீள்குடியேறி 2 வருடங்கள் கழிந்துள்ளன. 350 குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றன. இவர்களில் 35 பேருக்கு மட்டும் இதுவரை தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டமையால் ஏனையவர்கள் மரநிழல்களின் கீழ் சமைத்துச் சாப்பிடுவதாகவும் இரவு வேளையை கொக்கிளாய் சித்தாந்திரை மாதா ஆலயத்தில் கழிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், மழை காலம் ஆரம்பமாகவுள்ளதால் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதால் தற்காலிக வீடுகளை வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)



இராணுவ அதிகாரி ஒருவரை தாக்கியதாகக் கூறப்படும், அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக்க சில்வா நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது, அமைச்சர் மேர்வின் சில்வாவும் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 200 கோடி ரூபா ஒதுக்கீடு

சிறுபோகத்தில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக 200 கோடி ரூபாவை அரசு வழங்கியுள்ளதாக நெற் சந்தைப்படுத்தும் சபையின் தலைவர் கே.பீ.ஜயசிங்ஹ தெரிவித்துள்ளார். 15 மாவட்டங்களில் 30 நிலையங்களில் இவ்வாறு நெல் கொள்வனவு செய்யப்படும். ஏற்கனவே 10,000 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தலைவர் தெரிவித்தார்.

அரசின் கொள்வனவு வேலைத்திட்டத்தால் நாட்டின் சகல பகுதிகளிலும் ஒரு கிலோ நெல் 32 ரூபா வரை விலை அதிகரித்துள்ளதாகவும் தலைவர் கூறினார். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பகுதிகளிலும், கிழக்கில் திருகோணமலையிலும் நெல் கொள்வனவு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தமிழில் வெளிவருகின்றது சட்டப் புத்தகங்கள்

(கொழும்பு)

தமிழ் மொழியில் போதிய சட்டப் புத்தகங்கள் இல்லையென்பதால் ஏற்பட்டிருக்கும் அசௌகரியங்களைத் தீர்ப்பதற்கு அரசாங்க மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நடவடிக்கை எடுத்துள்ளார்.

குற்றவியல் மற்றும் அரசியல் ரீதியற்ற சட்டமூலம் (சிவில்) நியாயமற்ற செயற்பாடுகளுக்குரிய சட்ட நியமங்கள் தொடர்பான 1979 இலக்கம் 15 இற்கு உரிய நியமம் சாட்சிகளுக்கு கட்டளைச்சட்டம், தண்டனைச் சட்டமூலம் போன்றன தமிழ் மொழி பெயர்ப்பின்றி இருப்பதால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதி மன்றங்களில் மட்டுமன்றி நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் தமிழ் மொழியில் சட்டரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத அசௌகரியங்கள் காணப்படுவதாக அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் பொறுப்புவாய்ந்த நிறுவனம் மற்றும் சட்டவாக்க பிரிவுடன் கலந்தாலோசித்து மிக முக்கியமான சட்ட நியமங்களை தமிழில் மொழி பெயர்த்து அச்சிடுவதற்கு தேவையான செயற்பாடுகளை அமைச்சர் மேற்கொண்டுள்ளார்.

இதனை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

## மட்டக்களப்பில் கைதிகள் கூரை மீது ஏறிப் போராட்டம்

(கொழும்பு)



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் நேற்றுக் காலை முதல் கூரை மீது ஏறி போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கூரை மீதேறி ஆறு சிறைக் கைதிகள் கூரைகளின் மேல் ஏறி இந்தப் போராட்டத்தை நடத்தியுளளனர். உணவு வழங்கலில் முறையற்ற விதத்தில் சிறைச்சாலை அதிகாரிகள் நடந்துகொள்வதாகவும் சிறைக்கூடங்களில் அதிகளவான கைதிகளை அடைத்து வைப்பதாகவும் கைதிகள் தெரிவிக்கின்றனர்.

இதுவரைகாலமும் பின்பற்றப்படாமலிருந்த சில நடைமுறைகளை பின்பற்றுமாறு அனைத்துச் சிறைச்சாலைகளுக்கும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினரால் கடந்த வாரம் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மட்டக்களப்புச் சிறைச்சாலையிலுள்ள கைதிகள் அனைவரும் ஒவ்வொரு பிரிவாகச் சென்று உணவை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நேற்று முன்தினம் அறிவுறுத்தப்பட்ட நிலையில், இதற்கு மறுப்புத் தெரிவித்த ஜி பிரிவிலுள்ள சுமார் 35 பேர் தங்களது இருப்பிடங்களுக்கு கொண்டுவந்து உணவை தரவேண்டுமெனக் கூறி நேற்று முன்தினம் உணவைப் பெற்றுக் கொள்ளவில்லை.

இவர்களில் 6 பேர் நேற்றுக் காலையிலிருந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவருவதாக மட்டக்களப்பு சிறைச்சாலையைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்ற கைதிகளுடன் சிறைச்சாலை அதிகாரிகள் சுமூகமாகப் பேசியும் அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடவில்லையெனவும் அவ் அதிகாரி கூறினார். எனினும் இந்தப்போராட்டத்தில் தம்முடன் இணைந்து 41 சிறைக் கைதிகள் மேற்கொண்டு வருவதாகச் சிறைக் கைதியொருவர் தெரிவித்தார்.

### பெறுபேறுகள் விரைவில்

இவ்வருடம் நடைபெற்று முடிந்த 5 ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

### தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தினரின் ஆதரவில் இடம்பெறும் தெய்வீகப் பேருரையில் இன்று இரவு 7.30 மணிக்கு வைஷ்ணவத்தின் தொன்மை பற்றி வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## பிள்ளைகளே; எமது நண்பர்கள் இன்டர்நெற்ரோ பேஸ்புக்கோ அல்ல

### மாணவர் மத்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

பிள்ளைகளுக்கு அறிவு மட்டுமல்ல நல்ல குணமும் அவசியம். தங்கம் கூட தேய்ந்து போகும் ஆனால் நற்குணமே வாழ்வின் சிறந்த ஆபரணமாகும். இன்று சில சக்திகள் பிள்ளைகளைப் பெற்றோரிடமிருந்து பிரிக்க முயற்சிக்கின்றனர். பிள்ளைகளே; எமது நண்பர்கள் இன்டர் நெட்டோ பேஸ்புக்கோ அல்ல எமது பெற்றோரே என்பதை உணர வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நுகேகொடை சமுத்திராதேவி மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் வித்தியாலய அதிபர் திருமதி வசந்தா சரோஜனீ ரணசிங்கவின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்கால சந்ததியினரான எமது பிள்ளைகளைத் தவறான வழியில் திசைதிருப்புவோரிடமிருந்து பாதுகாப்பது பெற்றோர் உட்பட அனைவரதும் பொறுப்பாகுமென தெரிவித்த ஜனாதிபதி, பிள்ளைகள் தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் வெற்றிகளைப் பெற பெற்றோர்கள் அவர்களை ஊக்குவிக்க வேண்டியது அவசியம் எனவும் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் வந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அரியாலை, நாவலடி பிரதேசத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களுடன் உரையாடுவதைக் காணலாம். (02)

## $1\frac{1}{2}$ கிலோ தங்கத்துடன் ஒருவர் கைது

10 மில்லியன் ரூபா பெறுமதியான 1.5 கிலோ தங்க பிஸ்கட்டுக்களை இந்தியாவின் மும்பைக்கு கடத்த முற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் 43 வயதான வர்த்தகரொருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளினால் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 100,000 ரூபா அபராதம் அறவிடப்பட்டதுடன், தங்க பிஸ்கட்டுக்களும் பறிமுதல் செய்யப்பட்டன. தங்கம் கடத்துகின்ற ஒருவர் சார்பில் செயற்படும் முகவர் இவரென விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.


## தேவை

### வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

**1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை 5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு 9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம் 12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு**

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.